# ஞானச்சுடர்






ஆவணி 2020

272ஆவது மலர்

ஓம் முருகா



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய**
**பிறத்தல் அதனால் வரும்.**

**பொருள் :** எவரிடத்தும் கோபத்தை மறந்துவிடு; தீமையை உண்டாக்கும் செயல் அதனால் நேரும். (303)

**நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்**
**பகையு முளவோ பிற.**

**பொருள் :** முகமலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் கெடுத்துக்கொண்டு எழுகின்ற கோபத்தைக் காட்டிலும் ஒருவனுக்கு வேறு பகைகளும் உளவோ? (304)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

## இன்பம் எது

**கலிவிருத்தம்**



முத்தமிழ்ச் சங்கம் மல்குதல் இன்பம்
வித்தகர் சங்கம் விரவிடல் இன்பம்
பத்தர் சங்கம் பரவுதல் இன்பம்
நற்றவர் சங்கம் நாட்டிடும் இன்பமே 13

எங்கும் மாதவர் மாமறை முழக்கம்
எங்குஞ் சான்றோர் அறவுரை முழக்கம்
எங்குந் தொண்டர் சுதந்திர முழக்கெனிற்
பொங்கும் இன்பம் புவிமிசைச் சிறந்தே 14


பவநெறி கடக்கப் பிறந்திடு மின்பம்
அவநெறி துடைப்ப அணைந்திடு மின்பம்
தவநெறி தலைப்படத் தழைத்திடு மின்பஞ்
சிவநெறி பூத்திடுஞ் சச்சிதா னந்தமே 15

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 272



**2020** **பொருளடக்கம்** **ஆவணி**


| | | |
|---|---|---|
| இறைவனின் பூங்கழல்களின்... | திருமதி தி. இந்திரா | 01 - 04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 - 08 |
| வாலிதாம் பேறுதரும்... | கே.எஸ். சிவஞானராஜா | 09 - 10 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 11 - 13 |
| புனிதம் - தூய்மை - சுத்தம்... | முருகவே பரமநாதன் | 14 - 17 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 18 - 19 |
| யாழ்ப்பாணத்து ஆலய... | ச. சஜீலன் | 20 - 23 |
| வெண்ணீறணிந்ததென்ன! | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 24 - 25 |
| சைவ வாழ்வில் உணவுப்... | பொன். கோகிலன் | 26 - 30 |
| திருக்குறள் - உலகப்... | கு. சோமசுந்தரம் | 31 - 36 |
| வேல் வேல் வெற்றிவேல் | பூ.க. இராசரத்தினம் | 37 - 38 |
| சைவசித்தாந்தமே திருமந்திரம் | அ. சுப்பிரமணியம் | 39 - 42 |
| மாளையபட்சமும் பித்துரு... | ஆர்.வீ. கந்தசுவாமி | 43 - 44 |
| ஐந்தின் அருமை பெருமையை... | பு. கதிரித்தம்பி | 45 - 47 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 48 - 49 |
| சைவத்தமிழ் போற்றும்... | மூ. சிவலிங்கம் | 50 - 54 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 55 - 57 |
| ஆற்றங்கரை அமர்ந்த வேல் | செ. பாலச்சந்திரன் | - 58 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 59 - 62 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

*தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406*

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

திருமூலநாயனார் அருளிய

# ஏங்குறள்

## திருமந்திரப் பாயிரம்

### இரத்தின சுருக்கவுரை

### விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

பிரணவன் கழல் போற்றி.

### பாயிரம்

## 01. கடவுள் வாழ்த்து

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. 01

எட்டுக் குணங்களை உடையவன்.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. 02

காலனை வென்ற காலகாலன்.

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
புக்கு நின் றுன்னியான் போற்றிசெய் வேனே. 03

அழிவில்லாதவனும் வணங்குபவன்.

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
இகலிடத் தேஇருள் நீக்கிநின் றேனே. 04

இருள் அழிந்த ஒளிச்சோதியான்.

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
தவனச் சடைமுடித் தாமரை யானே. 05

வேறு மேலான தெய்வம் இல்லை.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. 06

சிவனே எல்லாம்.

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. 07

முத்தொழில் மூவர்க்கும் தலைவன்.

தீயினும் வெய்யன் புகலினுந் தண்ணியன்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. 08

தாயினும் இனியன்.

பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னத்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே. 09

யாவரும் தொழும் இறைவன்.

தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே தடவரை தண்கட லாமே. 10

விண்ணும் மண்ணும் வியாபகம்.

# சுடர் தரும் தகவல்

அரசாங்கத்தின் தீவிர முயற்சியினாலும், சுகாதாரப் பகுதியினரதும் - பொலீஸ் மற்றும் ஆயுதப்படையினரின் ஓய்வில்லாத சேவையினாலும் மிகக் குறுகிய காலத்தினுள் கொரோனா வைரஸ் தொற்றினை அதன் ஆரம்ப காலத்தில் கட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

இந்தநிலை கண்டு அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த வேளை, கடந்த சில வாரங்களாக கொரோனாத் தொற்று மீண்டும் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

வயது வேறுபாடில்லாமலும், தொழில் ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாலும், சமூக அந்தஸ்து பாராமலும் எதிர்பாராத வேளையில் - எதிர்பாராத இடங்களின் பல பகுதி களையும் மெதுமெதுவாக ஆக்கிரமித்து வருகிறது கொரோனாத் தொற்று.

தொற்றின் மீள்தாக்கம் ஆரம்பமான நாள்முதல் நாள்தோறும் வெளிவரும் அரசாங்கத் தகவல்களும் சுகாதாரப் பிரிவினரின் அறிக்கைகளும் ஓரளவு ஆறுதலைத் தந்தபோதும், நாளாக நாளாக வெளிவரும் தகவல்கள் மக்கள் நம்பிக்கையில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தி வருகிறது.

இதற்குக் காரணமில்லாமலில்லை. கொரோனாத் தொற்றாளர்களை பராபரிக்க வென புதிது புதிதாக வைத்தியசாலைகளைத் தயார்ப்படுத்தி நோயாளிகளை அனுமதித்து வருவதாக வெளிவரும் தகவல்கள், கொரோனாத் தொற்றின் புதிய வீரியத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

நோய்க்கான அறிகுறிகளை வெளிக்காட்டும் நோயின் தன்மையைப் பரிசோதித்து இனங்கண்டு - கட்டுப்படுத்துவது இலகுவானது. ஆனால் குணங் குறிகள் எதையும் வெளிக்காட்டாமல் கொரோனா நோயினைப் பரவச் செய்யும் மக்களை இனங்காண்பது மிகக் கடினம்.

பொது மக்களின் நன்மை கருதி அரசாங்கம் அன்றும் - இன்றும் விடுக்கும் சுகாதார அறிவுறுத்தல்களை படிப்படியாகக் குறைத்து கவனக்குறைவாக இருந்ததன் பலனை இன்று நாடு முழுவதுமே அனுபவிக்கிறது. சமுதாயப் பொறுப்புணர்வு இல்லாதவர்களை சட்டத்தின் மூலமாகக் கட்டுப்படுத்த அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவது வரவேற்கவேண்டியதே.

முகக் கவசம் அணிதல், தொற்றுநீக்கி மூலம் அடிக்கடி கை கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் ஆகிய இலகுவான நடைமுறைகளை நமக்காகவும் - நாம் சார்ந்துள்ள சமுதாயத்தின் நன்மைக்காகவும் நாம் கடைப்பிடித்து வந்தால் விரைவில் நாம் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட்டு மீண்டெழ முடியும்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 20. கொலு வகுப்பு

அருமறை யவன்முத லரியரன் மகபதி
யநங்க னிமையோ ரினங்க ளொருபால்
அருணனு மதியமு மனலெழு கனலியு
மணங்கி னொடுசூழ் கணங்க ளொருபால்
வருணனு நிருதியும் வழியொடு தனதனு
மகிழ்ந்து மிகவே புகழ்ந்த தொருபால்
வயிரவ ரொடுபடு நவனுரு முரகரும்
வரங்கள் பெறவே யிரங்க வொருபால்
இருடிக ளெவர்களு மினியகி னரர்களு
மிணங்கி யெதிரே வணங்க வொருபால்
இபமுக வனுமெழி லிளவல்க ளனைவரு
மியன்ற நெறியே முயன்ற தொருபால்
உருமலி குறளின் மொடுவசு முசுமுக
னுறைந்து பரிவாய் நிறைந்த தொருபால்
உடுவொடு நடவுப னிருவரு முறைமுறை
யுகந்து தொழவே மிகுந்த தொருபால்:,

அடல்விடை முகனறை கதையுற வெகுசன
மதுங்கி யருகே யொதுங்க வொருபால்
அயன்முடி திருகிய வயவனு நியமமொ
டடங்கி வலமே தொடங்க வொருபால்
மடல்புனை புகரொடு வருபதி னொருவரு
மருங்கி னுறவே நெருங்க வொருபால்
மருவொடு துவரிரு வருமிசை வல்மொடு
வசிந்து மனமே கசிந்த தொருபால்
மிடலிறை விறலரி விமலர்க நருள்சுதன்
வியந்து விரைவாய் நயந்த தொருபால்
வெயில்விரி சுடரவன் மகனொடு மதிமகன்
விளம்பு முறையே கிளம்ப வொருபால்
உடலொளி மவுனிக ளுடனுப னிடதரு
முளங்கு ளிரவே விளங்க வொருபால்
உமைதிரு மகணில மகள்கலை மகளொடு
முகந்தெ வருமே தொகுந்த தொருபால்:,

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. ஆனந்தகுமார்

(லண்டன்)

Dr. G. பவானி

(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

உரிமையாளர்

(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Dr திருமதி பத்மராணி குகானந்தன்

(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

S.S. ரஜீந்திரன்

(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

சி. சிவமூர்த்தி

(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

அ. சிவகுமார்

(யாழ்ப்பாணம்)

A. நாகரெத்தினம்

(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

இ. குமாரசாமி J.P.

(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

பொ. குமாரசாமி

(சட்டத்தரணி, நவிண்டில்)

திருமதி கௌரி சுரேசன்

(ஆசிரியர், ஆவரங்கால்)

செ. கந்தசாமி

(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

நா. சிவசிதம்பரம்
(கோணாவளைலேன், கொக்குவில்)

இராசையா தங்கவேல்
(அச்சுவேலி)

S. அருளையா
(கொழும்பு)

ச. பத்மநாதன்
(தெற்குத் தோப்பு, புத்தூர்)

க. தெய்வேந்திரம்
(பண்டத்தரிப்பு)

தே. தேவராஜேந்திரன்
(திகிரி லேன், தும்பளை)

பொ. நாகலிங்கம்
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

முத்து கணேஷ்
(மஞ்சத்தடி, இணுவில்)

K. கஜமுகன்
(இராசவீதி, நீர்வேலி)

செ. சிவலிங்கம்
(மலர் வசந்தம், இணுவில்)

N. ஜெயரட்ணராசா
(பண்ணாகம், சுழிபுரம்)

சி.து. கலைச்செல்வம்
(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

தலைவர்
(வாழ்வகம், சுண்ணாகம்)

வை.ச. பரஞ்சோதி

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

ச. ஸ்ரீவிவேகானந்தராசா

(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

சீ.சி. கந்தையா (பலாலி)

(ஆவரங்கால்)

சி. முருகதாஸ்

(சிறுப்பிட்டி தெற்கு)

T. தியாகலிங்கம்

(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)

S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்

(மானிப்பாய் தெற்கு)

இ. தயாபரன்

(கோண்டாவில்)

S. சாம்பவி

(யாழ்ப்பாணம்)

செ. தர்மலிங்கம்

(சாவகச்சேரி)

திருமதி தி. பரமேஸ்வரி

(ஆனைக்கோட்டை)

S. பொன்னம்பலம்

(சுண்ணாகம்)

ப. திருக்குமரன்

(அமுதசுரபி, கட்டுடை)

சி. நவரெத்தினம்

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

சி. சுப்பிரமணியம்

(சமரபாகு, உடுப்பிட்டி)

சிறீ மாதவன்

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

ந. பொன்னுத்துரை

(தொம்பை வீதி, உடுவில்)

ச. திவாகரன்

(உரும்பராய் மேற்கு)

க. சச்சிதானந்தன்

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

நா. மகேந்திரராசா

(பிறேம மகால், வல்வெட்டி)

சு. சிவராசா

(கொக்குவில்)

வ. சிவலிங்கம்

(குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி)

கா. அருளானந்தன்

(அராலிவீதி, சங்கானை)

பத்மநாதன் குணசுந்தரி

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்

(அச்சுவேலி)

வே. இராஜேந்திரா

(ஆவரங்கால்)

ச. மார்க்கண்டு

(ஊரெழு மேற்கு)

திருமதி கமலஹாசன் மஞ்சுளா

(வல்வெட்டி)

# இறைவனின் பூங்கழல்களின் பெருமை

– திருமதி இந்திரா திருநீலகண்டன் அவர்கள் –

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெலாம்"

*தேனை அள்ளிச் செந்தமிழில் குழைத்தெடுத்து*
*ஊனைஉருக்கும் திருவாசகம் என்னும் - ஞானக்கனியைத்*
*தந்த வாதவூரனே மாமறையின் நாயகனே*
*உந்தன் பொற்பாதம் சரணே!*

அருள் மேனி தாங்கி அவனிக்கு வந்து குருந்த மரநிழலில் மோன நிலையில் வீற்றிருந்து, மாணிக்கவாசகர், தலைமேல் இறைவன் தன் பூங்கழல்களைப் பதித்தமை யால் தன்னை மறந்து தன் நாமம்கெட்டு ஆனந்தக் கூத்தாடி அவனுக்கே ஆட்பட்டு எல்லை மீறிய அன்பினால் அவரது இதயக் கமலத்திலிருந்த மொட்டலர்ந்து மாணிக்க மணிகளாக வெளிவந்த ஞானவாசகம்தான் இத்திருவாசகம். படிப்போர், கேட்போர் அனை வரது கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீரை வரவழைக்கும் தன்மைகொண்ட இம் மணிவாச கங்கள் கற்றார் கல்லார் என இரு திறத்தாரும் விரும்பிப் போற்றிப் படித்து அதன் இனிமையை உணர்ந்து ஈசன் திருவடிகளில் நிலையான இன்பத்தைப் பெறலாம் என்று எம்மையும் அழைக்கிறார் மாணிக்கமாமணி.

மாணிக்க மாமணியே நீ திருவாய் மலர்ந்தருளிய மாமறையின் சுவையைக் கேட்ட பறவை இனங்களும் பொல்லா விலங்குகளும் கூட மெய்மறந்து நினைவிழந்து மெஞ்ஞானத் தைப் பெற விருப்பமுறுமாம். ஐந்தறிவுடைய ஜீவராசிகள் கூட ஆவலாக செவிமடுத்து மயங்குகின்றதெனின் அந்த நிலையை நானடைதல் வியப்பல்லவே! என்று வள்ளலார் மனமுருகி நிற்கின்றார். இவ் அருள் வாசகத் தின் உயர்நிலையை விளம்ப வேறும் ஆதாரம் வேண்டுமோ! சமயப்பணி செய்யத் தமிழ் நாட்டிற்கு வந்த போப் அடிகளார் இனிய தமிழில் அமைந்த திருவாசகத்தைக் கேட்டு அதன்பால் ஈர்க்கப்பட்டு தமிழின் பெருமையை உலகறியச் செய்ய முயன்றார். "இதன் இனி மையை சுவைக்க ஒரு தமிழனால் தான் சாத்தியப்படும்" என்ற கருத்தையும் வெளியிட் டார். ஆங்கிலேயன் அதுவும் அவர் சமயப் பணிக்கென்று அனுப்பப்பட்டவர் செந்தமிழில் அமைந்த திருவாசகத்துக்கு உருகினார் என் றால் இந்துக்களாகிய நாம் எங்கே நிற்கின் றோம்!

பாடல்பெற்ற தலமான கேதீஸ்வரத் தில் உறை கேதீஸ்வரநாதரை நாள்தோறும் பாடி மகிழ்வித்த திருவாசகம் சுவாமிகள் என் னும் சபாரட்ண சுவாமிகள் தன்னை நாடி வருபவர்களையும் திருவாசகத் தேனைப் பருகி அதன் என்புருக்கும் தன்மையை உணர வைத்தார் என்பதையும் அறிந்துள்ளோம்.

*இயற்கை ஒரு வேலையை முடிப்பதற்காகவே ஓர் அறிஞனைப் படைக்கிறது.*

இவ்வாறாக யாவராலும் படித்து உணரக்கூடிய தாக கல்லை மென்கனியாக்கும் தன்மையைத் தன்னுள் அடக்கி மேலான நூலாக மிளிர்கின் றது இத்திருவாசகம் என்றால் மிகையாகாது.

இறைவனின் அருட்செயல்களைப் போற்றியும் விளித்தும் இரந்தும் கசிந்தும் மணிவாசகர் ஓத அம்பலவன் தன் கைப்பட எழுதிய இத்திருவாசகம், பிற நூல்களிலும் தலையாய விளங்குகின்றது என்பது சான்றோர், தம் அனுபவமூடாகக் கண்டறிந்த உண்மை. திருவாசகத்துக்கு இணையாக வேறொரு சிறந்த நூல் எந்த மொழியிலும் இல்லை என்பது கற்றோர் பலரின் கூற்றாகும். இது தமிழராகிய எமக்குக் கிடைத்த பெருநிதி என்றால் வியப்பில்லை. இத்திருவாசகத்தின் பெருமையை அறிந்து இறைவனை நாட நாம் தமிழராகப் பிறக்க என்ன தவம் செய்தோம் என்று பெருமைப்பட வேண்டும். எனவே சிவ நெறியாகிய சைவநெறி மேன்மையடையச் செய்ய உறுதுணையாக இருப்பதில் முதன்மை பெற்றது திருமுறைகளுள் எட்டாந் திருமுறை யாக அமைந்த இத்திருவாசகமே.

கம்பவாரிதி ஜெயராஜ் கூட ஓர் சொற் பொழிவில் தன்னிடம் ஒரு மாணவன் "ஐயா நாங்கள் தமிழையும் சமயத்தையும் அறிந்து கொள்ளும் ஒரு நூல் சொல்லுங்கள் என்று, சில இலக்கியங்களையும் இதிகாசம், சிலப்பதி காரம் என்று எல்லா நூல்களையும் படித்தறிவ தென்றால் எங்களுக்கு நேரம் போதாதே" என்று கேட்டதற்கு, அவர் அளித்த பதில் "தமிழை அறிய திருக்குறளையும், சைவத்தை அறிய திருவாசகத்தையும் படித்தாலே போதும்" என் றாராம். கம்பவாரிதியின் கூற்றிலிருந்து சைவ வாழ்வு வாழ்பவர்களை (இந்துக்களை) வழிப் படுத்த திருவாசகமும், திருக்குறளும் இரு கண்கள் போன்றவை என்பதும் புலனாகின்றது.

இத் திருவாசகம்,

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!

என்று தொடங்கி, அறுநூற்று ஐம்பத் தெட்டுப் பாடல்களில் தன் உள்ளத்தே பொங்கி எழுந்த திருவாசகங்களைப் பாடி அம்மை எனக் கருளியவாறு யார் பெறுவார் அச்சோவே என்று நிறைவு பெறுகின்றது. இதன் கண் ஐம்பதிற்கு மேற்பட்ட பாடல்களில் நாயிலும் கடையனான தன்னை ஆட வல்லான் ஆட்கொண்ட விதத்தை மனங்கசிந்து பாடுகின்றார். வாநாடரும் அறி யொணாதநீ ஏனை நாடரும் தெரியொணாத நீ என்னையும் ஒரு பொருட்டாக ஆட்கொண்டு அழகுற திருவடியை என்தலைமேல் நிலை யாக வீற்றிருக்கச் செய்து, அனைத்தெலும் உள்நெக ஆனந்தத் தேனைச் சொரிய வைத் துக் கணக்கிலாத் திருக்கோலம் காட்டி என்னை நீ ஆட்கொண்ட வண்ணம் தான் என்னே? யான் என்ன பேறு பெற்றேன். "யானேயோ தவம் செய்தேன் சிவாயநம நம" எனப் பெற்றேன் என்று ஆனந்தக் கூத்தாடுகின் றார். தன் அடிகள் பாடுவித்த நாயகனை, தன்னை நாயாக உருவகித்து எழுந்த சில அடிகள்; "யாவரிலும் கடையனான நாயினேன், நாயிலாகிய குலத்திலும் கடைப்படும் என்னை, பொல்லாநாயான நீசனேனை, கல்லாமனத்துட் கடைப்பட்ட நாயேனை கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட அண்ணாமலையானை" என்றவாறு இடம்பெறுகின்றது.

இதேபோன்று தில்லைக் கூத்தனின் திருவடிகளைத் தன் தலைமேல் நட்டமையினை யும் வைத்ததையும் பல பாடல்களில் அதா வது நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட பாடல்களில்

*சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.*

பாடி அவன் பூங்கழல்களை வாழ்த்துகின்றார். வார்கழல்கள், பூங்கழல்கள், கருணைக்கழல்கள் என்று கழல்களை அணிந்த பாதத்தை வர்ணித்த அவர் ஆர்ந்த பாதம், செங்கமலப் பொற்பாதம், நளின பொற் பாதம், மலரடி, சேவடி, தேனுந்து சேவடி, கழல் சேவடி என்றும் மலர்கழல்கள் தந்து தன்னை ஆட்கொண்ட தன் தலைவனை எண்ணி உருகி நிற்கின்றார்.

இத்தகைய பெருமைவாய்ந்த திருவடித் தாமரைகளைச் சென்றடைந்து கானம் இசைத்து அவன் திருவடித் தேனைப் பருகும்படி தும்பிகளுக்கு அரசனான கோ- தும்பியிடம் கூறும் பாடல்களாக திருக்கோத்தும்பி என்ற தலைப்பில் பத்தாவது பதிகமாக அமைந்து நான்கு அடிகளில் இருபது பாடல்களை உள்ளடக்கிய இத்திருப்பதிகத்தால் கோத்தும்பியும் பெருமை பெறுகின்றது. அத்துடன் தன் நிலைமையைப் போய் தன் தலைவனிடம் கூறும்படி தூதாக தும்பியை அனுப்புவதாகவும் அமைந்துள்ளது.

"தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ"

பொன்னம்பலத்தின்கண் உறைகின்ற அம்பலவனின் தேன் சொரிகின்ற திருவடித் தாமரையை அடைந்து கீதம் பாடித் திருவடித் தேனைப் பருகுவாயாக!

"சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

வெண்மை பொருந்திய திருநீற்று மேனியானைச் சென்றடைந்து கானம் இசைப்பாயாக!

"பிறப்போடிறப்பென்னும் சித்தவிகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகத் தேவற்கே
சென்றூ தாய் கோத்தும்பீ"

மரணம் பிறப்பென்னும் இரண்டைப் பற்றிய மனக்கலக்கத்தைத் தீர்த்த மெஞ்ஞான வடிவினனைச் சென்று சேர்ந்து ரீங்காரம் செய்து தேனை நுகர்வாயாக!

"தாயுற்று வந்தென்னை கண்டு கொண்ட தன்கருணைத் தேயுற்ற செல்வற்கே
சென்றூதாய் கோத்தும்பீ"

தாயுற்று வந்து என்னை கண்டு கொண்ட அந்தச் செல்வனின் திருவடிகளைச் சென்றடைந்து கீதம் பாடித் திருவடித் தேனைப் பருகுவாயாக!

"சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ!

என்னுடைய பணிவிடைகளைப் பழிக்காமல் ஏற்றுக்கொள்ளும் தாய் போன்றவனின் பூங்கழல்களைச் சென்றடைந்து கீதம் பாடித் திருவடித்தேன் பருகிக் களிப்பாயாக!

"அனைத் தெலும் புள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

அவனைப்பற்றி எண்ணும்போதும், காணும்போதும், பேசும் போதும் எந்நேரமும் எல்லா எலும்புகளும் உள்ளே நெகிழ்ச்சியடையுமாறு ஆனந்தத் தேனைச் சிந்தும் கூத்துடையவனை சென்று சேர்ந்து அவன் மலர் பாதத்தில் ஊதுவாயாக!

என்று இவ்வாறாக திருக்கோத்தும்பியில் இறைவன் திருவடி மலர்களின் மேன்மையை எமக்கு உணர்த்துகின்றார்.

இதே போன்று,

"இனித்த பொற்பாதத்தை காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!

*துன்பத்தைப் போன்ற பயிற்சிக் கருவிகள் வேறு இல்லை.*

என்று தேவாரத்தில் பாடிய திருநாவுக்கரசு சுவாமிகளும் அவன் திவ்ய திருப்பாதத்தை தன் தலைமேல் வைத்தமையை மேற்கண்டவாறு திருத்தாண்டகத்தில் வர்ணிக்கின்றார்.

“இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூரெம்பெருமானார் நல்லவாறே!”

சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்தில்,

“இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க”

என்று காரைக்கால் அம்மையார் அவன் ஆடும் அழகினைக் கண்டு ரசித்து அவனடியின் கீழ் இருக்க வேண்டுகின்றார்.

இதேபோல் வள்ளுவப் பெருந்தகையும் தன் குறளின் கடவுள் வாழ்த்து என்ற முதல் அத்தியாயத்தில் “இறைவனின் திருவடிகளைப் பற்றியவர்களுக்கு யாண்டும் இடும்பை இல” என்று குறிப்பிட்டுள்ளார்.

“கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்”

என்று தொடங்கி ஏழு குறள்களில் அவன் திருப்பாதத்தைப் பற்றும்படி குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக நாயன்மார்கள், அருளாளர்கள், வள்ளுவப் பெருந்தகை போன்றோர் இறைவனின் திருவடிகளின் பெருமைகளை எமக்குணர்த்தி அவற்றைப் பற்றினால் “இம்மை, மறுமைப் பேறுகளைப் பெறலாம்” என்பது திண்ணம் என்று உணர்த்திப் போயிருக்கிறார்கள். எனவே அதன்படி ஒழுகி சைவ வாழ்வு வாழ்வோமாக!

“தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையின் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெல்லாம் வந்தொருக்கால் மாற்றுதியே”

(வள்ளலார்)

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக!

---

## அனைவருக்கும் ஊழியராக இருங்கள்

ஏழைகளுக்குக் கல்வியின் பெரும் பகுதியை வாய்மொழியாகவே கற்றுத் தரவேண்டும். காரணம் அவர்களுக்கு பள்ளிகள் ஏற்படுத்த உரிய காலம் இன்னும் உருவாகாமலேயே இருக்கிறது. பெண்களுக்குச் சரியான மதிப்பை அளிப்பதன் மூலமே எல்லா நாடுகளும் சிறப்பெய்தியிருக்கின்றன. எந்தச் சமுதாயம் பெண்களை மேன்மைப்படுத்தவில்லையோ அந்த நாடும் மக்களும் ஒருபோதும் உயர்வடைவதில்லை. உன்னால் உதவி செய்ய இயலாவிட்டால் வழியைவிட்டு விலகி ஒரு பக்கமாக நின்று நடப்பதைக் கவனி. உன்னால் உதவி செய்ய இயலாவிட்டால் உபத்திரவமாவது செய்யாது விலகி இருப்பாயாக. சிந்திப்பதற்கும் செயல்களில் ஈடுபடுவதற்கும் மனிதனுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும். இதுவே மனித வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையாகும். பிறருக்கு வழிகாட்டவோ, அடக்கியாளவோ எப்பொழுதும் முயலவேண்டாம். அனைவருக்கும் ஊழியராக இருங்கள். இதுவே எல்லாவற்றிலும் முக்கியமானது.

*உயர்ந்த எண்ணம் கொண்டவர்களுக்குத் தனிமை என்பதே இல்லை.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

113. இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலிபவனே.

**ப-ரை:**

வியன் மூ உலகுக்கு ஒரு தலைவர்- பெரிய மூன்று உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைவனே, மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே- நிலைபெறும் திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்கு அரசே; பொரு இலை மூ தலை வேல்- போர் செய்தற்குரிய இலை வடிவினதாகிய மூன்று நுனிகளையுடைய சூலப்படையை, வலன் ஏந்தி பொலிபவனே- வலத் திருக்கரத்திற்றாங்கி விளங்குபவனே, இருதலை கொள்ளியின் உள் எறும்பு ஒத்து- இருபக்கமும் நெருப்புப் பொருந்திய விறகின் உட்டுளையுள் அகப்பட்ட எறும்பைப் போன்று, நினைப்பிரிந்த விரிதலையேனை விடுதி கண்டாய்- நின்னைப் பிரிந்து வருந்துகின்ற மயிர் விரிந்த தலையையுடைய என்னைக் கைவிடுகின்றனையோ? கை விடாதொழிதல் வேண்டும்.

மூவுலகுக்கு ஒரு தலைவா, உத்தரகோச மங்கைக்கு அரசே, மூயிலைவேல் வலனேந்திப் பொலிபவனே, இருபக்கமும் நெருப்புப் பொருந்திய விறகின் உட்டுளையுள் அகப்பட்ட எறும் பினைப் போன்று நின்னைப் பிரிந்து வருந்துகின்ற விரிதலையேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

கொள்ளி- நெருப்புப் பற்றிய விறகு. இருதலைக் கொள்ளி- இருபக்கமும் நெருப்புப் பற்றிய விறகு. உள்ளெறும்பு- அவ்விறகின் உட்டுளையில் அகப்பட்ட எறும்பு, அவ்வெறும்பு நெருப்பு நெருங்க மிக நெருங்குவது போல, நின்னைப் பிரிந்த யான் நின்னை விட்டு அகல அகல மிக வருந்துவேனாயினேன் என்பார், "இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பொத்து நினைப்பிரிந்த விரிதலையேனை" என்றார்.

"இருதலை மின்னுகின்ற கொள்ளி மேல் எறும்பென் உள்ளம்" (நாவு 75:6)
எனத் தேவாரத்தும்,

"கொள்ளித் தலையின் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை" எனக் கந்தர் அலங்காரத்தும்,

*நேரத்திற்கு ஏற்ப பண்பை நிலைநிறுத்திக்கொள்.*

"இடைநிலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றமை" (339)

என அகநானூற்றினும் வருவனவுங் காண்க.

விரிதலை- மயிர் விரிந்த தலை அது இறைவனைப் பிரிந்த வருத்த மிகுதியால் உண்டானதாகும் வியன்- பெருமை, மூவுலகு- மேல் கீழ் நடு உலகு. மூவுலகுக்கும் என உம்மை விரிக்க. ஒரு தலைவன்- ஒப்பற்ற தலைவன்.

பொருதலை மூவிலை வேல்- போர் செய்தற்குரிய மூவிலை வேல், "பொரு சூலப்படை", "போர் கொள் சூலப்படை" (ஞான 100:6; 252:5) எனத் தேவாரத்து வருவன காண்க. மூவிலை வேல் என்றது மூவிலைச் சூலத்தினை இதனை இறைவன் ஏந்துதல்,

"மூவிலைச் சூலப் படையமர் கொள்கையி னாரும்" ஞான 205:3.
"வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழி மிழலையார்" ஞான 267:3.
"மூவிலை வேற் கையானை" நாவு 305:1.
"கொல்லும் மூவிலை வேலுடையானை" சுந் 56:3.
"இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தி போற்றி" நாவு 245:3.

எனவும், வலனேந்துதல்.

"மூவிலைச் சூலம் வலனேந்தி..... ஆரூரமர்ந்தானே" ஞான 105:1.

எனவும் தேவாரத்து வருவனவற்றால் அறியலாம்.

"மூவிலை யொருதாட் சூலமேந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே (6)

எனத் திருவொற்றியூர் ஒருபாவொருப்.:தில் வருதலால் மூவிலைச் சூலம் ஏந்துதலின் கருத்து இனிதுரைக்கப்படும். வலன்- வலம் என்பதன் போலி.

இதன்கண், இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பொத்து நினைப் பிரிந்த விரிதலையேனை விடுதி கண்டாய் என்பதனால் நின்னைப் பிரிந்து உலக வாழ்க்கையில் வருத்தப்படுகின்ற என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும். எனப் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுமாறு காண்க.

**114. பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற் றாக்கையைப் போக்கப் பெற்று**
**மெலிகின்ற வென்னை விடுதிகண் டாயளி தேர் விளரி**
**ஒலிநின்ற பூம்பொழில் உத்தர கோசமங் கைக்கரசே**
**வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்புர மாறுபட்டே.**

**ப-ரை:**

அளி தேர் விளரி ஒலி நின்ற பூ பொழில்- வண்டுகள் தேனாகிய உணவினைத் தேடுங்கால் பாடும் விளரிப் பண்ணின் ஒலி நிலை பெற்ற பூஞ்சோலையையுடைய, உத்தர கோசமங்கைக்கு அரசே- திருவுத்தரகோச மங்கையென்னும் தலத்துக்கு அரசனே, புரம் மாறுபட்டு வலிநின்ற திண்சிலையால் எரித்தாய்- முப்புரங்களையும் பகைத்து வலிநிலைபெற்ற

மேருமலையாகிய வில்லினால் அழலம்பைச் செலுத்தி எரித்தவனே, ஆக்கையைப் போக்கப் பெற்று- நின்னருளால் உடம்பினை நீக்கப்பெற்று, பொலிகின்ற நின் தாள் புகுதப் பெற்று- அதனால் விளங்குகின்ற நின் திருவடிகளை அடையப் பெற்று உய்யுமாறு, மெலிகின்ற என்னை விடுதி கண்டாய்- உய்யுமாறு வருந்துகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோசமங்கைக்கு அரசே, முப்புரங்களையும் மாறுபட்டுத் திண் சிலையால் எரித்தவனே, நின்னருளால் உடம்பினைப் போக்கப்பெற்று அதனால் நின் திருவடிகளை அடையப்பெற்று உய்யுமாறு வருந்துகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

ஆக்கையைப் போக்கப்பெற்று நின்றாள் புகுதப்பெற்று மெலிகின்ற என மாறிக் கூட்டி, ஆக்கையைப் போக்கப்பெற்று அதனால் நின் தாள் புகுதப் பெற்று உய்யுமாறு மெலிகின்ற எனச் சில சொற்கள் வருவித்துரைக்க.

அளி- வண்டு. "அளி முரல் கொங்கார் தடமலர்" திருக்கோவை 119. "தாரிடை யளிக ளார்ப்ப" (கம்ப. வரைக் காட்சி 30) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தேர்தல்- தேனாகிய உணவினைத் தேடுதல். "பூந்தேனைத் தேர்ந்து சேர் வண்டுகள்" ஞான 238:3. "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி" (குறுந் 2) என வருதலுங் காண்க. விளரி- இரங்கற் பண் "விளரி யுறுதருந் தீந்தொடை" (புறநா 260:2) என்புழி விளரி என்பதற்கு "இரங்கற் பண்ணாகிய விளரி" என அதன் உரையாசிரியர் பொருளுரைத்தவாறு காண்க. "விளரிப் பண் கண்ணினார் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்ந்து" (பு.வெ.மா. 137) என வருதலுங் காண்க. "நுளையர் விளரி நொடி தருந் தீம்பாலை" (7-48) என்னும் சிலப்பதிகாரவுரையில் "விளரி யென்றார் விளரி இரங்கினர் பாடும் பண்ணாதலால்" என அரும்பதவுரைகாரர் உரைத்தமையும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது.

வலிநின்ற திண்சிலை என்றது வலிநிலைபெற்ற திண்ணிய மேருமலை வில்லை குறிப்பினால் உணர்த்தியது. பகைவர் புரங்களை மேருவே வில்லாகக் கொண்டு எரித்தமை. "மேருவே வில்லா மேவலர் புரங்கண்மூன் றெரித்த கையனே" (7) என அருட்பத்தில் அருளியமையானும் "அம்பலவர் பகை செகுக்குங் குனிதரு திண்சிலை" என்னும் திருக்கோவை யாருக்கு (98) "அம்பலவர் பகையைச் செகுக்கும் வளைந்த திண்ணிய சிலையாகிய மேரு" என்ற பேராசிரியர் உரையானும் அறிக.

"பெரிய மேரு வரையே சிலையா மலைவுற்றார் எயின்மூன்றும்"
ஞான 3:9.

"விண்டார் புரம் வேவ மேருச் சிலையாகக் கொண்டான்"
ஞான 83:6.

"கைம்மருவு மேருவிலு..... மும்மதிலு நொடியளவிற் பொடிசெய்த முதல்வன்"
ஞான 131:4.

"அந்தர மூவெயிலு மனலாய் விழ வோரம்பினால்
மந்தரமேரு வில்லாக வளைத்தான்"
ஞான 318:3.

எனத் தேவாரத்தும், "விண் பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரின் மேருத் திண்சிலை குனிய நின்றார்" எனப் பெரியபுராணத்தும் (குங்குலிய 30) வருவன காண்க. எரித்தாய்- அழலம்பைச் செலுத்தி எரித்தாய். "மும்மதிலுங் கருமால் வரையே சிலையாப்..... அழலம் பொன்றினால் எய்த எம்மான்" நீடுவரை மேருவிலதாக நிகழ்நாக மழலம்பால் கூடலர் கண்மூவெயி லெரித்த குழகன்" (ஞான 315:7; 341-3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. இங்ஙனம் வில்லும் அம்பும் கூறப்படினும் இறைவன் சிரிப்பே முப்புரங்களை அழித்தது. இதனை,

"தச்சு விடுதலுந் தாமடி யிட்டலும்
அச்சு முரிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற"

உந்தீ 3.

என்னும் அடிகள் திருவாக்கினாலுமறியலாம்.

"எண்ணிலார் புரங்கள் மூன்று மெரியுணச் சிரிப்பர் போலும்"

நாவு 68:3.

"விண்டார் புரமூன்றும் வேவ நோக்கி நக்கானை"

நாவு 256:5.

"அடங்கார் புரிமெரிய நக்காய் போற்றி"

நாவு 270:1.

"தரியலர்கள் புரமூன்றுந் தழலால் வேவச் சிரித்தானை"

நாவு 293:10.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

புரம் எரித்தாய் என்ற விளியினால் மும்மலப் புரமாகிய உடலைப் போக்கி வீடு அருள வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள் போதருதல் காண்க.

இதன்கண், ஆக்கையைப் போக்கப் பெற்று நின்தாள் புகுதப்பெற்று மெல்கின்ற என்னை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 10.

(தொடரும்...

## வணங்கிப் பாடிட வரமருள்வாய் முருகா

எனக் கென்று நீ தனித் தெய்வம் இல்லை
எல்லோர்க்கும் நீ பெருங்கடல் தெய்வம் அப்பா
பனித் துளியாய் இருகண்ணீர் சொரியு திங்கே
பல தலை முறைகள் கண்டு ஆளும் தெய்வம்
உனக் கென உரிய ஆறுமுகம் எங்கு காண்பேன்
ஈசன் இறைகுமரா செல்வச் சந்நிதி வேலவா
மனிதப் பிறவி மீண்டும் உண்டானால்
உனை வணங்கிப் பாடிட வரமருள்வாய் முருகா!

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

# வாலிதாம் பேறுதரும் விஜயதசமி

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

மண்ணிலே வந்த பிறவியே எமக்கு வாலிதாம் இன்பமாம் என, இவ்வுலக வாழ்வினை அனுபவித்த ஞானசீலர்கள் வழங்கிய கூற்று, பொய்யானதென்று யாரும் கூறிவிடமாட்டார்கள். இங்கு எது இல்லை? இன்பமும் உண்டு. துன்பமும் உண்டு. நல்லதும் உண்டு. தீயதும் உண்டு. வறுமையும் உண்டு. வளமும் உண்டு. ஆக்கமும் உண்டு. அழிவும் உண்டு. ஆதியும் உண்டு. அந்தமும் உண்டு. இவ்வாறு இரண்டு பக்கங்கள் கொண்ட நாணயம்போல, வாழ்வும் தோல்வி வெற்றிகளினால் பின்னிப்பிணைந்துள்ளது. அந்தத் தோல்விகளிலிருந்து மீளும் வழியே விஜயதசமி காட்டுவதாகும்.

உலகத்தின் செயற்பாடுகளுக்கு ஆதாரமாக இருக்கும் சக்தியை, துர்க்கையாக, இலட்சுமியாக, சரஸ்வதியாகப் போற்றி வழிபடும் மரபு பண்டுதொட்டு இன்றுவரை காக்கப்பட்டு வருகிறது. சிவமயமான வியாபகம், சக்தியின் இயக்கத்தினால் கருணாகடாட்சம் பெறுகிறது. சக்தியின் கடாட்சம் யாவருக்கும் கிடைக்கவேண்டுமாயின், முச்சக்திகளின் பாதார விந்தங்களில் சரணபுகுந்திடல் வேண்டும்.

“மாதா பராசக்தி வையமெலாம்
நீ நிறைந்தாய்
ஆதாரம் உனையல்லால்
ஆரெமக்குப் பாரினிலே!”

எனக் கூறுகின்ற பாரதியின் வாக்கு இங்கு நோக்கத்தக்கது.

உண்மையை நேசிக்கின்ற ஒரு மனிதன் அஞ்சாத நெஞ்சுடைய வீரனாகச் சிருட்டிக்கப் படுகின்றான். அவனிடத்தே செல்வமும், கலைகளும் தானாக வந்து சேர்ந்து விடுகிறது. அவனுக்குத் துர்க்காவாலாயம் ஆட்சிப்படுத்திக்கொள்ளும்.

செல்வத்தினை நியாயபூர்வமான வழிதனில் உழைப்பவனிடத்தே வீரமும், கல்வியும் தானாக வந்து சேர்ந்து விடுகிறது. அவனுக்கு இலட்சுமி கடாட்சம் மிளிர்கின்ற இலட்சுமி வாலாயம் ஆட்சிப்படுத்திக்கொள்ளும். (சீதனத்தினால் வருகின்ற செல்வத்தை இலட்சுமி கடாட்சம் என்று கருதுவதாகப் பொருள்கொள்ளல் ஆகாது. சீதனம் ஒரு அதர்மச் சொத்து.)

ஆயகலைகளையும் ஏயவுணர்விக்கும் பாங்கினால், அன்னை சரஸ்வதி அறிவுக்குப் பாத்திரமாக விளங்குகின்றாள். மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாடுடையவர்களுக்கு சரஸ்வதி கடாட்சம் தானாக வந்து சித்திக்கின்றது. நெஞ்சிலே, நாவிலே சரஸ்வதி இருப்பதனால் இந்த உலகையே ஆண்டுகொள்ளக்கூடிய வாய்ப்பு இவர்களுக்கு ஏற்படுகிறது.

மேற்கூறிய மூன்று தேவியராம் மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய தேவியரை வழிபடுவோர்க்கு, வெற்றியைத் தரும் விஜயதசமி வாலிதம் உடைய பேறுகளை அள்ளித்தரும் "விஜய" என்பது வெற்றியாகும். துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி மூவரிடத்தும் தர்ம நெறியில் பயபக்தி கொண்டவர்களுக்கு தசமியாக விளங்கும் பத்தாம் நாள் வெற்றிகள் தாமாகவே வந்து கைகூடும். வீடுகளில் கொலுவைத்து ஒன்பது இரவுகளும் வழிபாடாற்றுபவர்களுக்கும், பாடசாலைகளில் கும்பம் வைத்து ஆராதனை செய்பவர்களுக்கும், ஆலயங்களில் ஒன்பது இரவுகள் சென்று அன்னையைத் தரிசிப்பவர்களுக்கும், பத்தாம் நாளாகிய "விஜயதசமியானது, கலையாத கல்வி, குறையாத வயது, கபடுவாராத நட்பு, குறையாத வளமை, குன்றாத இளமை, கழுபிணி இல்லாத உடல், சலியாத மனம், அன்பகலாத மனைவி, தவறாத சந்தானம், தாழாத கீர்த்தி, மாறாத வார்த்தை, தடைகள் வாராத கொடை, தொலையாத நிதியம், கோணாத ஆட்சி, துன்பம் இல்லாத வாழ்வு, உதவுகின்ற தொண்டர்களின் ஆதரவு ஆகிய பதினாறு பேறுகளையும் தரவல்லதானால், அன்றைய தினம் ஏடு தொடக்கல் தொடக்கம், மனித வாழ்விற்கு அத்தியாவசியமான அனைத்து முயற்சிகளையும் ஆரம்பித்து வெற்றி கொள்ளமுடியும். மானம்பு, வாழை வெட்டல் நடைபெறும் ஆலயங்களுக்கு மாணவ சமுதாயம் சென்று வழிபட்டுக்கொள்வது சித்தி தருவதாகும். இருந்தபோதும் மாணவர்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது என்பது அரிதாகிவிட்டது. விஜயதசமி நாளிலாவது கல்வி நிறுவனங்கள் மாலை விடுமுறையளிப்பின் வரவேற்கக் கூடியதொன்றாக அமையும். சமுதாய விழுமியம் கருதிச் செயற்படும் காலம் இனி மேலாவது கிடைக்கப்பெறின், பெற்றோர்கள் பாக்கியவான்களே!



*தோல்வி மனச்சோர்வைத் தருவதில்லை, மாறாக ஊக்கத்தையே தருகின்றது.*

# திருவிளையாடற் புராண வசனம்

## (பதினேழாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## மாணிக்கம் விற்ற படலம்

வீர பாண்டியனுக்குக் காமக் கிழத்தியார்களிடத்தே தீக்குணமுடைய புதல்வர்கள் பலர் பிறந்தார்கள். குலபத்தினிக்குப் புதல்வன் இல்லாமையால், வீர பாண்டியன் கவலை கொண்டு, தானுங் குலபத்தினியுஞ் சோம சுந்தரக் கடவுளை நோக்கி, அட்டமி விரதமுஞ் சதுர்த்தசி விரதமுஞ் சோமவார விரதமும் அநுட்டித்தான். அநுட்டிக்கு நாளிலே, சிவ பெருமானுடைய திருவருளினாலே நற்குணம் அனைத்தும் நிறைந்த ஒரு சற்புத்திரன் பிறந்தான். அப்புத்திரனுக்கு ஐந்துபிராயமாய பொழுது, வீர பாண்டியன் வேட்டையாடப் போந்து, புலியால் இறந்தான். அஃதறிந்த நகரத்தார் யாவரும் அழுதார்கள் அப்பொழுது காமக் கிழத்தியர்களுடைய புதல்வர்கள், சமயம் பார்த்துப், பலவகைத் திரவியங்களையும் ஆபரணங்களையும் கிரீடத்தையும் கவர்ந்து கொண்டுபோய் மறைந்தார்கள். வீரபாண்டியனுக்கு அந்திய கருமமனைத்தும் அவன் புத்திரன் செய்து முடித்தான்.

மந்திரிமார்கள், வீரபாண்டியனுடைய புத்திரனுக்கு முடிசூட்ட நினைந்து, திரவிய சாலையிலேயே புகுந்து தேடி, முடியையும் பல திரவியங்களையுங் காணாது திகைத்துக் கவலை கூர்ந்து, அவைகளெல்லாங் காமக் கிழத்தியர்களுடைய புதல்வர்களே கொள்ளை கொண்டு போயினார்கள் என்றறிந்து, "வேறு முடி செய்யவெனின், விலையுயர்ந்த இரத்தினங்களில்லை; அரசியல் இல்லையாயின் உலகந் துன்பமடையும் இதற்கு யாது செய்யத்தக்கது?" என்று தங்களுள்ளே ஆலோசித்துச் "சோமசுந்தரக் கடவுளுடைய திருவருளை அறிவோம்" என்று தெளிந்து, இராசபுத்திரனை அழைத்துக்கொண்டு, திருக்கோயிற் திருக் கோபுரவாயின் முன் வருவாராயினார்கள். வருமுன் சோமசுந்தரக் கடவுள் இரத்தினப் பொதி முதுகிலே தூங்க, ஒரு வைசிய வடிவங் கொண்டு, அவர்களெதிரே வந்து தோன்றினார். அங்ஙனந் தோன்றிய வைசியர், எதிர் வருவார் களை நோக்கி, "நீங்கள் கவலை கொண்ட மனத்தர்களாய் வருவ தென்னை?" என்று வினவினார். வினாவுதலும், மந்திரிமார்கள் முன் விளைந்தனவெல்லாம் அவருக்குச் சொன்னார்கள். அது கேட்ட வைசியர், "நீங்கள் கவலை கொள்ளாதொழிமின்கள். என்னிடத்தே நவரத்தினங்களும் இருக்கின்றன; அவை பதினாயிரகோடி பொன் பெறும்" என்று சொல்லி இருந்துகொண்டு நவரத்தினங்களின் இலக் கணங்களை உணர்த்தி, ஒரு கரிய வஸ்திரத்தை விரித்து, அதின் நடுவே மாணிக்க ரத்தினத்தையுங் கிழக்கு முதலிய எட்டுத் திக்கினும் முத்து முதலிய எட்டு இரத்தினத்தையும் வைத்து, வடக்கு நோக்கியிருந்து அருச்சித்து, அவைகளைக் கையாலெடுத்துக்கொண்டு, சோமசுந்தரக் கடவுளை நோக்கி, "இக்குமாரனுக்கு அளவிறந்த ஆயுளுஞ் செல்வமுங் பெருகுக" என்று சொல்லிக் கொடுத்தருளினார். கொடுத்தருளலும், இராசபுத்திரன் சோம சுந்தரக் கடவுளுடைய விமானத்தை நோக்கி நமஸ்கரித்தெழுந்து, இரண்டு கையையும்

*சொந்தக் காலில் நிற்க உதவுவதே கல்வி:*

விரித்து வணங்கினான். வைசியர் இராச புத்திரனையும் மந்திரிமார்களையும் நோக்கித் திருமுக மலர்ந்து, "இவ்விரத்தினங்களினாலே முடி செய்வித்து இக்குமாரனுக்குச் சூட்டி, இவனுக்கு அபிடேக பாண்டியன் எனப் பெயர் இடுங்கள்" என்றருளிச் செய்தார். இரத்தினத் துக்கு விலை கொடுக்க வரும் மந்திரிமார்கள், இராசபுத்திரன்மீது திருவருணோக்கமுந் திருப் புன்முறுவலுஞ் செய்துகொண்டு நின்ற வைசி யரை அங்கே காணாது திகைத்தார்கள்; வைசியர் நாற்புயமும் முக்கண்ணுங் காள கண்டமுங் காட்டி, உமாதேவியாரோடு தமது திருக்கோயிலினுள்ளே புகுந்தருளக் கண்டு, "வைசியராய் வந்தவர் சிவபெருமானே" என்று அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். இராச புத்திரன் சிவ சந்நிதியிலே நமஸ்கரித்தெழுந்து, கைகூப்பி நின்று, "எம்பெருமானுக்கு அடி யேன் செய்யுங் கைமாறொன்றுண்டோ? என் உடல் பொருள் ஆவி மூன்றும் எம்பெரு மானுடையனவே" என்று துதித்து வலஞ் செய்து, விடைபெற்றுக்கொண்டு, முனிவர்கள் ஆசி கூறச் சென்று, தன்னுறைவிடம் புக்கான்.

மந்திரிமார்கள் சிவபெருமான் அருளிச் செய்த இரத்தினங்களினாலே முடிசெய்வித்து, இராச குமாரனுக்குச் சூட்டினார்கள். அவன் சிவபெருமான் அருளிச் செய்தபடியே அபிடேக பாண்டியன் எனப் பெயர் பெற்று, அவர் திருவடிகளை மறவாத சிந்தையோடு அரசு செய்து கொண்டிருந்தான். இருக்கும் நாளிலே! தன் பிதாவின் காமக் கிழத்தியர்களுடைய புதல்வர்களாய்த் தனக்கு மூத்தவர்களாய்த் தன் பிதாவினது திரவியசாலையைத் திறந்து முடி முதலிய பொருள்களைக் கவர்ந்து சென்று வேற்றுத் தேசத்தில் ஒளித்திருந்த பகைவர்களைச், சிலர் தன்னெதிரே கொண்டு வந்து விடுப்ப, அவர்கள் கவர்ந்த திரவிய மெல்லாந் திரும்ப வாங்கிக் கொண்டான்.

## (பதினெட்டாவது)
## வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

சித்திரை மாசத்துச் சித்திரை நட்சத் திரத்திலே, அபிடேக பாண்டியன் சோமசுந்தரக் கடவுளுக்கு விசேட பூசை செய்யத் தொடங்கி, நெய்முதற் சந்தனக் குழம்பீறாக அபிடேகஞ் செய்த பின்பு, பச்சைக் கர்ப்பூர சலம் அபி டேகித்து, அக் கடவுளை வியந்து நோக்கி, "எம் பெருமானே! நீர் என் கர்ப்பூர சுந்தர ரேயோ?" என்றான்.

சோமசுந்தரக் கடவுளை வருடந்தோறுஞ் சித்திரை மாசத்துச் சித்திரை நட்சத்திரத்திலே பூசிக்கும் நியமம் பூண்ட தேவேந்திரன், பாண்டி யன் பூசை செய்தலைக் கண்டு, அது முடியும் வரையுந் தாழ்ந்து நின்று, முடிந்த பின் பூசை செய்து, தன் சுவர்க்கத்துக்கு மீண்டான். அன்று வருணன் இந்திரனுடைய சபையை அடைந்து, அவனை நோக்கி, "இன்று நீ சிறிது வாட்டம் அடைந்திருக்கின்றாய்! இஃதென்னை?" என்றான். அதற்கு இந்திரன், "மதுரையில் எழுந்தருளியிருக்கின்ற அன்பின் வலைப்படுஞ் சிவலிங்கப் பெருமானை இன்று பூசை செய்யத் தாழ்த்தது. அதனால் இப்போது என்னுள்ளஞ் சிறிது வியாகுலமடைந்த துண்டு" என்றான். அதுகேட்ட வருணன், "அச் சிவலிங் கம் மகாசிவலிங்கமோ?" என்று வினாவினான். வினாவலும் இந்திரன் "அச் சிவலிங்கம் முன்னே என்னுடைய பிரமப் பழியையும் வெள்ளை யானையின் சாபத்தையும் நீக்கியருளின தன்றோ! அதை நீ அறிந்திலை போலும்" என்றான். அதற்கு வருணன், "அங்ஙனமாயின், தேவ மருத்துவர்களாலுந் தீர்க்கப்படாததாய்

*வாழ்க்கையை ரசிப்பவர்களே நீண்டகாலம் வாழ்கின்றனர்.*

என்னை வருத்துகின்ற பெருவயிற்று நோயை அச்சிவலிங்கந் தீர்க்குமா?" என்று வினாவினான். இந்திரன் புன்னகைசெய்து, "நீ சந்தேகங் கொண்டு வினாவியதென்னை? பிரம விட்டுணுக் களாலுந் தீர்க்கப்படாத பிறவி நோயைத் தீர்க்கவல்ல சிவபெருமான் இச் சரீர நோயைத் தீர்ப்பதற்கு அரியவரோ? எம் பெருமான் செய் யுந் திருவிளையாட்டை இப்போது நீ சோதி" என்றான்.

வருணன் இந்திரனை நோக்கி, "இங்கே நான் வரும்பொழுது காமதேனுவும் அதன் கன்றும் எதிர்ப்பட்டன; அப்போது கண்ட நல்ல சகுனத்தினாலே இந்த நல்ல வார்த்தை கேட் டேன்" என்று சொல்லிக்கொண்டு சென்று, சோமசுந்தரக் கடவுள் செய்யுந் திருவிளை யாடலைக் கண்டு தன் வயிற்று நோயைத் தீர்க்க நினைந்து, சமுத்திரத்தை அழைத்து, "நீ மதுரை நகரம் முழுவதையும் விரைந்து அழிக்கக் கடவாய்" என்று ஏவினான்.

உடனே சமுத்திரங் கொதித்தெழுந்து, பருவதங்களெல்லாவற்றையும் பிடுங்கித், திசுந் தங்களிலே செல்லும் வண்ணம் எறிந்து, பிர ளய காலத்து வருதல்போலப் பெருக்கெடுத்து வந்தது. அதுகண்ட தேவர்களெல்லாரும் அது வருணன் செயல் என்பதை அறியாதவர்களாய், "பிரம கற்பத்தும் அழியாத இம்மதுரைத் திரு நகருக்கு இடையூறு வந்தது; எமது நகரத்துக் கும் இனி இடையூறு வந்தது" என்று சோம சுந்தரக் கடவுளை வந்து வணங்கிக்கொண்டு, மனங்கலங்கி நின்றார்கள். மதுரை நகரத் துள்ளாரெல்லாரும், "இது சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாட்டோ? நாம் செய்த தீவினையோ? பேரூழிக்காலம் வந் ததோ?" என்று கலங்கி நடுநடுங்கினார்கள். பூமியும் திக்குகளும் புதையும் வண்ணம் பேரி ருள் போல் வருஞ் சமுத்திரம் மதுரைத் திரு நகரின் புறத்தே வரும்போது அபிடேக பாண்டியன் கண்டு நடுநடுங்கிச், சிவபெரு மானுடைய திருவடியே புகலிடம் என்று துணிந்து அவருடைய திருவடியில் விழுந்து, "ஓலம், ஓலம்!" என முறையிட்டான். சிவபெரு மான் திருப் புன்முறுவல் கொண்டு, "அஞ்சாதே, அஞ்சாதே!" என்று திருவாய் மலர்ந்து, தமது திருச்சடையிலுள்ள நான்கு மேகங்களையும் நோக்கி, "இந்நகரத்தை அழிக்க வருகின்ற சமுத்திரத்தைச் சுவறும் வண்ணம், நீங்கள் விரைந்து போய்ப் பருகக் கடவீர்கள்" என்று பணித்தருளினார். உடனே அந் நான்கு மேகங் களும் போய், அச் சமுத்திரத்தை வாரி உறுஞ்சின. உறுஞ்சுதலும், அச் சமுத்திரம், சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று தெளிந்த மெய்யன்பர்களுடைய எழுவகைப் பிறவிக்கடல் போலப், பசை யற வறந்தது. அப்பொழுது நகரத்தார்களுந் தேவர்கள் முதலியோர்களும், அபிடேக பாண்டியனும், எம்பெருமானுடைய திருவிளையாடலை நோக் கிப், பெரு மகிழ்ச்சியுற்றுப் பல தரம் புகழ்ந்து பாடி, முடிவில்லாத இன்பக் கடலின் அமிழ்ந் தினார்கள்.

தொந்தரவுகளைப் பற்றியே நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதால் நிலமை இன்னும் மோசமாகத்தான் ஆகும். அமைதியாக, நிதானமாக அவற்றிலிருந்து வெளியே வாருங்கள். சரியான மனநிலையை உருவாக்கிக்கொண்டு மரணத்தையும், துன்பத்தையும் கடந்து செல்லுங்கள். வாழ்க்கையில் துன்பங்கள் நமக்கு உண்மை யிலேயே உதவி செய்கின்றன. தோல்விகளை வெற்றிகளாக மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள்.

*தாங்கிக்கொள்வது நம் விதியை வெல்ல சிறந்த வழியாகும்.*

# புனிதம் - தூய்மை - சுத்தம் - சுகாதாரம்

– முருகவே பரமநாதன் அவர்கள் –

"சுத்தம் சோறிடும்" என்றோர் பழமொழி தமிழிலே வழங்குகிறது. ஆரோக்கியமான வாழ்வு முக்கியமானது. ஆரோக்கியம் தானாக வாராது, நாம் அதற்கான வழிமுறைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நோய் நொடியற்று வாழ்க என வாழ்த்திவிட்டால் முடிந்ததா. வானொலியிற் பரப்பி யாது பயன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். சுகாதாரமான பழக்கவழக்கங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். பெரிய ஞானவான்களே நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும் (வள்ளலார்) நோய்களற்ற சுகவாழ்க்கையாய் (தாயுமானவர்) கழுபிணியிலாத உடலும் (பட்டர்) என்று எழுதி வைத்துள்ளனர். ஆக ஒழுக்கங்கள் சீலங்கள் உயரிய பழக்க வழக்கங்களை நாம் சாதனையிற் கையாள வேண்டும். சுகத்துக்கு ஆதாரமானவையே புனிதம். தூய்மை- சுத்தம் என்பன. புனிதம், பரிசுத்தம், சமயத்தோடும், இறைவனோடும் தொடர்பு படுத்திப் பேசப்பட்டாலும் மனிதப் புனிதம் மேன்மையானது. மனிதப் புனிதர்கள் பலர் வாழ்ந்திருக் கிறார்கள். வாழ்ந்து காட்டியும் இருக்கிறார்கள். ஆக சுகாதாரத்துக்குப் புனிதம், தூய்மை, சுத்தம் இன்றியமையாதன. கங்கை குளிக்க, துங்கை குடிக்க என்பர். கங்கை புனிதமானது. கங்கையிற் புனிதமானது காவிரி என ஆழ்வார்கள் பாடினர். ஆலயம், சூழல், தீர்த்தம், சமயநூல்கள், ஆவி புனிதத்தோடு இணைத்துப் பேசப்படும். பரிசுத்த இருதயம், பரிசுத்த மனம், பரிசுத்த வாழ்வு, பரிசுத்த மகான்கள் உயர்வைக்காட்டும். எனவே நாம் அகத்தாலும் புறத்தாலும் புனிதராய் வாழ்தல் நன்று. மனம்போல வாழ்வு, மனமது சுத்தமானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்ற அனுபவ வாக்குகள் வெறும் உரையாடல் அன்று. எனவே வள்ளுவர் இப்படிப் பாடுகின்றார்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற" குறள் 34.

மனிதா! நீ மனத்தைச் சுத்தமாய் வைத்திரு. மற்றதெல்லாம் வெறும் ஆடம்பரம். இன்னோர் குறட்பாவில் தண்ணீரினால் வெளிச்சுத்தம் செய்யலாம். அகச்சுத்தம் வாய்மையால் வரும் என்கிறார். வாய்மை பிறர்க்குத் தீமையிலாத சொல். மாசு மறுவற்ற வாழ்வு அகத்திலும் புறத்திலும் அமைய வேண்டும் என்பதை மனிதம் உணரவேண்டும்.

"புறந்தூய்மை நீரா னமையும் அகம்தூய்மை
வாய்மையான் காணப்படும்" குறள் 298.

ஒருவனுக்கு உடம்பு தூய்தாந்தன்மை நீராலே உண்டாகும். அதுபோல மனந்தூய்தாந் தன்மை வாய்மையால் உண்டாகும். எனவே துப்பரவு (துப்பரவு) வாழ்வின் நாணயம் போன்றது எனலாம். அப்பர் உளவாரம் தாங்கி ஆலயத்தொண்டு ஆற்றினார் என்பதன் உட்கோள் என்ன? மனத்தையும் செருக்கி கொடிய புல் பூண்டு முளைக்காமற் காக்க வேண்டும் என்பதாம். அழுக்கு மனத்தடியேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே என்றவர் மணிமொழியார். தாயுமான வரும் இறைவனை நோக்கி இப்படிக் கேட்கிறார்.

*சொல் என்பது மனித ஆற்றலை ஒழுங்குபடுத்துவதாகும்.*

அழுக்கு ஆர்ந்த நெஞ்சு உடையேனுக்குஇ
யாநின் அருள் வழங்கின்
இழுக்கு ஆகும் என்று எண்ணி யோஇரங்
காத இயல்பு கண்டாய்
முழுக்காதல் ஆகி, விழிநீர்
பெருக்கிய முக்தர் எனும்
குழுக்காண நின்று, நடம் ஆடும்
தில்லைக் கொழுஞ்சுடரே.
பாயப்புலி 34.

அழுக்கு ஆர்ந்த- மாசுபடிந்துள்ள, குழுக்காண- ஞானியர் கூட்டம் தரிசிக்க மகாகவி பாரதியும் முத்துமாரியிடம் "மனம் வெளுக்க வழியில்லை" என்று கேட்கிறார். இந்த மனம் குரங்கு மனம்; இதைக் கட்டிப்போட வேண்டும். மனம் புனிதமானவன் ஆயிரம் பெண்களின் மத்தியிலும் சலனமற்று அமைதியாய் இருப்பான். மனத்தகத்தழுக்கு அறாது தம்மை ஞானியென்று பேசு பவர்கள் காட்டில் இருந்தாலும் மனம் செப்பம் அடையார் என சிந்தனைச் சித்தர் சிவவாக்கியர் பேசுகிறார்.

மனத்தகத் தழுக்கறுத்த மௌன ஞான யோகிகள்
முலைத் தடத் திருக்கினும் மனத்தகத் தழுக்கு அறுப்பர்
மனத் தகத் தழுக்கு அறுத்திடாத மௌனஞானயோகிகள்
வனத்தகத் திருக்கினும் மனத்தகத் தழுக்கறுத்திடாரே.

பட்டினத்தாரும் காடேதிரிந்தென்ன காற்றே புசித்தென்ன, ஓடே எடுத்து என்ன மாற்றிப் பிறக்க வழியில்லையே என ஏங்கினார். மனம் பண்படுகிற இடமே வாழ்க்கை. எனவே மனம் போன போக்கிலே போகாமல் வாழ வேண்டும். புலனைந்தும் வென்றான்தன் வீரமே வீரம் என்றார் அவ்வை. இந்த உடம்பு தேர்; உயிர்தான் அதிலே அமர்ந்து இருக்கும் எசமான். புத்திதான் அதைச் செலுத்தும் சாரதி. ஐந்து குதிரைகள் ஐம்புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) குதிரையை லகானைப் பிடித்து வழிநடத்துவார் சாரதி. (லகான்- கடிவாளம்) லகான் தான் மனம். புத்தி- நல்லறிவுதான் சாரதி. முறையான வாழ்க்கைப் பாதையிலே ஆத்மார்த்தத்தில் போகும் விதத்தில் மனம் லகானை சுண்டிப் பிடித்து விடுகிற அளவுக்கு விட்டால் - ஐம்புலக் குதிரைகள் உத்தமமான அனுபோகங்களுக்குப் போய் இறங்கவேண்டிய இடத்தை அடையும். அதுவே அமைதியான இடம். இறை நிழல்.

மேலைத்தேயங்களிலே விஞ்ஞான மயமான பாதையில் சுத்தம், சுகாதாரம் மேற்கொள்ளப் படுகிறது. கீழைநாடுகளிலே, மெய்ஞ்ஞான பூர்வமான பாதையில் தூய்மை, புனிதம் பேணப்படு கிறது. இந்தச் சுத்தம் சுற்றுப்புறச் சூழலில் இருந்து சரீரம் வரை மட்டுமன்றி உயிரோடு தொடர்பு உடைய மனம்வரை அமையவேண்டும். மனதை வெளியே கொண்டுவந்து உவர்க்காரம் போட்டு அப்பிலே தோய்த்துக் கல்லிலே தப்பமுடியாது. மன அழுக்கு மூட்டையை ஆத்மீக நெறியிலும், இறை ஈடுபாட்டிலும், விரதாதிகளாலும் மட்டுமன்றி உயரிய ஒழுகலாறு சீலங்களை அனுஷ்டிப்பதாலும் தேய்க்கலாம். அழுக்குமூட்டை தேய பாவமும் அகலும். எனவே பாவ காரியங் களை மனம் மறந்துகூட நினைக்கக்கூடாது. தொடக்கூடாது. காரணம் தீயவை தீமையையே

*வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்கிறவனே சிறந்த அறிவாளி.*

தரும். தெய்வ தண்டனைக்கு ஆளாக வேண்டியும் வரும். இன்றைய விஞ்ஞானம் நீரையே சுத்தம் பண்ணி மக்களுக்கு வழங்குகிறது. புனித நீரைத் தீர்த்தம் என்கிறோம். ஆழ்வார்கள் தாம் அருளிச் செய்த பாசுரங்களைத் தீர்த்தம் என மதிக்கின்றனர்.

தீர்த்தனுக் கற்றபின் மற்றோர்
சரணில்லை யென்றெண்ணி, தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தன னாகிச்
செழுங்குரு கூர்ச்சட கோபன் சொன்ன
தீர்த்தங்க ளாயிரத் துள்ளிவை
பத்தும்வல் லார்களை, தேவர் வைகல்
தீர்த்தங்க ளேயென்று பூசித்து
நல்கி யுரைப்பர்தம் தேவியர்க்கே.

திருநாலாயிரம் 3446.

நம்மாழ்வார் போன்றே- மணிவாசகரும். ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்- என்றார். பிறவிக்கு மருந்து தீர்த்தம். அத்தா உன்னடியேனை அன்பால் ஆர்த்தாய் அருள் நோக்கில் தீர்த்த நீர் ஆட்டிக்கொண்டாயென அப்பருமருளினார். உள்ளத்தினுள்ளே உண்டு பல தீர்த்தங்களென்பது திருமூலர் வாக்கு. மேலை நாடுகளில் குழாயிலே வரும் தண்ணீர் தீர்த்தமாகாது. தீர்க்கமாய்ச் சிந்திப்போம்.

இப்புனிதம் தெய்வம் தெய்வீகத்தோடும், திறமான மனித வாழ்வோடும் செறிந்தது, தேவையானது. லௌகீகம், ஆன்மீகம் இரு நோக்கிலும் சுகாதாரமான நீரோட்ட வாழ்வுக்கு இது நற்பயன் அளிக்கும். வருமுன்னர் காப்பவனே புத்திசீவி. ஒவ்வொரு நிகழ்விற்கும் எதிர் விளைவுகள் உண்டு. தீய விளைவில் இருந்து தப்ப வருமுன் கார் என்கிறது தமிழ்மறை.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை
அதிர வருவதோர் நோய்.

குறள் 429.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

எரி- நெருப்பு, வைத்தூறு- வைக்கோல். மேலது 435.

அண்மைக் காலங்களில் “கொரோனா” என்ற கொடிய வியாதி பரவியபோது, பொது இடங்களிலும், வைத்திய சுகாதார நிலையங்களிலும் ஒரு எச்சரிக்கை அறிவித்தல் போடப் பட்டிருந்தது. மேலைத்தேயங்களில் இரத்தம் படிந்த கையடையாளத்தை அறிமுகம் செய்து, கையினாலேதான் தொற்றுக் கிருமிகள் விரைவிற் பரவுகின்றன. எனவே உங்கள் கைகளை வெளியே போய் வந்ததும், கிருமிநாசினிகள்- சோப்போட்டு- துப்புரவாய்க் கழுவுங்கள், வைத்திய சாலை போவோர் பரிசோதிக்கப்படுவர். கைகளுக்குக் கிறீம்போடச் சொல்வர். இந்த நடைமுறை நம் சமுதாயக் கட்டுப்பாட்டில் வெகு கண்டிப்பாய் இருந்தது. நாமெல்லாம் வெளியே போய் வந்தால் முதல் வேலையாகக் கைகால் அலம்பியே உள்ளே போகச் சொல்வர். பின் முகம் துடைத்து விபூதி பூசவேண்டும். இறைவனை நினைக்க வேண்டும். இப்படியான சுகாதார வாழ்வு

*நகைச்சுவை பக்கவிளைவுகள் எதுவுமில்லாத அரிய மருந்தாகும்.*

சமயஞ்சார்ந்ததாய் வழிநடத்தப்பட்டமை போற் றற்குரியது. சாப்பிடமுன் உண் கலம், குடி கலம், கை எல்லாம் சுத்தம் செய்வோம். சாப்பாடு முடிந்த பின்னரும் பாத்திரங்களைக் கழுவி, கை, வாய் சுத்தம் செய்வோம். நாவ லர் எழுதிய சைவ வினாவிடை இதற்கு உப காரியாய் இருந்தது. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஐந்தில் வளையாதது ஐம் பதில் வளையாது அன்றோ. எனவே நல்ல பழக்கவழக்கங்கள் ஒழுக்கங்கள் இளமையில் இருந்தே கைக்கொள்ளப்படவேண்டியன. எச்சில் இரக்க வைக்கும். எனவே பிறர் உண்ணும், பருகும் பாத்திரங்களில் உண்ணவோ குடிக் கவோ கூடாது என்பதும் முந்தையோர் கண்டு, தந்த ஒழுகலாறுகளாம். நாவலர் பெருமான் சாப்பிட்ட பின் வாயைப் பலமுறை அலசிக் கொப்பிளிக்க வேண்டும் என்றார். ஏன் உண வுப் பொருட்கள் பல், வாயிற் தங்கியிராமல் இருப்பதற்கும், வாய் மணவாமல் இருப்பதற்கு மாம். இப்படியான சுகாதார பழக்கவழக்கங் கள் வாழ்வின் சட்டங்களாகும்.

முற்றம் (பெருக்கி) கூட்டி, சாணி தெளிப்பதும், வீடு சாணியால் மெழுகுவதும், மஞ்சள் கரைத்த மஞ்சட் தண்ணீர் தெளிப் பதுவும், வேப்பிலை பாவிப்பதும் எல்லாம் கிருமி நாசினிகளே. வீட்டுச் சுற்றாடல், சுற்றுப்புறச் சுகாதாரம் பேணக் குப்பைகளைக் கூட்டி எரிக்கலாம். குப்பைக் கூட்டிற் போட்டாற் பசளை ஆகும். சமையற்கட்டு, பாத்திரங்கள்- மரக்கறி வகை எல்லாமே சுத்தமாய் இருக்க வேண்டும். நீரைச் சுட வைத்து ஆறியபின் குடிப்பது நற் பழக்கமாகும். ஆலயங்களின் சுத்தம் பெரிதும் பேணப்பட வேண்டும். மடைப்பள்ளி, மக்களுக்கு வழங்கும் பிரசாதம், பாத்திரம் எல்லாமே புனித மாய், துப்புரவாய் இருக்க வேண்டும் அன்றோ. எம் உடைகளையும் தோய்த்துக் கழுவிக் கட்டல் மேலானது. கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பது பழமொழி. சுத்தம் சுகம் தரும், சுத்தம் சோறிடும், குளிக்கப்போய்ச் சேறு பூசக் கூடாது. மலசல கூடங்களும் கிருமிநாசினி களாற் கழுவித் துப்புரவு செய்ய வேண்டும். கிணறுகளை இறைப்பதும், குளோரின் போடு வதும் காலத்தின் கட்டாயமாம். சத்தான உண வுகள், பால் போன்றவை உடல்நலம் பேண உதவும் தடுப்பூசிகள் மிகமிக முக்கியமானவை.

நாம் சைவ ஆசார அனுட்டானங்களை மேற்கொண்டு ஆரத உணவையே உண்ணல் வேண்டும். அர்ச்சனை, அபிடேகம், பாலாபிடே கம், சாந்தி, ஓமம், யாகம், இலட்சார்ச்சனை போன்றவற்றிலும் நாம் எங்கும் எதிலும் சுத்தம் பேணல் மிக முக்கியமாம் என்பதை உணர்ந்து நாமும், நம் சந்ததியும் வாழ்வோமாக.

சிந்தை அடக்கிச் சிறுபுலனைக் காத்தடக்கி
விந்தை அடக்கிவளர் வீறு

யோகசித்தி.

இனிதமான வாழ்விற் புனிதம் பேணுவோம்
உசிதமான சைவம் காத்து சிவம் தொழுவோம்.

---

**எல்லா ஆற்றலும் உங்களிடம் உள்ளது. அதை உணருங்கள், அதை வெளிப்படுத்துங்கள். உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே. நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். உன்னுடைய பாதையைப் பின்பற்றித் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு உனது இலட்சியத்தை அடைந்துகொள்.**

***இயற்கை என்ற புத்தகத்தின் ஆசிரியர் இறைவன்.***

# வழித்துணை 38

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 துக்கம் நெஞ்சத்தை அடைக்கின்ற வேளையிலே
தக்கோர்க்கு அதைஉரைத்துத் தக்கவழி கேட்டிடுவீர்
வெட்கம் என்றதனை வெளிக்காட்டா திருந்திட்டால்
பக்கத்து மகிழ்வுகூடப் பலதூரம் சென்றுவிடும்.

02 சந்தேகம் ஒன்றுமுள் சங்கமிக்கும் வேளையிலே
சிந்தித்துச் செயலாற்றி சீராக்கித் தீர்த்திடுவீர்
பேந்து பின்னையென்று பெரும்பொழுது கழித்திட்டால்
வந்தது வளர்ந்துபின் வாழ்வினையே விழுங்கிவிடும்.

03 ஊனுடலை வளர்க்கின்றீர் உறவுகளை வளர்க்கின்றீர்
ஆணுறவில் பெண்ணுறவில் ஆசைகளை வளர்க்கின்றீர்
வானுயர்ந்த கோபுரம்போல் பேர்புகழை வளர்க்கின்றீர்
மானிடத்துள் ஆத்மீக பலம்வளர்த்தல் ஆகாதோ.

04 இருளில் மறைவது ஒளியாகும் இதமான
ஒளியில் மறைவது இருளாகும் அதேபோல
மாயை இருளில் மறைவது இறையாகும் இறை
அருளில் மறைந்திடும் துன்ப இருளாகும்.

05 கலியுகம் அகன்றாலே இனியுகம் வாழும்
இனியுகம் வாழ்வதற்கு புதுயுகம் வேண்டும்
புதுயுகம் பிறப்பதற்கு இறையருள் வேண்டும்
இறையருள் வேண்டுமெனில் ஆத்மபலம் வேண்டும்.

06 தொற்றிடும் வியாதியென்று தூரத்தே நிற்பவர்கள்
பற்றிடும் பதவியென்று படித்துயர மறுப்பதுஏன்
செற்றபின் முடிந்திடும் உடல்நலத்தைப் பேணுபவர்
கற்றவித்தை எழுபிறப்பும் தொற்றுமென்று அறியாரோ.

*உலகில் தன்னம்பிக்கையே நிகரில்லாத செல்வம்.*

07 பெற்றாற்கு உதவுதல்போல் உற்றாற்கு உதவுதல்போல்
மற்றோற்கு உதவநாம் மனமுவந்து முன்வந்தால்
கற்றார் என்றுலகம் எமைப்போற்றி மதிப்பதுடன்
பற்றோடு மற்றோரும் உற்றாராக உதவிடுமாம்.

08 செயலாலே நினைப்பாலே செய்வதைச் செய்து நாங்கள்
தயவின்றிப் பிறர்தம்மைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டால்
யார்வயலில் விதைத்தாலும் விதைத்தவற்கே அறுவடைபோல்
பெருவிளைவைப் பின்னர்நாம் அனுபவிக்க நேர்ந்துவிடும்.

09 தவறிளைக்கத் துணிந்தவர்கள் தண்டனைக்கும் துணியவேண்டும்
தண்டனையால் தப்புவதற்கு தவறுகளை மறைத்திட்டால்
மறைக்கின்ற தவறுகளேபின் மாபெரும் தவறாகி
தப்பிடவே முடியாத தண்டனையைத் தந்துவிடும்.

10 நேர்மையோடு நடந்திட்டால் நெஞ்சுக்குள் கனமிராது
கனமில்லா நெஞ்சற்கே நிரந்தர மகிழ்விருக்கும்
மகிழ்விருக்கும் என்றெண்ணி நேர்வழியைக் கைவிட்டால்
அவ்வழியே மகிழ்வழித்து நின்மதியைக் குலைத்துவிடும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும்**
**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்**
**பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்**
**கீழே உள்ள முகவரியுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*ஒரு முள் குத்திய அனுபவம் கடலளவு எச்சரிக்கைக்குச் சமம்.*

# யாழ்ப்பாணத்து ஆலய மகோற்சவங்களில் தேர்த்திருவிழா பெறும் முக்கியத்துவம்

– திரு சண்முகலிங்கம் சஜீலன் அவர்கள் –

ஆன்மீக உலகில் சனாதன தர்மத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்குவது பாரத தேச மாகும். நம் இந்து சமயத்தின் அத்தனை தத்துவக் கோட்பாடுகளும் அதற்கான செயல் நெறிமுறைகளும் அங்கிருந்தே உலகெங்கும் வியாபித்துச் சென்றது. பாரதத்தின் உப கண்டப்பிரதேசமாக இருக்கக்கூடிய ஈழமும் அதன் மக்கள் கூட்டமும் அதே கலாசாரப் பண்பாட்டு நெறிமுறைகளுக்கூடாக சைவமும், தமிழும் என்ற ஒன்றிணைந்த பண்பாட்டை தொன்றுதொட்டு கடைப்பிடித்து வாழ்ந்து வந்ததன் பயனாக ஓர் உயர் நாகரீகப் பண் பாட்டை உலகிற்கு எடுத்தியம்பியவர்களாக அறியப்படுகின்றனர். இவற்றில் தமிழகம், ஈழம் எனும் இரு புலத்திலும் சிவவழிபாடு முக்கியத் துவம் பெற்றிருந்ததுடன் ஆலயம் அமைத்து அதில் பரம்பொருளை சாந்நித்தியம் செய்து வழிபாடு செய்யும் பண்பாட்டு மரபும் தோற்றம் பெற்றது. இப்பண்பாட்டு மரபில் கி.பி. 6ஆம் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாயன்மார்கள் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தொடக்க காலத் தில் ஆகம முறை சாராத பாரம்பரிய ஆலய வழிபாட்டு முறை பின்னர் ஆகம முறை சார்ந்த ஆலய வழிபாட்டு முறையாக மாற்றமடைந்து சென்றது. இதனால் ஆகமமுறை சார்ந்த கிரியை நெறிமுறைகள் முக்கியத்துவம் பெற்றன.

ஈழத்தில் தமிழர்களின் கலாசாரப் பண்பாட்டுத் தலைநகரெனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தில் ஆலயப்பண்பாடு மிக உயர் நிலையில் பின்பற்றப்பட்டு பேணப்பட்டு வருகிறது. ஆலயப் பண்பாட்டில் ஆலயத்தில் நடை பெறும் உற்சவங்களும், விசேட வழிபாடுகளும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. இத னால் யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் நடை பெறும் மகோற்சவங்களும் விசேட உற்சவங் களும், வழிபாடுகளும் உலகில் மிகுந்த கவன யீர்ப்பைப் பெறுவதுடன் இங்கு நடைபெறும் மகோற்சவத் திருவிழாக்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகவும் உள்ளன. பொதுவாக மகோற்சவங்களும் அவற்றில் நடைபெறும். கிரியைகளும் இறைவனின் ஐந்தொழில்களை (படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்) குறிப்பவையாகக் கருதப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்து ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவ திருவிழாக்கள், அத னையும் தாண்டிய ஒரு மக்கள் ஆதரவைப் பெற்றவையாகவும் ஆன்மீக உள்ளுணர்வின் வெளிப்பாடாகவும் பார்க்கப்படுகின்றன. ஒரு ஊரில் கோயில் திருவிழா தொடங்கிவிட்டால் அந்த ஊரே மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் மூழ்கிவிடும் என்பதுடன் ஒரு வாரத்திற்கு முன்பே மகோற்சவத்திற்கான ஆயத்தப் பணிகள் தொடங்கிவிடுவதனையும் அவ தானிக்கலாம்.

பெருந்திருவிழா அல்லது மகோற்சவம் பஞ்சாங்கத்தின் உறுப்புக்களான திதி அல்லது நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டு ஆரம்பிக்கப்படுபவை ஆகும். இப் பெருந்திருவிழாக்கள் கொடியேற்றம், வாகனத் திருவிழா, மஞ்சம், கைலாச வாகனம், தேர், தீர்த்தம், பூங்காவனம் என அமையும். இவற்றுள் கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்பன விசேட திருவிழாக்களாக அமைபவையாகும்.

**தேர்த்திருவிழா பெறும் முக்கியத்துவம்**

யாழ்ப்பாணத்து சைவாலயங்களில் நடைபெறும் மகோற்சவ விழாக்களில் தேர்த் திருவிழா அல்லது இரதோற்சவம் எனப்படும் திருவிழா ஏனைய திருவிழாக்களை விட மிகுந்த முக்கியத்துவமும், தனிச் சிறப்பும் வாய்ந்ததாக உள்ளது. அதிக பக்திப் பரவசத்துடனும், அதிக அடியார்களின் ஒன்றுகூடலுடனும் நடைபெறுவது இத்திருவிழாவாகும். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அனேக பிரபலமான ஆலயங்கள் கொடியேற்றம் கண்டுவிட்டால் அடுத்து எப்போது இரதோற்சவம் நடைபெறுமெனக் காத்திருந்து அதனை மக்கள் கண்டு களிக்கும் நடைமுறை காலாதி காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. பொதுவாக மகோற்சவத் திருவிழாக்கள் இறைவனின் ஐந்தொழில்களைக் குறிப்பவை என ஏலவே கண்டோம். இவற்றில் இரதோற்சவம் அல்லது தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்குமென சைவ ஆகமங்கள் கூறுகின்றன. அழித்தல் தொழிலைக் குறிக்கும் திருவிழாவிற்கு ஏன் இத்தனை முக்கியத்துவம், எதற்காக அதிக பக்தர்கள் ஒன்று கூடுகிறார்கள் இதற்கு விடை காண்பது மிக இலகுவானது. மகோற்சவத்தில் இரதோற்சவம் முக்கியத்துவம் பெறுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. கிரியை முறைகளில் மகோற்சவத்தின் ஏனைய திருவிழாக்களைப் போன்றே இரதோற்சவத்திற்கான கிரியை முறைகளும் அமைகின்றன. எனினும் மிகவும் பக்திமயமான சூழலில் இத் திருவிழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக வசந்த மண்டபத்திலிருந்து சுவாமி தேருக்கு எழுந்தருளிச் செல்லும் விதமும், பக்தர்களின் அரோகரா ஒலியும், மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வரத்திலிருந்து எழும் மல்லாரி இசையும் இதனைப் பார்க்கும் ஒரு பக்தரை பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடும் தன்மை வாய்ந்தது. தன்னிலை மறந்து ஒரு கணம் இறைவனுடன் ஒன்றச் செய்துவிடும். இக்கணத்தில் ஒருவரது ஆணவம் அழிந்து போவதை அல்லது நான் என்ற மமதை அற்றுப்போவதைப் பார்க்கலாம். இதுவே தேர்த் திருவிழாவின் தத்துவ விளக்கமாகவும் அமைகிறது. இத்திருவிழாவின் முக்கிய நோக்கமே எம்மைப் பீடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் அழிப்பதாகும். இது இத்திருவிழாவின் பக்திமயச் சூழலில் நிதர்சனமாவதை கண்கூடாகப் பார்க்கலாம். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த் தரிசனம்செய்ய வரும் பக்தர் ஒருவரின் எண்ணப் பதிவொன்று இத்திருவிழாவின் தத்துவத்தை விளக்கப் போதுமானது.

**“நல்லூர் முருகன் தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருவதற்காக கீழைக் கோபுர வாயிலில் இருந்து தேர் முட்டிவரை எழுந்தருளுங்காட்சியை கடந்த ஐம்பது வருடமாகத் தவறாது கண்டு தொழுது ஆனந்தமுற்ற போதிலும் இன்னும் என் அவா அடங்கவில்லை. நான் எங்கிருந்தாலும் நல்லூர் முருகன் தேரில் ஏறிச்செல்லும் அற்புதக் காட்சியைக் காண்பதற்காக இங்கே வந்து விடுவேன். என்றும் இவ்வழகிய**

**திருக்கோலத்தைக் காண்பதற்கே யான் மீண்டும் இப்புவியில் பிறக்க ஆசைப் படுகின்றேன். இத்திருக்கோலத்தைக் காணத் தவம் செய்திருத்தல் வேண்டும்."**

பொதுவாக இருவகையான தேர்கள் யாழ்ப்பாணத்து ஆலயங்களில் உண்டு. ஒன்று தேரின் அடிப்பீடம், சுவாமி எழுந்தருளும் சிம்மா சனம் என்பன நிரந்தரமாக அமைக்கப்பட்டு தேரின் மேல் விதானம் (விமானம்) தேவைக் கேற்ப அமைக்கக்கூடியதாக உள்ள கட்டுத் தேர் எனக் கூறப்படும் தேர் ஒருவகையாகும். மற்றையது தேரின் அடிப்பீடம் சுவாமி எழுந் தருளும் சிம்மாசனம், மேல்விதானம் என்பன நிரந்தரமாக அமைக்கப்பட்டு இரதம் அல்லது சித்திரத்தேர் என அழைக்கப்படும் தேர் இன் னொரு வகையாகும். மேல் விதானம் நிரந்தர மாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் எனப்படும் தேர்வகையே தற்போது யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான ஆலயங்களில் காணப்படுகிறது. தேர்வீதியுலாவின்போது தேரில் எழுந்தருளி வரும் மூர்த்தியின் அழகுக் கோலமும், கதிர வனின் ஒளிக்கதிர்பட்டு பட்டொளி வீசிப்பறக் கும் சிவப்பு, வெள்ளை வர்ணத்திலமைந்த தேரின் கம்பீரத் தோற்றமும், மேல்விதானத் தின் எழுதக வரிச்சட்டங்களில் ஒளிக்கதிர் பட்டு மின்னும் சித்திரத்தேரின் அழகும் என்றும் வைத்த கண் வாங்காது பார்க்கத்தூண்டும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

**தேர்த்திருவிழாவும் அதிக அடியார்களின் ஒன்றுகூடலும்**

நீண்ட வரிசையில் அடியார்கள் வடம் பிடித்து இழுப்பதும், தேருக்குப் பின்னால் அடியார்கள் கூட்டுப்பிரார்த்தனை செய்து வரு வதும், அங்கப்பிரதட்சணை மற்றும் அடி அழித்தல் செய்து வரும் அடியவர்களும், காவடியெடுத்து ஆடிவரும் பக்தர்களின் அழகுக்கோலமும் தேர்த்திருவிழாவின் மகோன் னதக் காட்சிகளாகும். "ஊர் கூடித் தேர் இழுத்தல்" எனும் கோட்பாட்டுக்கமைய இனம், மொழி, சாதி, பால் வேறுபாடின்றி அனைத்து அடியார்களும் வடம் பிடித்து தேர் இழுக்கும் நிகழ்வும், ஆண் அடியார்கள் ஒரு பக்கமாக வும், பெண் அடியார்கள் இன்னொரு பக்கமாக வும் நின்று தேர் இழுக்கும் நிகழ்வும் அதிக அடியார்கள் தேர்த் திருவிழாவில் ஒன்றுகூடக் காரணமாக அமைந்து விடுகின்றன. அத்துடன் தேரின் பிரமாண்டத் தன்மையும் அதிகரித்த எடையும் தேரை அசையச் செய்வதற்கு அதிக எண்ணிக்கையான பக்தர்களை வேண்டி நிற்பன. யாழ்ப்பாணத்தில் பிரபலமான ஆலயங்களில் மட்டுமல்லாது ஓர் ஊரில் அல்லது கிராமத் திலுள்ள கோவில்களிலும் தேர்த்திருவிழாவின் போது அதிக எண்ணிக்கையான பக்தர்கள் ஒன்றுகூடுவது பொதுவான அம்சமாக உள் ளதை நாம் அவதானிக்கலாம்.

தேர் ஓர் ஊர்தி என்ற வகையில் மிகத் தொன்மையான சிந்துவெளி நாகரீக காலத்திலேயே அறிமுகமாகியிருந்ததற்கான சான்றுகள் அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைத் துள்ளன என்பதுடன் பொதுவாகத் தேரும் அதன் வடிவமும் ஒரு ஆலயக் கருவறையுட னும் மனிதனது உடற்பாகங்களுடனும் ஒப் பிடப்படுகின்றன. தேர் ஓர் அசையும் ஆலய மாகவும் சுவாமி வீற்றிருக்கும் சிம்மாசனம் மனிதனது இதய ஸ்தானமாகவும் கருதப்படு கின்றமை பொதுவான அம்சமாகவுள்ளது. தேரின் புறத்தோற்றம் சுவாலை விட்டு எரியும் ஒரு தீயின் வடிவமாகவும் கொள்ளப்படுகிறது. வேதகாலத்தில் சிவபெருமான் பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களை அதன் சக்கரங் களாகவும் வேதங்களைக் குதிரைகளாகவும், பிரம்மாவைச் சாரதியாகவும் மேரு மலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பை அதன்

நாணாகவும் விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு திரிபுர தகனத்திற்காகப் புறப்பட்ட தொன்மையான நிகழ்வே பின்னர் ஆலய மகோற்சவங்களில் தேர்த்திருவிழாவாக வடிவம் பெற்றது. ஆலயங்களில் கருவறையில் வீற்றிருக்கும் மூலமூர்த்தியின் அம்சமாகவுள்ள உற்சவமூர்த்தியே ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்களை அழித்தல் எனும் தத்துவத்திற்கமைய மிகவும் ஆக்ரோசமாக அகோர மூர்த்தமாக தேருக்கு எழுந்தருளுவதும் பின்னர் பச்சை சாத்தப்பட்டு சாந்த மூர்த்தமாக தேரிலிருந்து இறங்குவதும் தேர்த்திருவிழாவில் பொதுவாக நாம் காணக்கூடிய விசேட அம்சங்களாகும். சிவன் ஆலயங்களில் சோமாஸ்கந்த மூர்த்தி அல்லது நடராஜரும், பிள்ளையார் ஆலயங்களில் பஞ்சமுக விநாயகரும், முருகன் ஆலயங்களில் ஆறுமுகசுவாமியும், அம்மன் ஆலயங்களில் அவ்வவ் ஆலயங்களுக்குரிய அம்பாளின் மூர்த்தி பேதங்களும், விஷ்ணு ஆலயங்களில் வரதராஜ மூர்த்தியும் தேருக்கு எழுந்தருளும் இறை மூர்த்தங்கள் ஆகும்.

தமிழகத் திருக்கோவில்களில் சிதம்பரம் ஆனித் திருமஞ்சனத் தேரோட்டம், திருவெம்பாவைத் தேரோட்டம், திருவாரூர் ஆழித் தேரோட்டம் மற்றும் திருவிடை மருதூர், ஸ்ரீ வில்லிபுத்தூர், திருச்செந்தூர், மதுரை ஆகிய தலங்களில் நிகழும் தேரோட்டம் ஆகியன அதிக மக்கள் ஒன்று கூடலுடன் நடைபெறும் வெகு பிரசித்தம் வாய்ந்த தேர்த்திருவிழா நிகழ்வுகளாகும். ஈழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மகோற்சவங்களையும் அலங்கார உற்சவங்களையும் காணும் ஆலயங்கள் பலவற்றிலும் தேர்த் திருவிழாவிற்கு அதிக மக்கள் மிகவும் பக்தியுடன் ஒன்று கூடுவதை அவதானிக்கலாம். அதிலும் பிரசித்திபெற்ற ஆலயங்களான நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் (1990ஆம் ஆண்டிற்கு முன்பு ஐந்து தேர்கள் வலம் வந்த பெருமைக்குரியது) செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் திண்ணபுரம் சிவன் ஆலயம் (திருவெம்பாவைத் திருவிழாவில் ஐந்து தேர்கள் வீதி வலம் வரும் பெருமைக்குரியது என்பதுடன் ஆருத்திரா தரிசனமும் விசேடமாக நடைபெறும் ஆலயம் ஆகும்.) நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயம் ஆகியவற்றில் நடைபெறும் தேர்த் திருவிழாக்கள் அதிகமான அடியார்களின் ஒன்று கூடலுடன் மிகவும் பக்திமயமான சூழலில் நடைபெறும் அற்புதமான திருவிழாக்களாக அமைவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக யாழ்ப்பாணத்து ஆலய மகோற்சவங்களில் தேர்த்திருவிழாவானது மனித ஆன்மாக்களை லயப்படுத்தும் நிகழ்வாகவும் அடியார்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தும் திருவிழாவாகவும் அமைவதை அவதானிக்கலாம்.

மனிதன் ஆனந்தமாயிருக்க எவ்வளவோ முயற்சி செய்கிறான். என்னதான் அலைந்தாலும் ஆனந்தம் அவனுள்ளேதான் இருக்கிறது என்பதை உணர முடியவில்லை. அதுதான் சத்தியமானது. வெளிப்புற ஆனந்தங்கள் கானல் நீரைப் போன்றவை. ஆகையால் உன்னுள்ளே இருக்கும் நித்தியமான ஆனந்தத்தை உணர்ந்துகொள்ள முயற்சி செய்.

*வாழ்வது முக்கியமல்ல, சிறப்பாக வாழ்வதே முக்கியம்.*

# வெண்ணீறணிந்தென்ன!

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இந்த இனிய பொழுதிலே உங்கள் அனைவருக்கும் வணக்கம் சொல்லக் கொடுத்து வைக்க வேண்டும். வணக்கம் சொல்லும்போது எம்மிடம் ஒருவிதப் பணிவு பிறக்கின்றது. பணிவு என்னும் பண்பு எமக்கு வாழ்வில் நிச்சயம் வெற்றியைத் தரவல்லது என்பது நீங்கள் அறிந்ததே. ஒருவன் பணக்காரன் என்று பெயர் எடுப்பதிலும் பார்க்க பண்பாளன் என்றழைக்கப் படுவதில் எத்தனை உயர்வும் மேன்மையும் இருக்கின்றது இல்லையா? காரணம் பண்பாளன் நம்பிக்கைக்குரியவன் நம்பத் தகுந்தவன் ஒழுக்கநெறிக்குக் கட்டுப்பட்டவன்.

இனி இன்றைய சிந்தனைக்கு வருவோம். சைவ சமயத்துக்குரிய சின்னங்களில் ஒன்றான தும் எம்மை தூயவராகத் தோற்றமளிக்க வைப்பதுமான திருநீறு பற்றி இன்று சிறிது சிந்திப்போம்.

"நீறில்லா நெற்றி பாழ் - நெய்யில்லா உண்டி பாழ் - ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது கற்றோர் வாக்கு. சைவர்களாகிய எமது நெற்றிக்கு சிறப்பைத் தருவது திருநீறு எனப்படும் விபூதி ஆகும். நெற்றியில் விபூதியுடன் ஒருவரைக் காணும்போது அவரிடம் ஒரு மதிப்பும் நம்பிக்கையும் எமக்கு உண்டாகின்றது.

இத்தகைய திருநீறு, அந்தமில் இன்பத்து அழிவில்லா வீடாகிய முத்திச் செல்வத்தைத் தருவதால் "விபூதி" என அதாவது "மேலான செல்வம்" எனப் பெயர் பெறுகின்றது.

திருநீற்றின், பின் உள்ள தத்துவத்தை நோக்கின் அதன் வெண்மை, தூய்மையைக் குறிக்கின்றது. அதனை அணியும்போது நாமும் தூய்மை அடைகின்றோம்.

விபூதியின் சாம்பல் வடிவம், உலக அழிவையும், உடலின் அழிவையும் குறித்து நிற் கின்றது. "முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பர் ஆகின்றனர்". உலகம் எமது உடல் ஆகியவை அநித்தியம் ஆனவை. சிவமே மெய்ப்பொருள். எனவே நாம் எமது உடல் இருக்கும் போது நல்லவற்றைச் செய்து ஆத்மீகப் பேரின்பத்திற்கு வழிதேட வேண்டும் என்பது இதன் உண்மை ஆகும். அத்தோடு, இறைவனை மெய்யன்போடு வழிபட்டால், எமது தீவினைகள் பஸ்மமாகிவிடும் என்பதுவும் உண்மை.

விபூதி எப்போதும் தூய வெண்ணிறமாக இருக்கவேண்டும். நெருப்பினால், சுடப்பட்ட பசுவின் சாணமே விபூதி ஆகின்றது.

"சுந்தரமாவது நீறு" என்கின்றது ஞானசம்பந்தர் தேவாரம். திருநீற்றின் மகிமை சொல்லி முடியாது. தேவாரம், திருமந்திரம், நல்வழி, பழமொழிகள் யாவும் திருநீற்றின் பெருமை கூறுகின்றன.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும், சாரும் சிவகதி,
சிங்காரமான திருவடி சேர்வரே

என்கின்றது திருமந்திரம்.

*கடமையில் கருத்தாக இருப்பதே கடவுளுக்குச் செலுத்தும் முதல் பிரார்த்தனை.*

இவ்வாறு திருநீற்றின் பயன் பல கோடியாக இருக்க, இன்று, அதன் மகிமையை உணர்ந்து பயபக்தியுடன் அணியும் இளைய தலைமுறையினர் மிகச் சிலராகவே உள்ளனர். இத்தவறிற்கு குடும்பத்தின் பின்னணியே காரணம். பெற்றோர் நீற்றின் பெருமையை உணர்ந்து செயற்பட்டால், நிச்சயம் குழந்தைகளும் அதனைப் பின்பற்றுவர். இது சைவப் பெற்றோரின் பெருங் கடமைகளில் ஒன்றாகும். இது பற்றிய ஒரு வெண்பாவைக் கேட்டுப் பாருங்கள்.

சிவகருமம் செய்யார், திருநீறு அணியார்
தவ நிலையாம் சைவம்சாரார் - அவனிதனில்
காண்பரந்த பச்சை களாநிலை கைதொழார்
ஏன் பிறந்தார் மானிடராய் இன்று!!!

எனவே, இந்த இனிய பொழுதினிலே நாமும், நீராடி, தூய வெண்ணீறணிந்து, இறை நாமம் ஜெபிப்போமா? பல நிமிடங்கள் அல்ல, சில நிமிடங்களே!

---

## புண்ணியம் தேடி.....

*"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக்கிணங்க பணம் சம்பாதித்து நம் வாழ்க்கைப் படகைச் செவ்வனே செலுத்தவேண்டியது எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு நாம் நம்மை அறிந்து நம் செயல்களை அறிந்து நற்பணிகளை ஆற்றும் நல் மனம் கொண்டவர்களாக, தீய குணங்களை அடக்கி ஆள்பவர்களாக, நல்ல எண்ணங்களை எமக்குள்ளும் எம்மைச் சுற்றியுள்ளவர்க்குள்ளும் உருவாக்க வேண்டியதும் மிகவும் அவசியமானதும், தேவையானதும் ஆகும். ஆனால்.... எம்மில் எத்தனைபேர் இவ்வாறு செயற்படுகின்றார்கள்!.*

*நற்பண்புகளாலும் பழக்கவழக்கங்களாலும் நாம் சம்பாதிக்கும் நற்பெயர் அல்லது புண்ணியம் பணத்தைவிடப் பெறுமதியானது என்பதை நாம் உணர மறக்கின்றோம்.*

*எமது உடலுக்குத் தேவையான உடைகளைத் தெரிவு செய்யும்போது நாம் எத்தனை கடைகளுக்கு ஏறி இறங்குகின்றோம். தரம், நிறம், தன்மை என்று ஆராய்கின்றோம்.*

*ஆனால் எமது உள்ளம், மனம் சார்ந்த ஆரோக்கியத்திற்காக நாம் எதைச் செய்துள்ளோம். எவ்வளவு நேரத்தை ஒதுக்கினோம். மறுபிறப்பை நம்புகின்றீர்களோ இல்லையோ மரணத்தின் பின்பும் வாழ்பவர்களாக நீங்கள் உங்களை மாற்ற வேண்டும்.*

*தன்னைத் தானே ஆய்ந்தறிந்து தன்னை அடக்கி ஆள்வதே மனோபலம். அதுவே ஆளுமையும் ஆகும்.*

*உங்கள் சிந்தனையில் தோன்றும் நல்ல எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுங்கள். அதன் பயனாகக் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சி - நிறைவு - நல்மதிப்பு; பணத்தின் பெறுமதியைவிட அளப்பெரியது. மரணமில்லா அந்தப் பெருவாழ்வை வாழ்ந்துதான் பாருங்களேன் புண்ணியம்தேடி.....*

*-திருமதி வசந்தா விக்கினேஸ்வரன்-*

*நாம் உண்மையாக வாழ்வதென்பது கடமையைச் சரியாகச் செய்வதாகும்.*

# சைவ வாழ்வில் உணவுப் பண்பாடு

– திரு பொன். கோகிலன் அவர்கள் –

உயிர்களின் நிலவுகைக்கு உணவு இன்றியமையாதது. உலகில் தோன்றிய ஒவ்வொரு உயிரினங்களும் உண்ணும் வழக்கத்தினைக் கொண்டுள்ளன. அதற்காக அவை நன்கு இசைவாக்கம் அடைந்தும் காணப்படுகின்றன. மனித இனம் மட்டுமே தாம் உண்ணும் உணவினைச் சமைத்து உண்ணும் வழக்கத்தினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. மனிதன் தவிர்ந்த பிற உயிர்கள் உணவினைச் சமைத்து உண்ணும் பண்பாட்டை அறியாதன. மனிதருக்கு மட்டுமே இப் பண்பாடு தனித்துவமானது. சமைத்தல் என்ற சொல்லுக்கு "பக்குவப்படுத்தல்", "பாகம் செய்தல்" என்று பொருள் கொள்ளப்படும். சமையல் பல முறைகளில் இடம்பெறும். நீரிலிட்டு அவித்தல், அவித்து வேக வைத்தல், வறுத்தல், சுடுதல், வற்றலிடுதல், எண்ணெயில் இட்டுப் பொரித்தல், வேகவைத்தல், ஊற வைத்தல், துவைத்தல் என்றவாறு உணவு பாகம் செய்யப்படும்.

இந்த சமையல் முறைகள் இனத்துக்கு இனம் வேறுபட்ட தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. குறித்த ஒரு மக்கள் சமூகத்தின் பண்பாட்டின் தன்மைக்கேற்ப உணவு நடைமுறைகளும் திரிபுபட்டுக் காணப்படுகின்றது. சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவர்தம் உணவுப் பழக்க வழக்கங்களை அறிவது அவசியமாகின்றது. பண்பாட்டின் அடையாளமாகத் திகழும் உணவுப் பழக்கவழக்கங்கள் காலநிலை, வாழ்நிலத்தின் விளைபொருட்கள், தொழிலமைவுகள், சமூகபடிநிலைகள், சமய நிலவரங்கள், உற்பத்திமுறை ஆகியவற்றின் பொருட்டு அமையும்.

தமிழர்கள் பெரிதும் பரவியுள்ள பகுதியாகப் புவியின் மத்தியகோட்டுப் பகுதி காணப்படுகின்றது. இது அயன மண்டல காலநிலை நிலவும் பகுதியாகும். விளங்கக் கூறின் வெப்பக் காலநிலை வலயமாகும். இங்கு பிரதான விளைபொருளாக நெல் என்ற தானியம் காணப்படுகின்றது. இங்கு வாழும் மக்கள் பிரதானமாக விவசாயம் மேற்கொள்ளும் ஜீவனோபாயிகளாகக் காணப்படுகின்றனர். ஆகையால் தமிழர்களின் பிரதான உணவாக நெல் அரிசிச்சோறு காணப்படுகின்றது. நீராகாரம் எனும்போது கூழ், கஞ்சி என்பன பிரதானமாகின்றன. இவை காலநிலைக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட விசேட உணவுகளாகும். தமிழர்களின் உணவு நடைமுறையில் கணிசமான பங்கு சமயத்திற்கு உண்டு. தமிழர் பண்பாட்டில் சைவத்தின் தாக்கம் உணவு வழக்கங்களுக்கு எல்லையிடுகின்றது.

வேதகாலத்திற்கு முன்னரே ஆரியர்கள் எத்தகைய உணவினை உண்ண வேண்டும் என்பதனை நன்கு அறிந்து வைத்திருந்தனர். வெறுமனே பசித்தூண்டலுக்காகவும், உடலை வளர்க்கவும் தமிழர்கள் உணவினை உட்கொள்ளவில்லை. மாறாக ஆன்மீக நலனுக்காகவும், நீண்டகாலம் உயிர் வாழ்வதற்காகவும் உணவினை உட்கொண்டனர். ஆன்மீகம் எனும்போது தமிழர்கள் சைவ உணவினை மட்டுமா உண்டார்கள்? எனும் பெரிய கேள்வி எம்மிடையே தோன்றும். இல்லை வேதகாலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும்

*கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தி படைத்தது.*

விலங்குகளை வேட்டையாடி அசைவ உணவு களை உட்கொள்ளும் மரபு காணப்பட்டது. சைவ அசைவ உணவுகளை ஒரே சமயத்தில் உண்ணும் வழக்கத்தினைத் தமிழர்கள் கொண்டிருந்தனர். ஏன் வேதகாலத்திற்கூட பலியிடுதல் மரபும், மாட்டிறைச்சி உட்கொள் ளும் மரபும் காணப்பட்டுள்ளது. புலால் உணவை மனுஸ்மிருதியில் அனுமதித்திருந்த போதும் கொல்லாமை எனும் ஜீவகாருண்ய அடிப்படையில் தாவர உணவு உண்பதையே பொதுவாகப் பரிந்துரை செய்துள்ளது. மனுஸ் மிருதியில் கூறப்பட்ட கருத்துப்படி, "புலால் உண்பதில் குற்றமில்லை. ஆனால் அதைத் தவிர்ப்பதால் அதிகளவு நன்மை ஏற்படும்" என்று கூறியுள்ளதை இங்கு நோக்கலாம்.

ஒரு சமூகத்தின் பண்பாடு என்பது அச்சமூகத்தின் நடைமுறை சார்ந்த தனித்துவ மான அடையாளமாகக் காணப்பட்ட போதிலும் அது காலத்திற்குக் காலம் பட்டை தீட்டப்பட்டு வந்துள்ளது. அவ்வாறே உணவு நடைமுறை களும் செம்மையாக்கப்பட்டுள்ளன. சமயத் தின் தாக்கம் இங்கு வல்லாதிக்கம் பெறு கின்றது. அந்தவகையில் தமிழர்களது உண வுப் பண்பாடும் காலத்திற்குக் காலம் மாற்றப் பட்டு வந்துள்ளது. அதிலும் சைவத்தின் தாக்கமே மேலாதிக்கம் பெற்றுள்ளது. புனித நூலான பகவத்கீதை, "சாறுள்ளதும் பசியைப் போக்கவல்லதும் முழுமையானதும் நமக்கு ஒத்துக்கொள்ளக் கூடியதுமான உணவுதான் உடலின் ஆரோக்கியத்திற்கும் ஆன்மீக முன் னேற்றத்திற்கும் ஏற்றது" என்று குறிப்பிடுகின் றது. நாம் உண்ணும் உணவில் அறுசுவை கலந்திருப்பது அவசியமாகிறது. அறுசுவை களில் ஏதோவொரு சுவை அதிகமாகக் காணப் படுமாயின் அது உடல் நலத்திற்குக் கேடாக அமைகிறது. பொதுவில் அதிக கசப்போடு கூடியவை, புளிப்பானவை, அதிக காரமானவை, மிகவும் உவர்ப்பானவை, உஷ்ணமானவை, உலர்ந்தவை, எளிதில் எரியக்கூடியவை, அதிகம் இனிப்பானவை, பழைய உணவுகள், உருசியற்ற உணவுகள், பழுதடைந்த உணவு கள் தவிர்க்கப்பட வேண்டியவை.

அகவயம் சார்ந்த பண்பாட்டுக் கூறு கள் செம்மைப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வரும்போது சிறந்ததொரு நாகரிகம் உருவாக் கம் பெறுகின்றது. உணவுப் பண்பாட்டைப் பொறுத்தவரையில் விதிக்கப்பட்டவை, விலக் கப்பட்டவை என்ற பிரிவில் நாகரிகம் மிளிர் கின்றது. இதில் சமயத்தின் தாக்கம் காத்திர மானது. சைவத்தின் வழி விலக்கப்பட்டவை புலால் உணவுகள்; விதிக்கப்பட்டவை தூய சைவ உணவுகள். சைவ உணவுகளை உண்ணும்போது கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

1) உணவு உண்ணும் முன் ஸ்நானம் செய்தோ, முகம், கை, கால்களைக் கழுவிய பின்னரே உட்கொள்ள வேண்டும்.
2) உணவு உண்ணும் இடம், காற்று, வெளிச்சம் என்பன நன்கு கிடைக்கக்கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.
3) கழுவிய வாழை இலை, தாமரையிலைகளில் உண்ணுதல் நல்லது. இலைகள் இல்லாத பட்சத்தில் சுத்தமான உண்கலன்களைப் பயன்படுத்தலாம்.
4) உணவு உண்ணும் முன் இறைவனுக்கு நிவேதனம் செய்த பின் உண்ண வேண்டும்.
5) உணவு உண்ணும்போது சிந்தாமல் வீண்வார்த்தை பேசாமல், உண்ணும் உணவில் கவனம் செலுத்தி, நன்கு அரைத்து உண்ண வேண்டும்.

*உண்மையின் புன்முறுவலே அழகு.*

6) மயிர், ஈ, கொசு ஆகிய அசுத்தங்கள் உண்ணும் உணவில் இருந்தால் அவைகளுடன் சிறிது அன்னமும் எடுத்து எறிந்துவிட்டு கை கழுவியபின் உண்ண வேண்டும்.

7) இரவில் உணவு உண்ணும்போது விளக்கு அணைந்தால், கையால் உணவைப் பொத்திக்கொண்டு மௌனமாய் சிவ மூல மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருந்து விளக்கேற்றிய பின் கலத்தில் உள்ளதையே புசித்துவிட்டு எழுந்துவிடல் வேண்டும்.

8) மச்சம், மாமிசம், முட்டை முதலிய புலால் உணவுகளை உண்ணக்கூடாது. அவை அகத்துக்கும், சாத்வீக குணத்துக்கும், மன அமைதிக்கும் ஏற்றதல்ல.

9) அமர்ந்திருந்தே உணவு உட்கொள்ளல் வேண்டும். நின்றுகொண்டு உணவு உட்கொள்வது ஆரோக்கியமானதல்ல.

முதலிய நடைமுறைகள் "போசன விதி" என்று கூறப்படுகிறது. சைவ உணவு பழக்கத்தில் மேற்கூறப்பட்ட உணவுப் பண்பாடு காத்திரமானதாக அமைகிறது. இந்த போசன விதியில் கூறப்பட்ட விடயங்கள் அறிவியல் ரீதியாக உடலின் ஆரோக்கியத்திற்கு ஏற்புடையதாகக் காணப்படுகின்றது.

சைவ விழாக்களும் சைவ உணவுப் பண்பாட்டில் இன்றியமையாதனவாக காணப்படுகின்றன. இந்த விழாக்கள் சார்ந்த உணவு நடைமுறைகள் காலநிலை ரீதியாகப் பருவ மாற்றங்களை கருத்திற்கொண்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அவை பற்றி விரிவாக நோக்குவது பயனுடைய செயலாக அமையும். இந்துசமய விழாக்கள் எனும்போது தைப் பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப் பிறப்பு, தீபாவளி என்பன மட்டுமல்லாது கோயில் மகோற்சவங்கள், நவராத்திரி காலம், விரத அனுட்டானங்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். ஒரு வருடத்தில் முதல் ஆறு மாத காலப்பகுதி உத்தராயண காலப்பகுதி என்றும் மீதம் இருக்கும் ஆறு மாத காலப் பகுதி தட்சிணாயன காலப்பகுதி என்றும் கூறுவர். இந்த பகுப்பு சூரியன் புவிக்கு உச்சம் கொடுக்கும் கணிப்பை அடிப்படையாகக் கொண்டது. உத்தராயண காலப்பகுதி என்பது வெப்பநிலை உயர்வாகக் காணப்படும் காலப்பகுதி ஆகும். தட்சிணாயன காலப்பகுதி குளிர் நிலவும் காலப்பகுதி ஆகும். உத்தராயண காலப்பகுதியில் கொண்டாடப்படுவது தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, கோயில் விழாக்கள், குளிர்த்தி, சித்திரைக் கதை என்பனவாகும். தட்சிணாயன காலப்பகுதியில் தீபாவளி, நவராத்திரி என்பன கொண்டாடப்படுகின்றன. உத்தராயண காலப் பகுதி முடிந்து தட்சிணாயன காலப்பகுதி தொடங்கும் நாளில் கொண்டாடப்படுவது ஆடிப் பிறப்பாகும்.

சூரியனின் வெப்பநிலை மாறுபாடுகளுக்கு ஏற்ப உடலில் பசித்தூண்டலும் மாறுபட்டு அமையும். சூரியனின் வெப்பநிலை குறைவடையும்பொழுது உடலின் வெப்பநிலையும் குறைவடையும். அப்பொழுது உடலின் வளர்ச்சி தொழிற்பாடு மாறுபட்டுத் தூண்டப்பட்டு அதற்குத் தேவையான சக்தியைப் பெற்றுக்கொள்வதற்கு பசித்தூண்டல் அதிகமாகக் காணப்படும். அதனால் அதிக உணவு உண்ண நேரிடும். அதிகளவு உணவு உட்கொள்ளும் போது உடலின் வெப்பநிலைக் குறைவு சீர்செய்யப்படுகிறது. இக்காலப்பகுதியில் அதிகளவு நீராகாரம் ஏற்கப்படுவதில்லை. குறிப்பாகச் சொன்னால் தீபாவளி, பொங்கல்

முதலான பண்டிகைகளில் கடின செரிமான உணவு வகைகள் பரிமாறப்படுகின்றன. குறிப்பாக அதிகம் காபோவைதரேட் நிறைந்த உணவு வகையான அரிசி, அரிசிமா முதலிய வற்றால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் பாகம் செய்யப்படுகின்றது. மேலும் நவராத்திரி காலத்தில் புரதம் நிறைந்த கடலை, பயறு முதலான கடின செரிமான பிரச்சினை ஏற்படுவதில்லை. சூரிய உஷ்ணம் அதிகமான காலத்திலே கோயில் மகோற்சவங்கள், குளிர்த்தி, சித்திரக்கதை முதலிய விழாக்கள் இடம்பெறுகின்றன. இக் காலத்தில் வெப்ப நிலை அதிகமாக நிலவும். இதனால் மனித உடல்கள் உஷ்ணமடைகின்றன. இந்த உஷ்ண நிலையைத் தவிர்ப்பதற்கு அதிகமான நீராகாரங்கள் ஏற்கப்படுகின்றன. இதைக் கருத்திற் கொண்டே இந்துக்கள் இக்காலத்தில் "தாக சாந்தி மையங்கள்" அமைத்து மோர், சக்கரைத் தண்ணி கொடுப்பது வழக்கமாக உள்ளது. குளிர்த்தி காலத்தில் கஞ்சி, இளநீர், கூழ் என்பன வழங்கப்படுகின்றன. மேலும் வெப்ப காலப்பகுதிக்கும் குளிர்காலப் பகுதிக்கும் நடுப் பகுதியில் கொண்டாடப்படுவது ஆடிப்பிறப்பாகும். இந்நாளில் பனங்கட்டி, கூழ் சிறப்பாக தயாரித்து உண்ணப்படுகின்றது. வெப்பநிலையில் இருந்து குளிர் நிலைக்குச் செல்வதற்கு உடலைத் தயார்ப்படுத்துவதற்கு இந்தப் பனங் கட்டிக்கூழ் காத்திரமானதாகக் காணப்படுகின்றது. இவ்வாறு சைவ விழாக் காலத்தில் உண்ணப்படும் உணவு வகைகளுக்கு பின்னால் பெரிய அறிவியல் காணப்படுவது ஆச்சரியமே!

தமிழர் மத்தியில் பிரதான உணவு உண்டு முடிந்தபின் தாம்பூலம் (வெற்றிலை, பாக்கு) மெல்லும் மரபு மகிழ்ச்சியின் குறியீடு ஆகும். இறந்தவர்களின் வாயில் வெற்றிலை, பாக்கு வைத்து அனுப்புதல் அவர்கள் மகிழ்ச்சியாக மறு உலகப் பயணம் செய்கின்றார்கள் என்பதன் குறியீடாகும். குறித்த ஒரு சமூகத்தில் அதன் குலக்குறிச் சின்னமாக விளங்கும் குறிப்பிட்ட பறவை அல்லது விலங்கினை அச் சமூக மக்கள் இறைச்சிக்காக உட்கொள்வதில்லை அவ்வாறு செய்தால் குல முதல் வரை கொன்று உண்பதற்கு சமனாகும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. மேலும் இறைச்சிக்கு எடுக்கப்படும் பறவை அல்லது விலங்கு ஆணாக இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத நியதியாகும். பெண் உயிரினத்தின் மூலமாக இருப்பதால் அது விலக்கப்படுகிறது என்பது குறியீடாகும். இந்தியாவின் தென் மாவட்டங்களில் "பயறு அவித்தல்" என்பது இறப்பின் அல்லது இழப்பின் குறியீடாக காணப்படுகின்றது. மேலும் கருவுற்ற பெண்களைத் தாய் வீட்டுக்கு அழைத்துச் செல்லும்போது சுற்றி உள்ளவர்களுக்கு பழம்கொடுப்பது தமிழ் மக்களின் வழக்கம் ஆகும். நெல்லை மாவட்டத்தில் இச்சடங்கினை "பழம் போடுதல்" என்று கூறுகின்றனர். இங்கே பழம் என்பது குழந்தையின் முழுமையான வளர்ச்சியைக் குறிக்கும் குறியீடாகும்.

யாழ்ப்பாணத்து சைவ உணவு நடைமுறைகளிலும் சில குறியீட்டு முறைகள் காணப்படுகின்றது. விரத அனுட்டானங்களின்போது முருங்கைக்காய் சமைப்பதில்லை. ஏனெனில் அவ்வுணவு காம உணர்வினைத் தூண்டவல்லது என்பதால் விரதகாலப் பகுதியில் காம உணர்வினைத் தவிர்ப்பதற்காக முருங் கைக்காய் தவிர்க்கப்படுவது ஒரு குறியீடாக உள்ளது. அபரக்கிரியையான அந்தியேட்டியில் பாகற்காய் சிறப்பாகச் சேர்க்கப்படுகின்றது. இது எம்முடன் இருந்த ஒருவர் எம்மை விட்டுப் பிரிந்து செல்கின்றார் என்ற கசப்பான உண்மையினை உணர்த்துவதற்கான ஒரு

குறியீடாக அமைந்துள்ளது. பொதுவாக கீரை வகைகள் ஆலயங்களில் சமைப்பது தவிர்க்கப்படுகிறது. காரணம் கீரையினங் களுக்கென்று விளைநிலம், விளைகாலம் என்றொன்றில்லை. அவை எங்கும் எப்பொழு தும் வளரும் தன்மை வாய்ந்தவை. அதனால் கீரை ஏழைகளின் கடைசி உணவாகக் கொள் ளப்படுகின்றது. எனவே தலைவனான முதல் வனுக்கு கடைநிலை உணவான கீரை யினைப் படைக்கக்கூடாது எனும் குறியீடாக இது காணப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு உணவுப் பழக்க நடைமுறைகளும் ஏதோ ஒரு கருத்தைப் புலப்படுத்தும் தன்மை வாய்ந்த தாகக் காணப்படுகின்றது.

சைவர்களின் உணவுப்பண்பாடு வெறு மனே உண்ணுதல் என்ற மரபுடன் நின்று விடாது கொடுத்துண்ணுதல் என்ற மரபையும், தொன்றுதொட்டு பேணி வருகின்றது. தமிழில் கொடுத்து உண்ணும் மரபு சிறப்பாகக் காணப் படுகின்றது. இதனையே ஐயம்இட்டுண் என்று ஔவையார் கூறுகிறார்.

விருந்தோம்பல் என்பது "புதுமை" என்று அழைக்கப்படுகின்றது. தெரியாதவர் களுக்கு உணவளித்தல் விருந்தாகும். வழிப் போக்கர்கள் அல்லது நீண்ட பயணம் மேற் கொள்ளும் துறவிகள் இவ்விடம் வந்து, பசி யாறிச் செல்வதும் விருந்தாகும். விருந்து கொடுத்தல் இன்முகத்தோடு நடைபெற வேண் டும்.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"**

என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

விருந்து உண்பவரை இறைவனது அடியார்களாகக் கண்டு உணவு கொடுத்தல் வேண்டும். சைவப்பண்பாட்டில் காரைக்கால் அம்மையார், இளையான்குடிமாற நாயனார், அப்பூதியடிகள், சிறுத்தொண்டர் எனப் பல நாயன்மார்களது வரலாற்றில் விருந்தின் சிறப்பு மாகேசுவர பூசையோடு பேசப்படுவதைக் காணலாம். தமிழர் தம் பண்பாட்டில் கடை யேழு வள்ளல்களும் விருந்தின் சிறப்பறிந்து பேணியுள்ளனர். கண்ணகி கோவலனைப் பிரிந்தபோது இல்லறத்தானது கடமையாகிய விருந்தினைச் செய்ய முடியவில்லை என்றே வருந்தினாள். மணிமேகலை அட்சய பாத்திரம் பெற்று வறியோர்க்கு உணவளித்து வந்த வரலாறும் எமது பண்பாட்டில் உண்டு. பசித் தீயை நீக்கவேண்டும் என்பதற்காக ஜீவ காருண்ய ஒழுக்கம் பூண்டொழுகிய வள்ளலார் வடலூரில் அணையா அடுப்பினை ஆரம்பித் தார். இவ்வடுப்பு இன்றும் அணையாது தின மும் வறியவர்க்கும் அடியவர்க்கும் உண விடப் பயன்படுகின்றதைக் காணலாம்.

விருந்தோம்பல் என்பது இல்லறத்தான் ஒவ்வொருவரும் பூண்டொழுக வேண்டிய கடமையாகும். பிறருக்குக் கொடுக்க முடியாத நிலை வந்தபோதும் விருந்தினை உயிராகக் கொள்ள வேண்டும். நாம் உண்ணும் உண வில் ஒருபிடி உணவினையாவது பிறருக்குக் கொடுத்து உண்ண வேண்டும். அவ்வாறு கொடுக்க முடியாத நிலைவரினும் முகம் மலர்ந்து இன்னுரையாவது பேசவேண்டும் என்பது தமிழர் பண்பாடாகும். இதனையே திருமூலர்,

**"யாவர்க்கு மாம்இறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம் உண்ணும்போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே"**

என்று கூறினார். அனைத்து சமூக படிநிலைகளில் வாழும் மனிதர்களுக்கு திரு மூலர் கூறும் விருந்தோம்பல் இயலுமான தொன்றாகும்.

*சோதனைகள் அதிகமாக இருந்தால் சுகம் பெரிய அளவில் வரப்போகிறது என்று அர்த்தம்.*

# திருக்குறள் - உலகப் பொதுமறை

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்றும்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை"

என்றும் மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார்.

தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கதியாவர்; என்னும் வினாவுக்கு விடையாகக் கம்பனும் திருவள்ளுவரும் என்று கூறுவர்.

திருவள்ளுவர், தமிழ் கூறும் நல்லுலகிற்கு மாத்திரம் உரியவரல்லர். அவர் கால, தேச வர்த்தமானங்களைக் கடந்து நிற்கும் பெற்றியர். அவ்வாறே கம்பரும் உலக மகாகவி என்னும் பெருமைக்குரியவர். மக்கள் மண்ணில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் நல்லவண்ணம் வாழ்வதற்கும் நெறியும் முறையும் வகுத்து வழங்கியவர்கள். அவர்கள் காட்டிய சீரான பாதையில் நம் வாழ்க்கையை இட்டுச்சென்றால், ஒரு பொல்லாப்பும் இல்லை; முழுதும் உண்மை.

திருவள்ளுவரை உலக மகாகவியாக்கியது, அவர் யாத்த "திருக்குறள்" என்னும் திருநூல். அந்நூல் தமிழ் வேதம் ஆகக் கொள்ளப்படுகிறது. திருக்குறள், உலகப் பொதுமறையும் ஆகும். இவ்வுலகில் வாழுகின்ற அனைவருக்கும் ஏற்புடைய பொதுமறை நூல் என்றால் மிகையாகாது.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அடைதல் வாழ்க்கைக் குறிக்கோள் ஆகும். வாழ்க்கைப் பயன் என்பதும் அதுவே.

திருக்குறள் நூலின் சிறப்பு, அருமை, பெருமை, மாண்பு, மகத்துவம் என்பன பற்றித் திருவள்ளுவமாலை நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் சில, பின்வருமாறு அமைகின்றன.

"ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததன் பின் - போயொருத்தர்
வாய்க் கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க் கேட்க வீற்றிருக்கலாம்"

-நத்தத்தனார்.

"கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

-இடைக்காடர்.

ஒரு நூல் நிலையக் கதவு திறக்கும்போது, ஒரு சிறைச்சாலைக் கதவு மூடப்படுகிறது.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

-ஔவையார்.

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்
உள்ளுதொறுள்ளு தோறும் உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு"

-மாங்குடி மருதனார்.

மேலும், நக்கீரனார், அரிசில் கிழார், முகையலூர்ச் சிறு கருந்தும்பியார், மதுரைத் தமிழ் நாகனார், மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார் போன்ற பெரும் புலவர்களின் பாடல்களும்; ஆக மொத்தம் ஐம்பத்தொரு புலவர்கள் புனைந்த பாடல்கள் திருவள்ளுவ மாலையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தற்காலத்தில்; திருக்குறள் பாடல்களின் உலகளாவிய நோக்கும் போக்கும்; பொதுமைக் கருத்துக்களும் யாவர்க்கும் ஏற்புடைத்தன எனக் கொண்டு; திருக்குறள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை, அந்நூலுக்கு மேலும் பெருமை தருவதாகும்.

**தமிழ்மறை:**

திருக்குறள், தமிழ்மறை எனக் கொள்ளப்படுகிறது. அது, மானுடத்தின் பொதுமறையும் ஆகும். அத்துடன் வையத்துள் வாழ்வாங்கு வாழும் விழுமியம் சார் முறைகளையும் மனிதர் களுக்கு எடுத்துக்கூறும் வாழ்வியல் திருநூல் ஆகவும் விளங்குகிறது.

திருக்குறள் நூலில் கூறப்பட்டுள்ள அத்தனை வாழ்வியல் கருத்துக்களும் விழுமியங் களும்; மனிதரின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் யாவராலும் கடைப்பிடிக்கக் கூடியன. அந்நூலின் மற்றொரு சிறப்பாக அது அமைகின்றது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

-திருக்குறள் 50.

இவ்வுலகில் வாழவேண்டிய நெறியும் முறையும் அறிந்து, அறநெறியில் நின்று வாழ்பவர், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவர், என்பது இக் குறட்பா தரும் கருத்து ஆகும்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக"

-திருக்குறள் 391.

கற்கத் தகுந்த நூல்களை, ஐயந் திரிபு இன்றிக், குற்றமறக் கற்க வேண்டும்; கற்றுத் தெளிவு பெற வேண்டும். அவ்வாறு கற்றுத் தெளிவு பெற்ற பிறகு; கற்ற கல்வி, பெற்ற அறிவுக்குத் தக்கவாறு; அவற்றினின்றும் கடுகு அளவேனும் பிறழாதவாறு, நெறியில் நின்று, ஒழுக வேண்டும். மேற்படி குறள் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

*அன்புள்ள மனம் சலனமற்று ஓடும் நதிபோன்றது.*

நோயும் கூறி, நோய்க்கு மருந்தும் கூறி மக்களை நல்வழிப்படுத்தும் சமூக மருத்துவராகத் திருவள்ளுவர், விளங்குகிறார். கேட்டு நடந்தால் உண்டு வாழ்வு; மறுத்தால் அனைவர்க்கும் தாழ்வு, தவிர்க்க முடியாததாகிவிடும்.

### கற்றல் - நிற்றல்:

கற்றல், நிற்றல் இரண்டும்; வாழ்க்கை எனும் நாணயத்தின் இரு பக்கங்கள். அவற்றுள் ஒன்று தேய்ந்து பழுதுபட்டாலும் வாழ்க்கை அதன் பெருமதியை இழந்துவிடும், என்பது திருவள்ளுவரின் ஆணித்தரமான கருத்தும் உறுதியான நிலைப்பாடும் ஆகும். திருக்குறளைக் கற்றால் மட்டும் போதாது, கற்றபடி அவற்றை வாழ்க்கையில் பின்பற்றி ஒழுகவும் வேண்டும். ஒழுக மறந்தாலோ, மறுத்தாலோ, திருக்குறள் நூலைக் கற்றதனால் எவ்வித பயனும் இல்லை. அந்நிலையில், நூல் கற்றவரிலும், கல்லாதார் நல்லவர்கள் என்னும் கூற்று, பொருள் பொதிந்ததாகிவிடும்.

சுருங்கக் கூறின், வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறை அறிந்து; மண்ணில் நல்ல வண்ணம் வாழும் நெறி உணர்ந்து; மானுடம், மனிதம் என்பவற்றின் பொருள் தெளிந்து; சீரும், செம்மையும் நிறைந்த மனித வாழ்வு, முழுமையாக வாழ்வதற்கு, வழிகாட்டும் கலங்கரை விளக்கம் ஆகத் திருக்குறள் நூல் திகழ்கிறது.

### திருக்குறள் இயற்றப்பட்ட காலப் பின்னணி:

திருக்குறள் இயற்றப்பட்ட காலம்; தமிழ்ச் சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த சங்கமருவிய காலம் என்பது ஆய்வாளர் தரும் கருத்து ஆகும். கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் ஆறாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதி, சங்கமருவிய காலம் என்பர். இக் காலப் பகுதியில், மக்கட் சமுதாய நிலை பொதுவாக ஒழுக்கச் சீரகேடுகளைக் கொண்டிருந்தமை யினாலும், அறநெறிகள் வாழ்க்கையில் புறக்கணிக்கப்பட்டு வந்தமையினாலும், மக்களை அத்தகைய இழிநிலை வாழ்க்கையிலிருந்து மீட்டு; நன்னெறியில் ஒழுகச் செய்யும் நோக்கில்; அறம், விழுமியங்கள், மனிதப் பண்பாடுகள் சார்ந்த நூல்களே பெரும்பாலும் எழுந்தன.

ஒரு நாட்டின் உயர்வு, செழுமை, சீர், சிறப்புக்கள் யாவும் அந்நாட்டிலே வாழும் மக்களின் மனப் பண்பாட்டினைப் பொறுத்ததாகும். "மனம் போல வாழ்வு", "எண்ணமே வாழ்வு" என்பன ஆன்றோர் வாக்குகள். "மனமது செம்மையானால், மந்திரம் தேவையில்லை" என்பர்.

சங்கமருவிய காலத்தில் வாழ்ந்த மக்களின் மனப் பண்பாடு, அதன் விளைவாக வாழ்க்கைப் பண்பாடு என்பவற்றை மேன்நிலைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. எண்ணங்களின் ஊற்றிடம், மனம். எண்ணங்களே, வாய்மூலம் பேச்சு ஆக வெளிவருகின்றன. தொடர்ந்து செயல் ஆக உருவெடுக்கின்றன. எண்ணங்கள், நேர்மறையாக அமைந்தால்; சொற்கள் நன்மை பயப்பனவாய் விளங்கும். செயல்களும் நன்மையானவையாக அமையும்.

மனித வாழ்வின் உயர்வு, மனிதர்களின் மனப்பண்பாட்டின் தரத்தை ஒட்டியதாகவே அமைகின்றது. சங்கமருவியகால இலக்கிய நூல்கள் பெரும்பாலும் அறம், ஒழுக்கம், பண்பாடு என்பவற்றை உணர்த்துவனவாகவும்; மனப்பண்பாட்டை வளர்ப்பனவாகவும் விளங்குகின்றன.

*அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.*

"பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என மனிதப் பண்பு என்பதற்கு வரைவிலக்கணம் தருகிறது, கலித்தொகை என்னும் பண்டைய தமிழ்நூல். "பாடு" என்ற சொல், முறைமை சமுதாய ஒழுக்கம் என்னும் கருத்துக்களைக் கொண்டுள்ளது. "பாடறிந்து ஒழுகல்" என்பது தாம் வாழும் சமூக சூழலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதப் பண்புகள், வாழ்க்கை விழுமியங்கள் ஆகியவற்றை அறிந்து; அவற்றுடன் இணைந்து, அவற்றின் நலம் பேணி நடக்கும் நற்குணப் பண்பு ஆகும்.

**திருக்குறள் - பண்பாட்டுக் களஞ்சியம்:**

பிற மனிதர்களின் குண இயல்பை அறிந்து, அநுசரித்து நடக்கும் நற்குணம் கொண்டவர்கள் மாமனிதர்கள் ஆவர். முரண்பாடுகள் தவிர்த்து வாழும் கலையை அறிந்தவர்கள், அப்பெருமக்கள். அத்தகையவர்களே, பண்புடையார்கள் என உலகத்தில் மதிக்கப்படுகிறார்கள்.

*"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்"*

-திருக்குறள் 996.

பண்புடையவரிடத்தில் உலகம் பொருந்தியிருப்பதாலேயே, அது இற்றைவரை நிலைபெற்று இயங்குகின்றது. அது இல்லையென்றால் உலகம் மண்ணில் புகுந்து, அழிந்து போகும் என்பது இக்குறட்பா தரும் கருத்து.

*"அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்*
*மக்கட்பண்பு இல்லாதவர்"*

-திருக்குறள் 997.

மனிதப் பண்புகள் இல்லாதவர்கள், அரம்போன்று கூர்மையான அறிவு உடையவராயினும்; ஓரறிவுடைய மரத்தைப் போன்றவரேயாவர்.

மனித அங்க அடையாளங்களுடன் பிறந்தும்; மனிதப் பண்புகள், குணநலன்கள், விழுமியங்கள் ஆகியவற்றைப் போற்றி; வாழ்வில் கடைப்பிடித்து வாழாதவர்கள், மனித வடிவில் உள்ள விலங்குகள் ஆவர்.

பண்புடைமை என்பது சான்றாண்மை. அதாவது நீதி, நியாயம் ஆகியவற்றிலிருந்து வழுவா நன்நடத்தை.

"நீதிவழுவா நெறிமுறையில் இட்டார் பெரியோர்; இடாதோர் இழிகுலத்தோர்" என ஔவையார் கூறுவதன்மூலம், மனிதர்களில் இரண்டு வகையினரே உள்ளனர் என்பதும்; நீதிநெறிமுறையில் தம் வாழ்க்கையை இட்டு வாழ்பவர் உயர் குலத்தவர் மற்றும் நீதிநெறி முறைகளைப் புறக்கணித்து, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ்பவர், இழிகுலத்தோர் என்றும் ஆக இரண்டு சாதியினரே மனிதர்களில் உள்ளனர் எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

பண்புடைமையின் பிரதான அங்கம், நீதி வழுவா நெறிமுறையில் வாழ்வதாகும். திருக்குறள் நூல் அத்தகைய உயர் வாழ்க்கைக்கு நெறியும் முறையும் அமைத்துத் தருகிறது. திருவள்ளுவர் மனித குலத்துக்கு வழங்கிய முப்பால் - முக்கூட்டு மாத்திரைகள், தீராத

*ஒருவனின் அறிவை அறிந்துகொள்வதற்கு அவனது பேச்சே அளவுகோல்.*

சமூக நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள மனித சமுதாயத்தினைச் சீர்செய்து, மீட்டுச், செம்மை நலம் சார்ந்த சமுதாயமாகப் பரிணமிக்கச் செய்யும் சஞ்சீவி அருமருந்தாகும்.

முப்பாலில் அறத்துப்பால் வாழ்க்கை நெறியினையும்; பொருட்பால் நாட்டு நடப்பினையும்; இன்பத்துப்பால் இனிய வீட்டு வாழ்வினையும் தெளிவாக எடுத்துக் கூறி மனிதர்களை வழிப்படுத்துகின்றன. அந்த வகையில், திருக்குறள் நூல் ஒரு மனித பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்குகின்றது.

உலகின் எல்லா உயிரினங்களையும் தம் உயிர்போலக் கருதி, மனிதப் பண்புடன் மனித விழுமியங்களைப் போற்றி, அன்றாடம் வாழ்வில் பேணி, அநுசரித்து; இயன்றளவு பிறருக்கு வேண்டிய உதவிகளை நல்கி; வையத்துள் வாழ்வாங்கு மனிதர்கள் வாழ்வதற்கு, அவர்களை இட்டுச் செல்லலே, திருவள்ளுவரின் முதன்மை நோக்கம் ஆகும். திருக்குறள் மூலமாக அதனை நிறைவேற்றுகிறார்.

## திருக்குறள் - சில விபரங்கள்:

சங்கமருவிய காலத்தில் எழுந்த அற ஒழுக்கம் சார்ந்த நூல்கள் கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படுகின்றன. அவற்றின் தொகை பதினெட்டு ஆகும். அறநூல்களுள் முதன்மை வாய்ந்தது திருக்குறள்.

திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக் குறட்பாக்கள் வீதம், மொத்தம் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் உள்ளன.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகள் உள்ளன. அதனால் திருக்குறள் முப்பால் நூல் என அழைக்கப்படுகிறது.

திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர். பரிமேழலகர் எழுதிய உரையே பெரிதும் ஏற்கப்பட்டுப் பின்பற்றப்படுகிறது. மணக்குடவர் என்பாரின் உரையே காலத்தால் முந்தியது என்று கூறப்படுகிறது. பரிதியார், காலிங்கர், பரிப்பெருமாள் ஆகியோர் ஏனைய உரையாசிரியர்கள் ஆவர்.

## திருவள்ளுவரின் சிறப்புப் பெயர்கள்:

தேவர், நாயனார், முதற் பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதாநுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர்.

## திருக்குறள் நூலின் சிறப்புப் பெயர்கள்:

முப்பானூல், உத்தரவேதம், தெய்வத்திருநூல், பொய்யாமொழி, வள்ளுவம், தமிழ்மறை, பொதுமறை.

திருவள்ளுவர் குறிப்பிட்ட கடவுளின் நாமத்தை, நூலில் குறிப்பிடவில்லை. ஆயினும் கடவுளைக் குறிக்கும் பின்வரும் பொதுப் பெயர்களைக் கையாண்டுள்ளார். ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் எனக் கடவுள் போற்றப்படுகிறார்.

வாழ்க்கைக்குரிய அறநெறிகளை; இல்லறம், துறவறம் என்னும் இருவகை வாழ்க்கைகளின் அடிப்படையில்; திருக்குறளில் விளக்கியுள்ளார்.

**நூற் பெருமை:**

"வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒரு குலத்துக் கொரு நீதி"
-மனோன்மணியம்.

"எல்லாப் பொருளு மிதன்பாலுள விதன்பால்
இல்லாத வெப்பொருளு மில்லையாற் - சொல்லாற்
பரந்தபா வாலென் பயன் வள்ளுவனார்
சுரந்தபா வையத் துணை"
-மதுரைத் தமிழ்நாகனார்.

"பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந் தொறுஞ் சேரச் - சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல்லால்"
-அரிசில் கிழார்.

---

## சிவபெருமான் அருள் கிடைக்க...


மனத்தூய்மையின்றி ஒருவன் கோயிலுக்குச் சென்றால் அவன் ஏற்கனவே செய்துள்ள பாவங்களுடன் மற்றொரு பாவத்தையும் செய்து வருகிறான் என்று அர்த்தம். ஆகவே அவன் தன் வீட்டைவிட்டு கோயிலுக்குப் புறப்படும்போது இருந்ததைவிட இன்னும் இழிந்த நிலையில்த்தான் ஆலயத்தினின்றும் வீட்டிற்குப் புறப்படுகிறான். இதுபோல புண்ணிய தீர்த்தங்களில் புரியும் பாவத்தைப் போக்க வழியேதும் இல்லை.

எல்லாவித வழிபாட்டின் எண்ணமே தூய உள்ளத்துடன் பிறருக்கு நன்மை புரிவது தான். ஏழை எளிய மக்கள், நோயுற்ற மக்கள் இவர்களிலே சிவத்தைக் காண்பதுதான் உண்மையான சிவவழிபாடு. விக்கிரகங்களிலேயே மட்டும் சிவனைக் காண முயல்வது வழிபாட்டின் பூர்வாங்கமேயாகும். கோயிலில் மட்டும் சிவத்தைக் காண்பவரைக் காட்டிலும் சாதி, மத மற்றும் யாதொரு பேதமும் இன்றி ஓர் ஏழை மனிதனிடம் கடவுளைக் கண்டு அவனுக்கு சேவை செய்து உதவி புரிகின்றவன்தான் சிவபெருமானின் இன்னருளைப் பெறமுடியும்.

சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புகிறவன் அவருடைய படைப்புக்களாகிய உலகத்தில் உள்ள ஜீவராசிகளுக்கும் சேவை செய்ய முற்பட வேண்டும். சிவனடியார் களுக்குச் செய்யும் சேவைதான் சிவபெருமானுக்குச் செய்யும் சிறந்த சேவை என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

# வேல் வேல் வெற்றிவேல்

– வடகோவை பூ.க. இராசரத்தினம் அவர்கள் –



முருகனின் சக்திகளில் ஒன்று தான் ஞான சக்தி. ஞான சக்தி மேன்மை வாய்ந்தது. அதுவே வேலாயுதமாக விளங்குகிறது. வெற்றிவாகை சூடும் தன்மையுடையது வேல். அறிவும், புலமையும், ஞானமும் சேர்ந்தால் அதன் சக்தியை விபரிக்க முடியாது. "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என திருவாசகம் போற்றுகிறது. அறிவு, புலமை, ஞானம் பற்றி உதாரணவாயிலாக விளக்குவது பொருத்த மாகும். எரிந்து கொண்டிருக்கும் ஒரு கை விளக்கில் நாம் விளக்கை திரியை சுவாலையைப் பார்க்கின்றோம். தனி விளக்கு அறிவையும் திரியும் வெளிச்சமும் (சுவாலை) புலமையையும் சுவாலை மட்டும் தெரிந்தால் ஞானத்தையும் புலப்படுத்துவதாக நாம் கருதலாம்.

முருகனின் வேலாயுதம் ஆழ்ந்து அகன்று கூர்மையுடையதாகத் திகழ்கிறது. முருகனின் ஞான வேலுக்கு சக்தி என்ற பெயரும் உண்டு. அஞ் ஞானத்தை அழிக்க ஞானமே பலமுடையது. எனவே ஞான ஒளி இன்றியமை யாததென எல்லாச் சமயங்களும் குறிப்பிடுகின்றன. ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களாகிய சூரபதுமன், சிங்கமுகன், தாருகன் என்னும் அசுரர்களை அழித்தது வேலேயாகும். புராணக்கதைகள் வேலின் வலிமையை நன்கு விளக்கியுள்ளன.

வேலின் மகிமையை நன்கு விளக்குவது சுலபமானதல்ல. இளங்கோவடிகள் தரும் விளக்கம் பயனுடையதாகும்.

"சீர்கொழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கை வேல் அன்றே
பார் இருப்பவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மாத் தடித்த சுடர்மலைய வெள்வேலே"

சைவ சமயத்தைப் பேணுபவர்கள் வேலின் மீது அபார நம்பிக்கையுடன் தினமும் வழிபடுகிறார்கள். நம்பிக்கை என்ற திசையறி கருவியோடு வாழ்க்கை யெனும் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள். பண்டைக்காலம் தொட்டு வேல் வழிபாடு இருந்த செய்தியை சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ளன. வேல் பற்றிய விபரணைகள் பல உண்டு. "வேல் அருள் உருவம் கொண்டது" என்று கந்தபுராணத்தில் கச்சியப்பர் கூறியுள்ளார்.

சக்தி வடிவமான வேல் முருகன் திருக்கரத்தில் பிரகாசிக்கின்றது. அது ஞானவேல், தங்கவேல், மாணிக்கவேல், மரகதவேல், குழந்தைவேல், இரத்தினவேல், சிங்காரவேல், வெற்றிவேல், சண்முகவேல், கதிர்வேல், முத்துவேல், அருள்வேல், திருவேல், முருகவேல் என்றெல்லாம் போற்றப்படுகின்றது.

*யாரையும் இழிவாகப் பேசாதே; நம்பிக்கையை இழக்காதே.*

வேலின் பெருமையை மகத்துவத்தை பல நூல்கள் விளக்கியுள்ளன. முருகன் வேல் பட்டவுடன் சூரபத்மன் இரு கூறு ஆனான். ஆணவ வடிவமான சூரன் முருகனின் வாகனமானான். அவனது ஒரு கூறு மயிலாகவும் மற்றொரு கூறு சேவலாகவும் வெளிப்பட்டது. மயில் - ஆணவம், சேவல் - சிவஞானம். ஆணவத்தை அழிக்க ஞானமாகிய முருகன் மயில்மீது அமர்ந்துள்ளார் எனலாம். ஆணவத்தால் அவஸ்தைப்படும் இன்றைய உலகத்துக்கு வேலின் மகிமையை, தேவையை, பயனை உணர்த்த வேண்டிய தேவை வலுவடைகிறது.

"வேல் உண்டு வினை இல்லை" போன்ற சுலோகம் கொரொனா போன்ற கொடிய நோய்கள் ஏற்படுத்தும் பயப்பீதியை அகற்றுவதற்குத் துணையாக இருந்து வருகிறது. உளவியல் நிபுணர்கள் நம்பிக்கையின் நம்பகத்தன்மையை விளக்கி வருகிறார்கள். எனவே நாம் வெற்றி வேல்மீது நம்பிக்கையை வளர்த்து ஆரோக்கியத்துடனும் பலமுடனும் வளமாக வாழ்வோமாக.

---

## அடுத்தவர் கருத்து

நீங்கள் ஏன் அடுத்தவரது கருத்துக்களைக் கண்டு பயப்படுகிறீர்கள்? ஏனென்றால், நீங்கள் நீங்களாக இல்லை. நீங்கள் மற்றவர்களது அபிப்பிராயங்களைத் தாங்கும் தூணாக இருக்கிறீர்கள். மற்றவரது அபிப்பிராயத்தைத் தவிர நீங்கள் வேறு எதைப்பற்றியும் சிந்திப்பது இல்லை.

நீங்கள் அழகானவர் என்று மற்றவர் சொன்னால், நீங்கள் அழகாக இருப்பதாக நினைக்கிறீர்கள். அவலட்சணமாய் இருப்பதாக பிறர் சொன்னால், அப்படி இருப்பதாகவே கருதுகிறீர்கள். இவ்வாறு மற்றவர் கூறும் அபிப்பிராயங்களை சேர்த்து வைத்துக் கொண்டிருக் கிறீர்கள்.

ஒருவர், "நீங்கள் அழகானவர்" என்று சொல்ல, அடுத்தவர், "நீங்கள் அருவருப்பானவர்" என்று சொன்னால், நீங்கள் பின்னவர் சொன்னதை மறக்க நினைக்கிறீர்கள். ஆனால் அதை உங்களால் மறக்க முடியாது. இரண்டு கருத்துக்களும் உங்கள் உள்ளேதான் ஆழமாக இருக்கும். இப்போது நீங்கள் இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கிறீர்கள். நீங்கள் பல பொருட்களின் கலவையாக இருக்கிறீர்கள்.

நீங்கள் உங்கள் ஆன்மாவை அடையவில்லை. உங்களுக்கென்று எந்த தனித் தன்மையும் இல்லை. நீங்கள் வெறும் அடுத்தவரது குப்பைதான். ஆகவே, எப்போதும் பயத்தில் இருக்கிறீர்கள். ஏனெனில், அடுத்தவரது கருத்துக்கள் மாறினால் நீங்களும் மாறவேண்டிய நிலையில் இருக்கிறீர்கள். நீங்கள் அடுத்தவரின் பிடியில் இருக்கிறீர்கள்.

முதலில், தைரியமாக உங்களைச் சார்ந்து இருங்கள். அப்போது உங்களைத் தவிர வேறு யாரும் நல்லவனாகவோ, கெட்டவனாகவோ மாற்ற இயலாது. பொய்யான பிறர் அபிப்பிராயத்துக்கும், நீங்கள் கனவுலகில் சஞ்சரிப்பதற்கும் எவ்வித வித்தியாசமும் கிடையாது. ஒருவன் உங்களைப் புகழும்போது, அவன் சக்திமிக்கவனாகத் தெரிகிறான். அவனுடைய புகழ்ச்சியை நீங்கள் ஏற்றுக்கொண்டால், நீங்கள்தான் அவனுக்கு இரையானவன். இப்போது அவன் உங்களை தனது பிடியில் வைத்துக்கொள்ளலாம். அவன் உங்கள் குருவாகவும், நீங்கள் அவன் அடிமையாகவும் இருப்பீர்கள்.

# சைவசித்தாந்தமே திருமந்திரம்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

சைவம், சித்தமா அந்தம் என்பது சைவசித்தாந்தம் ஆகும். சைவம் எனப்படுவது சைவசமய நெறி. இஃது சிவநெறியுமாகும். சித்தம் என்பது மனம். அந்தம் என்பது முடிபு. எனவே சைவசித்தாந்தம் என்பது சைவசமயத்தின் முடிந்த முடிபேயாகும். அதுவே திருமந்திரம். இது சைவத் திருமுறை வரிசையில் பத்தாவதாக உள்ளது. முதல் பதினொரு திருமுறைகளையும் தொகுத்தருளியவர் நம்பியாண்டார் ஆவர். இவரே மூவர் தமிழ்வெளிவரக் காரணராயிருந்தவராவர்.

"தேவர் குறளும் திருநான்மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்றுணர்"

என்கிறார் ஔவைப் பாட்டி.

இவ்வெண்பாவின் கூற்றுப்படி திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் திருமந்திரமேயாகும். இது ஒரு மந்திர நூல். தந்திர நூல். மருத்துவ நூல் அத்துடன் இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு யோக நூலுமாகும். திருமூல தேவரே இந்நூலின் ஆசிரியராவர். "அன்பே சிவம்" என்பதே இவரது தாரக மந்திரம்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்கிறார்.

தாயுமானவரும் இவர் காலத்தவரே என்று கூறுவர். எனவே திருமூலர் காலத்தில் தமிழ்மரபு இருந்தமை கண்கூடு. எனவே, "தன்னை நன்றாகத் தமிழ செய்யுமாறே" என்று கூறுவதில் வியப்பெதுவும் இல்லை. முதற்பகுதி முதலாம் தந்திரத்தில் அன்புபற்றித் திருமூலர் கூறுவது:

"அன்பு சிவமிரண்டென்ப றறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறி கிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருந்தாரே"

-திருமந்திரம் 270.

திருமூலரது வரலாற்றை அறிவதற்கு சேக்கிழாரடிகள் பாடியுள்ள பெரியபுராணமும் நம்பியாண்டார் நம்பி பாடியுள்ள ஒரு பதிகமும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடலும் உதவு கின்றன.

கைலையங்கிரியில் வாழ்ந்த சிவயோகி ஒருவர் அங்கு நந்தியெம் பெருமானிடம் உபதேசம் பெற்றார். முடிவில் பெருமானிடம் ஆசிபெற்றுப் பின்பு அகத்திய முனிவரைத் தரிசிக்கும் விருப்பில் சிவயோகி பொதிய மலைக்குப் புறப்பட்டார். அங்கிருந்து சிதம்பரத்தில் நடராசப் பெருமானைத் தரிசித்தபின்பு அருகமைந்த பசுமை நிரம்பிய சாத்தனூருக்கு வந்தார். அங்கேயவர் கண்ட காட்சி நெஞ்சை உலுக்கியது. அங்கு பசுக்கூட்டம் ஒன்று கண்ணீர்

*எதற்கும் தயாராக இருப்பவனை நோக்கித்தான் வாய்ப்புக்கள் வந்து குவியும்.*

வடித்துக் கதறுவதையும் உள்ளே மேய்ப் பவன் இறந்து கிடப்பதையும் கண்டார்.

உடனடியாகவே பசுக்கள் படுந் துயர் போக்க எண்ணிய யோகி, நந்தியெம் பெரு மானை வேண்டுதல் செய்து, தமது சித்தின் வலிமையினால் "பரகாயப் பிரவேசம்" செய்து தனது உடம்பை மரப்பொந்து ஒன்றில் வைத்து விட்டு ஜீவனை மாத்திரம் இறந்து கிடந்த வனது உடம்பினுள் புகுத்தினார். உடனே இறந்து கிடந்தவன் நித்திரையிலிருந்து விழிப் பதுபோல் எழுந்து நின்றான். இதுகண்ட பசுக்கள் சந்தோஷ மிகுதியால் துள்ளிக் குதித்தன. தமது மேய்ப்பவனை எழுப்பியுதவிய யோகியரைக் காணாது தவித்தன. யோகியின் சித்தின் விளைவே தமது மேய்ப்பனது உயிர் என்பது பசுக்கள் அறியாதுதானே.

இறந்து கிடந்த மேய்ப்பனது பெயர் மூலன் என்பதையுணர்ந்து அப்பெயரையே தாங்கிப் பசுக்களை அவரவர் வீடுகளில் விட்டு விட்டு வருபவர் தனது கணவரே என்று நம் பிய மனைவி "சாப்பிட வாருங்கள்" என்றழைத் தார். அதுகேட்டுத் துணுக்குற்ற மூலன் வடி வில் நின்றவர் "அம்மையே! உண்மையாகவே உங்களுடைய கணவர் இறந்துவிட்டார். பசுக் களின் துயர் போக்கும் பொருட்டு கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையான சித்தைப் பயன்படுத்தி மூலன் வடிவில் வந்தவன் அம்மா நான்." என்றபோதும் அம்மையாரால் நம்பமுடிய வில்லை. வாக்குவாதப்படுவது கேட்டு வந்த அயலவர் சிலர் பொய் பேசுகிறான் என்று கருதி அடிக்கவும் முயன்றனர்.

இதனிடையே மரப்பொந்தில் வைத் துள்ள தனதுடலைக் காட்டுவதாகக் கூறி அந்த யோகி அயலவரை அழைத்துச் சென் றார். ஆனால் அங்கும் அவருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. மரப்பொந்தில் அவரது உடல் இல்லாமை கண்டு இதுவும் இறைவனுடைய திருவிளையாடலே என்று வாளாவிருந்தார். உடல் பார்வையிடக் கூடி வந்தவர்கள் "ஐயகோ இவன் பெரிய அண்டப் புழுகனாய் இருக்கிறான்" என்று சொல்லிச் சென்றவர்கள் மனைவியிடம் "தங்கையே இனிமேல் அவன் உனக்கு உதவான் என்பதாகவும் உண்மை யாகவே இறந்துவிட்டான் என்பதாகவும் தவம் மேற்கொண்டு விட்டார்" எனவும் இருபொருள் படக் கூறிவிட்டுச் சென்றனர். இதுகேட்ட நங்கை நல்லாளாகிய மூலனின் நாயகி விதவைக் கோலம் பூண்டு கைமை நோன்பு நோற்க லானார்.

மூலனின் பெயர் தாங்கிய திருமூல தேவர் திருவாவடுதுறையில் அரசமர நிழலில் 3000 வருடங்கள் தவமிருந்து வருடம் ஒரு பாடல் பாடியதாகச் செவிவழிச் செய்தி கூறு கிறது. சேக்கிழாரடிகள் பாடியுள்ள பெரிய புராணமும் இதையே பேசுகிறது. ஆனால் இஃது ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயமாகும்.

திருமூல தேவர் பாடியுள்ள நூல்கள் மூன்றாகும். மூன்றும் ஒரு கருத்தையே உரைக்கின்றன. முதலாவது நூல் திருமந்திரம். இது மூவாயிரம் பாடல் கொண்டது. திருமந்திர மாலை எனும் இரண்டாவது நூல் 300 பாடல் உடையது. மூன்றாவது நூல் 30 பாடல்கள் கொண்டது. மூன்று நூல்களும் கலிவிருத்தப் பாடலாகவே உள்ளன.

திருமந்திரத்தில் ஆறு ஆதாரங்கள் பேசப்படுகின்றன. ஆதாரங்கள் தாமரை இதழ் களாக உருவகிக்கப்படுகின்றன. ஆதாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கடவுள் குறிப் பிடப்பட்டுள்ளது.

குண்டலினி பாம்பு போன்றது. அது மூலாதாரத்தில் சுருண்டு கிடக்கும். தட்டி எழுப்பும்போது படம் விரித்தாடும் பாம்புபோல் எழும். இது மூலாதாரத்திலிருந்து தொடங்கி

*விடாமுயர்சியைத் தொடர்ந்து செய்வதே மேதைத்தனம்.*

சுவாதிட்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி வரை ஏறி அருட்சக்தியாகக் கழுத்தையடைந்து ஆக்ஞை எனும் தலைப்பகுதியை அடைந்து சிவனது திருவடி நீழலை அடையும். மணி வாசகப் பெருமான் போன்ற சிவனடியார்கள் யாவரும் இவ்வாறே சிவானந்தப் பெருவாழ்வு பெற்றவர்கள் என்பதற்குத் திருத்தொண்டர் புராணம் சான்றாகும்.

திருமந்திரம் பாயிரம் முதல் ஒன்பது தந்திரங்கள் கொண்டன. திருவள்ளுவரது முப்பால் போன்று மூன்று பகுதிகள் கொண்டது. "அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே" என்றபடி திருமந்திரம் அறம், பொருள், இன்பம், வீடடைதல் ஆகிய நெறி பற்றி பேசுகிறது.

தந்திரம் என்பது நூலின் உட்பிரிவு களாகும். பகுதியெனவும் பெயர் பெறும். நூலின் தந்திரங்களின் உட்பிரிவுகள் அநேகம் உள்ளன. விரிக்கில் பெருகும். திருமந்திரத்தில் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மை பேசப்படுகிறது. இதை நோக்குமிடத்து உமா பதி சிவாச்சாரியார் பாடித் தந்துள்ள சைவ நூலாகிய திருவருட்பயன் நினைவுக்கு வரு கிறது. அதுவும் பதி, பசு, பாசம் பற்றிப் பேசுகிறது.

திருமந்திர நூலின் உட்பிரிவில் விசேட கருத்துக்கள் பொருந்தியுள்ளன. உதாரண மாக நூலின் முதற்பாகத்திலே மூன்று தந்திரங்கள் பேசப்படுகின்றன. அவற்றில் முதலாவதில் உபதேசம் தொடக்கம் கள் உண்ணாமை வரை 24 உட்பிரிவு பேசப்படு கிறது. இரண்டாவதில் அகத்தியம் முதல் பெரியாரைத் துணைகோடல் வரை 25 உப பிரிவுகள் உள்ளன. மூன்றாவதில் அட்டாங்க யோகம் முதல் சந்திரயோகம் வரையான 21 உப பிரிவுகள் உள்ளது. பாயிரம் கடவுள் வாழ்த்து முதல் திருமூர்த்திகளின் முறைவரை 09 பிரிவுகள் உள்ளன. கடவுள் வாழ்த்தில் திருமூலர் விநாயகர் காப்பாக "ஐந்து கரத் தனை ஆனை முகத்தனை" என்று தொடங் கிப் பாடுகின்றார்.

திருமந்திர நூலின் இரண்டாம் பாகத் தில் 4,5,6 ஆகிய மூன்று தந்திரங்கள் பேசப் படுகின்றன. 4ஆம் தந்திரத்தில் அசபை முதல் தவாக்கிரி சக்கரம் வரை 13 உட்பிரிவுகள் பேசப்படுகிறது. 5ஆம் தந்திரத்தில் சுத்த சைவம் முதல் உட் சைவம் வரை 20 உப பகுதிகள் அடங்கியுள்ளன. 6ஆம் தந்திரத்தில் சிவகுரு தரிசனம் தொடக்கம் பக்குவன்வரை 14 உட்பிரிவுகள் உள்ளன. இதில் பத்தாவது உட்பிரிவில் திருநீறு பற்றி மிக விபரமாக விளக்குகின்றார். பிரம்மத்தைக் கண்கூடாகக் கண்டவர் பிரம வடிவத்தையுடைய தூல உடல் சூக்கும ஒளியூடாக மாறுவது இன்றி யமையாதது. அந்த ஒளியே சைவர்கள் அணியும் திருநீறு ஆகும். அரசு, ஆல் என்ப வற்றின் சுள்ளிகள் வேள்வித் தீயில் பொசுக் கிய சாம்பரே திருநீறாகும். இது நாவலர் பெருமான் கூறும் சாணக விறாட்டி சுட்ட திருநீறு என்பதற்கு மாறுபட்டதாகும்.

"கங்காளன் பூசுங் கவசத்திரு நீற்றை
மங்காமல் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே" -திருமந்திரம் 1666.

திருமந்திரத்தின் மூன்றாம் பாகத்தில் 7,8,9 ஆவது தந்திரங்கள் கூறப்படுகின்றன. 7ஆம் தந்திரத்தில் ஆறு ஆதாரம் முதல் இதோபதேசம் வரை 38 உட்பிரிவுகளும் 8ஆம்

*உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.*

தந்திரத்தில் உடலின் பஞ்சபேதம் தொடக்கம் சோதனை வரையான 43 உட்பிரிவுகள் பேசப்படுகின்றன. 9ஆவது தந்திரத்தில் குருமட தரிசனம் முதலாக சர்வ வியாபி வரையாக 22 உட்பிரிவுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. திருமந்திரத்தின் உட்பொருள் "பஞ்சாட்சரம்" எனப்படும். ஐந்து எழுத்தாகிய "நமசிவாய" என்பதாகும்.

"சைவசமயமே சமயம் சமயாதீதப் பரம்பொருளை
கைவந்திடவே காட்டும் இந்தக் கருத்தைவிட்டு
பொய் வந்துழலும் சமயநெறிபுக வேண்டா
முத்திதரும் தெய்வ சபையைச்
சேர்வதற்சேர வாரும் செகத்தீரே"

-தாயுமானவர்.

"அன்பே சிவம்"

---

## தடைகளைக் கண்டு துவண்டுவிடாதீர்கள்!

வாழ்க்கை என்னும் பாதையில் பெரிய குழியில் தடக்கி விழுந்தாலும், "இத்தோடு நம் கதை முடிந்தது" என்று கருதாமல், குழியில் இருந்து மேலே வருவது எப்படி என்று எண்ணவேண்டும். இடையூறுகள், ஐயப்பாடுகள், துன்ப துயரங்கள் போன்றவை எல்லா மனித வாழ்விலும் வருவது இயல்பானதுதான். ஆனால், சிலர் அதிலேயே துவண்டு வாடிவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தோல்வியை தழுவுவது தவிர்க்க முடியாது. ஆனால், வெற்றியாளர்கள் எத்தகைய இக்கட்டான சூழலையும் கடந்து போய்விடுகிறார்கள்.

எதையாவது சாதிக்கும் முயற்சியில் இறங்கினால், தடைகள் குறுக்கிடத்தான் செய்யும். எல்லோருக்கும் இப்படி நேர்ந்திருக்கும். ஆனால் அந்தத் தடைகள் நம் பயணத்தை நிறுத்திவிடக்கூடாது.

பாதையில் சுவர் குறுக்கிட்டால், ஓட்டத்தை நிறுத்திவிட்டு திரும்பிப்போகக் கூடாது. அதைத் தாண்டிப்போவது எப்படி எனக் கண்டுபிடிக்க வேண்டும். எந்தவொரு வெற்றியும் எடுத்த எடுப்பிலேயே கிடைத்துவிடுவதில்லை. இடையிடையே தடைகள், மனச்சோர்வை உண்டாக்கக்கூடிய நிகழ்ச்சிகள், இன்னபிற சிக்கல்களெல்லாம் ஏற்படும். அதனால் தளர்ச்சி கொள்ளக்கூடாது. நமக்கு ஏற்படும் தடைகள்தான் நம்மை நின்று நிதானித்து சிந்திக்கச் செய்கின்றன. அடுத்த அடியை எப்படி எவ்வளவு அழுத்தத்தோடு எடுத்து வைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க அத்தகைய தடைகள்கூட நமக்குத் தேவைதான்.

வெற்றி பெற்றவர்களை கேட்டுப் பாருங்கள். "அப்பப்பா! என்னுடைய முன்னேற்றத்துக்குத்தான் எத்தனை தடைகள்...? இருந்தாலும் நான் மனம் தளரவில்லை. சளைக்காமல் முயன்றேன். அதனால்த்தான் இன்று இந்த நிலையில் வாழ்கிறேன்" என்பார்கள். பயணம் செய்யும்போது வழியில் கல்லும் முள்ளும் இருக்கத்தான் செய்யும். நாம்தான் பார்த்து நடக்கவேண்டும். தவறிப்போய் முள் குத்தினாலும் அதைப் பிடுங்கி எறிந்துவிட்டு பயணத்தைத் தொடர வேண்டியதுதான். அதற்காக அங்கேயே அமர்ந்து விடுகிறோமா, என்ன...!? ஆம், நண்பர்களே...! தொல்லைகள், துன்பங்கள், தடைகள் நம் முன் குறுக்கிடும்போது துவண்டுவிடாதீர்கள். அதுதான் வாழ்க்கை என்று உங்கள் திறமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காதீர்கள்...! அதையும் மீறி நம்மால் முடியும். எதிர்கொள்ள முடியும் என்ற மனவுறுதியுடன் சிகரத்தினை நோக்கி சலிப்பின்றி பயணம் செய்யுங்கள்...!!

தடைகளுக்கு அஞ்சாதீர்கள். அவற்றை வரவேற்றுக் கொண்டாடுங்கள். ஏனெனில், தடைகள்தான் உங்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும். நெருக்கடியான காலகட்டம்தான் மிகச் சிறந்த மனிதனை அடையாளம் காட்டுகின்றன...!!!

# மாளையபட்சமும் பித்துரு தர்ப்பணமும்

– ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

புரட்டாதி மாதம் முன்னோருக்கான விடுதலை மாதம் என அழைக்கப்படுகின்றது. மகாளயம் என்ற சொல்லிற்கு பெரிய இருப்பிடம் அல்லது சந்தோசமான காலம் எனப் பொருள்படும். சூரியன் கன்னி இராசிக்குள் புகுந்ததும் பித்ரு லோகத்தில் வசிக்கும் நமது முன்னோர்களைப் பூலோகத்திற்குச் சென்று வரும்படி எமதர்மராசன் கட்டளை இடுகின்றான். அவர்களும் தங்கள் உறவினர்கள், தங்களை நினைவு கூறுகின்றார்களா? என்று அறியும் ஆர்வத்தோடு பூலோகம் வருகின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை தொடக்கம் அடுத்து வரும் 15 நாட்களும் மாளைய பட்ச நாட்களாகும். இந்தக் காலத்தில்த்தான் எமது முன்னோர்கள் (பிதிர்கள்) பூமியில் இருப்பார்கள். அந்த நாட்களில் நாம் அவர்கட்கு நீர்க்கடன் செய்து தாகத்தைத் தீர்க்க வேண்டும். இந்த 15 நாட்களிலும் நாம் நீத்தார் கடனை செய்து ஏழைகட்கும் வசதி குறைந்தோருக்கும் அன்னதானம் செய்தால் முன்னோர்கள் மகிழ்ச்சியடைந்து நமக்கு நல்லாசி வழங்குவார்கள் எனப் புராணங்கள் மேலும் கூறுகின்றன. அனைத்து நாட்களுமே நீத்தார் வழிபாட்டிற்கு உரியவைதான் என்றாலும் அமாவாசை நாளில் பிதிர்க்கடன் செய்வதால் நூறுமடங்கு பலன் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அமாவாசையன்று நீர்க்கடன் செய்தமைபற்றி மகாபாரதம் வழிகாட்டி உள்ளது.

"நீராதாரத்தை வைத்தே நமது வாழ்வாதாரம்" அமையும் என்று எடுத்துக் காட்டும் விதமாக நீர்நிலைகளை அடுத்தே பிதுர்க் காரியங்கள் செய்யப்படுகின்றன. இலங்கையின் யாழ்ப்பாணத்தில் கீரிமலை தீர்த்தக் கேணி, யாழ்ப்பாணம் வில்லூன்றி தீர்த்தக் கேணி போன்ற புனித நீர் நிலைகளில் மக்கள் பித்துரு காரியங்களை அதிகமாகச் செய்து வருகின்றனர். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் பக்கத்தில் உள்ள கேணிகளிலோ ஆறுகளிலோ, குளங்களிலோ செய்யலாம். அப்படிச் செய்ய முடியாதவர்கள் கோவிலின் வெளிப்புறம் உள்ள தெப்பக்குளத்துக் கரையிலும் வைத்துக்கூட நீத்தார் கடன் செய்யலாம். பெரும்பாலும் நீர்க்கடன் செய்வதற்காக கடற்கரைகளில் மண்டபங்கள் கட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடை, பருப்பு, பாயாசம், பலகாரங்கள் தயார் செய்து பழங்களுடன் அதனை எமது முன்னோருக்குப் படைக்க வேண்டும். இவை யாவற்றையும் நாம் புனிதமாக எமது வீடுகளில் தயாரித்து படைத்தலே சாலச் சிறந்ததாகும். நாம் ஏழைகட்கு உணவு கொடுத்தும் வஸ்திரதானம் எனப்படும் உடைகளைத் தானமாகக் கொடுத்தும் திருப்தி கண்ட பின்னர் வீட்டிலுள்ளோர் உணவை உண்ண வேண்டும். நாம் சந்தோசமாக உடல் நலத்துடன் வாழவேண்டுமெனில் பித்துருக்களை திருப்தி செய்ய வேண்டும். பித்துருக்களைப் பிரீதி செய்வதற்காக சிரார்த்தம் தர்ப்பணம் செய்கின்றோம். அதனைத் தெய்வங்கட்கு அன்போடு பக்தியோடு செய்ய வேண்டும். அதனால்த்தான் சிரார்த்தம் என வழங்கப்படுகிறது. பித்துருக்களுக்கு நமது

ஒரு வருடம் ஒரு நாளாகும். நாம் இவர்கட்குச் செய்யும் சிரார்த்தம் அவர்கட்கு தினம் உணவு கொடுப்பதுபோல் ஆகும். அமாவாசை தினத்தில் எள்ளும் தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் செய்வது அவர்களின் தாகத்திற்குத் தண்ணீர் கொடுப்பதுபோல ஆகும். மகாளயபட்சத்தில் எல்லாப் பித்ரு தேவதைகட்கும் திருப்தி செய்யவே மகாமாளய சிரார்த்தம் செய்யப்படுகின்றது. பித்ருக்களை வள்ளுவப் பெருமான் தென்புலத்தார் எனக் குறிப்பிடுகின்றார். இவ்வுலகில் இல்லறத்தான் ஒருவன் ஐந்து வகையினருக்கு விருந்தளிக்க வேண்டும். அவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்கிறது குறள்.

இவ்வாறு நாம் செய்வோமாகில் முன்னோர் சாபம் எமபயம், எதிரிகளினால் வரும் தொல்லைகள், கெட்ட கனவுகள் அகன்று நாம் இவ்வுலகில் நிம்மதியாக வாழலாம். எனவே மகாளயப்பட்ச நாட்களில் பிதிர்களுக்கான தர்ப்பணத்தைத் தவறாது செய்வோமாக. இது ஒவ்வொரு இந்து சமயத்தவருக்கும் கட்டாயமான கடமையாகும்.

---

## உன் மதிப்பு

தன்னைப் பற்றி தாழ்வு மனப்பான்மை கொண்ட ஒருவன் இறைவனிடம் "என்னை ஏன் இப்படி படைத்தீர்கள், என் வாழ்க்கையின் மதிப்புதான் என்ன..." என்று கேட்டான். இறைவன் அவனிடம் ஒரு சிவப்பு கல்லைக் கொடுத்து, "இதன் மதிப்பை அறிந்து வா... ஆனால், விற்கக்கூடாது" என்றார்.

அவன் அக்கல்லை ஒரு ஒரெஞ்ச் பழ வியாபாரியிடம் காண்பித்ததற்கு, அக்கல்லுக்குப் பதில் ஒரு டசின் ஒரெஞ்ச் பழங்கள் கொடுப்பதாகக் கூறினான். அதையே ஓர் உருளைக்கிழங்கு வியாபாரியிடம் கேட்டதற்கு ஒரு மூடை கிழங்கு தருவதாகச் சொன்னான்.

நகைக்கடையில் காண்பித்ததற்கு 50 ஆயிரம் பொற்காசுகள் தருவதாகச் சொல்லவே, இவன் மறுக்க, ஒரு லட்சம் பொற்காசுகள் தருவதாகச் சொன்னான். மீண்டும் அந்தக் கல்லை எடுத்துக்கொண்டு ஆபரண கற்கள் வியாபாரியிடம் காண்பித்து அதன் மதிப்பை கேட்டான்.

அக்கல்லை வாங்கி பலமுறை பரிசோதித்துவிட்டு "இந்த அருமையான மாணிக்கக்கல் உனக்கு எங்கே கிடைத்தது? ஒட்டுமொத்த உலகத்தையே விற்றுக் கொடுத்தாலும் இந்தக் கல்லுக்கு ஈடு இணை இல்லை" என்று கூறினார்.

குழப்பமடைந்த அவன் இறைவனிடம் நடந்ததை எல்லாம் கூறினான். அதற்கு இறைவன், "பார்த்தாயா, ஒரே கல்லுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மதிப்பு கொடுத்தனர். ஆனால் கடைசியாக அந்தக் கல்லின் உண்மையான மதிப்பை ஒருவர்தான் சொன்னார். அதேபோல் உன்னை ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி குறைத்து மதிப்பீடு செய்வர். அதற்கெல்லாம் கவலைப்படாதே! உண்மையான மதிப்பை அறிபவரை விரைவில் கண்டறிவாய். மனம் தளராதே" என்று கூறி மறைந்தார்.

இறைவனின் படைப்பில் ஒவ்வொருவரும் அபூர்வமானவரே. ஒவ்வொருவரும் ஒரு விதத்தில் சிறப்புமிக்கவரே! உங்களுக்கு நிகர் நீங்களே! யாரும் உங்களுக்கு இணை கிடையாது!!!

*புத்தகங்கள் மனிதப்பிறவிகள் அல்ல. ஆயினும் நீண்ட ஆயுளைப் பெற்றிருக்கின்றன.*

# ஐந்தின் அருமை பெருமையை ஆர் அறிவார்?

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

இறைவன் உலகங்களையும் உயிரினங்களையும் படைத்துள்ளார். அந்த உயிரினங்களில் அரிய பிறவியையும், ஆறறிவையும் உள்ள உயிரினமாக மனிதன் வாழ்கின்றான். மனிதன் திருவைந்தெழுத்தையும் அதன் அருமை பெருமையையும், நன்கு உணர்வான். இந்தப் பூமியையும் ஆளுகின்ற வல்லமை அவனுக்குண்டு. மனிதனாலேயே உலகம் வாழுகின்றதென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். எனவே திருவைந்தெழுத்தின் பெருமையை உலகிற்கு அறிய வைக்கின்ற பொறுப்பும் கடமையும் அவனுக்கு உண்டு. எனவே உலகை வாழ வைப்பவன் மனிதன் என்று சொன்னாலும் மறுப்பதற்கில்லை.

கருணைக் கடலாகிய இறைவன் சிறப்பாக மனிதன் வாழ்வதற்கும், ஐந்தெழுத்தை உணரவைப்பதற்கும் திருவைந்தெழுத்தை மக்கள் மறவாது ஓதுவதற்கும், வழிகாட்டியாக நாயன்மார்களையும், சைவ சமய குரவர்களையும் அவனியில் படைத்தார். நான்கு நாயன்மார்களும் திருவைந்தெழுத்தைத் தேவாரப் பதிகங்களில் பாடலோடு இணைத்துள்ளார்கள். மூன்று வயதில் ஞானம் பெற்று தேவாரம் பாடிய திருஞானசம்பந்தரை பதினாறு வயதுவரை பூமியில் வாழ வைத்தார் இறைவன். அவரை சமணருடன் அனல் வாதம், புனல் வாதம் செய்ய வைத்து சைவ சமயத்தின் பெருமையை சமணர்களுக்கு உணர வைத்தார். பதினாறு வயதில் அவரது திருமண நாளில் தோன்றிய ஜோதியில் திருஞானசம்பந்தரும், அங்கு கலந்து கொண்டவர்களும் சேர்ந்து இறைவனடி சேர்ந்தார்கள். அப்பொழுது திருஞானசம்பந்தர்,

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாம நமச்சிவாயவே"

என திருவைந்தெழுத்தை ஓதிய வண்ணம் இறைவனடி சேர்ந்தார். திருஞான சம்பந்தர் வினைகள் பதினாறு வயதில் ஒழிந்ததால் அவரை ஆட்கொண்டார். இன்னும் திருவைந்தெழுத்தின் பெருமையை வலியுறுத்திப்பின் பாடலையும் அருளுகின்றார்.

"துஞ்சலும் துஞ்சலில் லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்ததன் அஞ்செழுத்துமே"

எனத் திருவைந்தெழுத்தை அழுத்தமாக அருளுகின்றார்.

இனி எண்பத்தொரு வயது வாழ்ந்த திருநாவுக்கரசர் சமணர்களால் பட்ட துயரங்களையும், அப்பர் சைவத்தின் அருமை பெருமை அறியாது மேலான சமயம் சமணசமயம்

என எண்ணி ஈர்க்கப்பட்டு, சமண சமய குருவாகப் பட்டம்பெற்று (தருமசேனர்) வாழ்ந்ததும் வரலாறு. திருநாவுக்கரசர் சமணத்தில் சேரமுன் சைவத்தின் அருமை பெருமையை அறியாததும், அக்கா திலகவதியார் தன்னந் தனியே இருக்கப் போகின்றாரென்பதையும் சிறிதும் சிந்தியாது சமணத்தில் சேர்ந்ததை இறைவன் நன்கறிந்து சூலைநோயைக் கொடுத்து, நோயைச் சமணர்களால் மாற்றமுடியாது கைவிட்டதையும், நோயைத் தாங்கமுடியாது இரவோடு இரவாக சமணர் அறியாவண்ணம் தமக்கையார் இல்லத்தை நாடிச் சென்றார். அப்பொழுது திலகவதியார் அவரை அழைத்துக்கொண்டு திருவதிகை வீரட்டானம் என்னும் திருப்பதிக்கு வந்து விபூதியணியக் கொடுத்து எம்பெருமானை வழிபடு எனக் கூற "கூற்றாயினவாறு" என்னும் முதலடி கொண்ட தேவாரத்தைப் பாடிக் குணமடைந்தார். இவர் சைவத்தின் பெருமையையும் தமக்கையாரின் அருமையையும் அறியாது சென்றதனால், இறைவன் அருளால் சமணர்களால் துன்புறுத்தப் பட்டார். கடைசியில் கல்லோடு கட்டிக் கடலில் போட்டபோது,

*"சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ*
*கற்றுணைப் பூட்டியோர் கடலினிற் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது நமச்சிவாயவே"*

என்னும் திருவைந்தெழுத்தின் பெருமையைத் தற்பொழுது நன்குணர்ந்து, வினையறப் பாடினார். "கல் தெப்பமாக மாறித் திருப்புலியூர் கடற்கரையை அடைந்தது. இவர் சைவ சமயத்தையும் தமக்கையாரையும் விட்டுப் பிரிந்த வினையால், தான் நம்பிச் சென்ற சமணர்களால் துன்புறுத்தப்பட்டார். இவரை இறைவன் எண்பத்தொரு வயதுவரை பூமியில், வினைகள் அற வாழ வைத்தார். அப்பரால் திருவைந்தெழுத்தின் பெருமை உணரப்பெற்ற சமணர்களுக்கும் அரசனுக்கும் திருவைந்தெழுத்தின் அருமை பெருமையை அறிய வைத்தார்.

சுந்தரர் தேவலோகத்தில் ஆலால சுந்தரர் என்னும் நாமத்துடன் வாழ்ந்தபொழுது தேவப் பெண்கள் அனந்திதை, கமலினி என்னும் பெண்கள் இவர்மேல் காதல் கொண்டதையும், ஆலால சுந்தரரும் இவர்கள்மேல் ஆசை கொண்டதினாலும் பூமியில் சுந்தரர் என்னும் நாமத் துடனும் அனந்திதை கமலினி, பரவையார் - சங்கிலியார் என்னும் நாமத்துடன் பூமியில் பிறந்து இவர் விரும்பிய ஆசையை முடித்துக்கொண்டு பதினெட்டு வயதில் வினை ஒழிய இறைவனடி சேர்ந்தனர்.

திருவைந்தெழுத்தை,

"மற்றுப்பற்று எனக்கின்றி என்னும் முதலடியுடைய" தேவாரத்தில் "நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே" எனத் திருவைந்தெழுத்தை பாடலில் அருளியுள்ளார்.

சைவ சமய குரவர்களில் பதினெட்டு வரை பூமியில் வாழ்ந்த சுந்தரர் திருவைந்தெழுத் தின் பெருமையை உலகுக்கு அறிய வைத்து நான் மறந்தாலும் எனது நா நமச்சிவாய எனச் சொல்லும் என்கிறார்.

சமய குரவர் நால்வர் உள்ளும் மாணிக்கவாசக சுவாமிகள் என அழைக்கப்பட்டவர், மந்திரியாக இருந்த காலத்தில் அரிமர்த்தன பாண்டிய மன்னனுக்கு குதிரை வாங்க கலிங்க நாடு சென்றவிடத்து இவரை ஆட்கொள்ள சிவபெருமான் பூத கணங்களுடன் திருப்பெருந்துறையில்

இருந்தார். இறைவனால் ஈர்க்கப்பட்டு, சிவபெருமான் குருவாக இருந்த இடத்துக்குச் சென்று, குருவைப் பார்த்து குருவே, சிவம் என்றால் என்ன? போதம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? வினாக்களுக்கு விடையருளுமாறு வேண்டினார். குருவிடையைக் கூறியதும், பரவசமாகி தானும் ஓர் தொண்டனாக கொண்டு வந்த பொருள் முழுவதையும் இறைபணியில் செலவு செய்தார்.

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

என்னும் சிவபுராணத்தைப் பாடிப் பரவினார். மாணிக்கவாசகரும் திருவைந்தெழுத்தை முதலடியாகக் கொண்டு "நமச்சிவாய வாழ்க" என்னும் பஞ்சாக்கிரத்தைப் பாடி திருவைந்தெழுத்தின் அருமை பெருமையை உணர வைத்தார்.

எனவே மானுடராகிய நாமும் நாயன்மார் வழி நின்று, தினமும் திருவைந்தெழுத்தை ஓதி முத்தியின்பம் பெறுவோம். திருவைந்தெழுத்தின் அருமையை, பெருமையை உணர்த்தி நிற்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று முருகன் அள்ளிக் கொடுக்கும் திருவருளைப் பெற்றுச் செல்லுங்கள். முருகன் செல்வச் சந்நிதியில்

"அருவமும் உருவமுமாகி அநாதியாய்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன்
வந்து ஆங்கு உதித்தனன் செல்வச்சந்நிதியில்"
"நாதன் நாமம் நமச்சிவாயவே"

---

ஒவ்வொரு பூட்டும் தயாரிக்கப்படும்போதே, அதற்குரிய சாவியும் உருவாக்கப்பட்டு விடுகிறது. நமக்கு ஏற்படும் பிரச்சினைகளும் துன்பங்களுங்கூட அப்படித்தான். அவை எழும்போதே தீர்வும் உருவாக்கப்பட்டு விடுகிறது. ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். பத்துப் பூட்டுக்களையும் அவற்றுக்குரிய பத்து சாவிகளையும் ஒன்றாக உங்களிடம் தந்தால் அவற்றிற்குரிய சாவியைப் பாவித்து ஒரே முறையில் திறந்துவிடுவீர்களா? முடியாதல்லவா? அதேபோன்றுதான் நமது துன்பங்களும். அவற்றை ஒவ்வொன்றாக அடையாளங்கண்டு, அதற்குரிய தீர்வையும் நாடுங்கள். ஒன்றாக மனதில் போட்டு குழப்பமடையாதீர்கள். (நற்சிந்தனை) ஆன்மிகம் என்பது தேங்காய், பழம். பூ, பக்தி இவற்றுடன் மட்டுமே சம்பந்தப்பட்டதல்ல. ஆனந்த வாழ்க்கைக்கு வழிகாட்டுவதே ஆன்மிகம். ஒரே நேரத்தில் அடுக்கடுக்கான துன்பங்கள் வருமா? வரலாம். சிலருக்கு வந்துமிருக்கின்றது. சொல்லப்போனால் வாழ்க்கையில் நிறைய துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பிறந்து வளர்ந்தால் ஒவ்வொரு பருவத்திலும் அதற்கேயுரிய துன்பங்கள் இருந்துகொண்டுதான் இருக்கும். அடுத்தடுத்து வரும் துன்பங்கள் அறிவுடையவன் எதிரே தோல்விகளைச் சந்திக்கின்றன. அறிவு உடையவன் துன்பத்துக்குத் துன்பம் கொடுத்து விடுகிறான். அதாவது துன்பத்தை அடையாளம் கண்டு தீர்வை ஏற்படுத்துவான்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| S. செல்வராஜா | ஜேர்மன் | 5000. 00 |
| K.V. துரைசாமி | மயிலிட்டி | 2000. 00 |
| ச. கந்தசாமி | இடைக்காடு | 1000. 00 |
| பா. கணேசலிங்கம் | ஆனைக்கோட்டை | 35000. 00 |
| பா. சோபனா | கரணவாய் தெற்கு | 1மூடை அரிசி |
| வே. ரவிச்சந்திரன் | மந்திகை | 10000. 00 |
| செல்வி முரளிதரன் | அச்சுவேலி | 10000. 00 |
| R. சசிகரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திருமதி தயாநிதி பாலசுந்தரம் | தெல்லிப்பழை | 5000. 00 |
| பா. செல்வகுமார் | சாவகச்சேரி | 31000. 00 |
| சாந்தி புடவையகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி 5000. 00 |
| ஸ்ரீகாந் செந்தூரன் | திருநெல்வேலி | 6000. 00 |
| தங்கராசா சபிதாலினி | சரசாலை | 1000. 00 |
| பு. தினோஜன் | லண்டன் | 5000. 00 |
| ஸ்ரீரங்கம் | ஊரெழு | 2500. 00 |
| வி. ராஜேஸ்வரன் குடும்பம் | உரும்பராய் | 500. 00 |
| ச. பாலமுரளி | இணுவில் | 2000. 00 |
| க. ரமேஸ் | துணுக்காய் | 5000. 00 |
| சி. பாலசுப்பிரமணியம் | மூளாய் | 500. 00 |
| செ. செல்வரத்தினம் | அச்சுவேலி | 5000. 00 |
| க. தியாகராஜா | மல்லாகம் | 1மூடை அரிசி |
| பா. தன்ஷிகா | கோப்பாய் | 4000. 00 |
| கு. குணரூபன் | மீசாலை | 1000. 00 |
| கு. மனோகரன் | பத்ததேனி | 10000. 00 |
| ஞானசரஸ்வதி சின்னத்தம்பி | காங்கேசந்துறை | 10000. 00 |
| சி. பகீரதன் | சங்கானை | 1000. 00 |
| திரு ஜயாத்துரை குடும்பம் | மல்லாகம் | 1100. 00 |
| நா. கோவர்த்தனன் | கோண்டாவில் | 1000. 00 |
| திரு தேவராசா குடும்பம் | நாச்சிமார் கோவிலடி | மரக்கறி, 2மூடை அரிசி |
| வைஸ்ணவி நகைப்பூங்கா | நெல்லியடி | 1000. 00 |
| ஐ. நவரத்தினம் குடும்பம் | கரணவாய் | 5000. 00 |
| துரையப்பா சிவாஜி | குடத்தனை | 5000. 00 |

| | | |
|---|---|---|
| கிருஷ்ணதரன் கஜேந்தினி | குடவத்தை | 1000. 00 |
| திருமதி நிரோஜன் சரிதா | கரவெட்டி | 5000. 00 |
| சுரேசன் ராஜேஸ்வரி | கரவெட்டி | 12000. 00 |
| வி. யோகேஸ்வரி | கரவெட்டி | 6000. 00 |
| த. பரமானந்தம் | நல்லூர் | 45k அரிசி |
| சி. கார்த்திகா | சுவிஸ்லாந் | 5000. 00 |
| திரு குமாரசாமி குடும்பம் | சுன்னாகம் | 1000. 00 |
| கௌசிகன் துஷ்யந்தி குடும்பம் | லண்டன் தேங்காய், 1புட்டி அரிசி, | 5000. 00 |
| சி. தவலிங்கம் | பருத்தித்துறை | 12000. 00 |
| ந. ரவீந்திரன் | கொக்குவில் | 1000. 00 |
| பு. கலானந்தன் | கொக்குவில் | 1000. 00 |
| சி. பாலசுந்தரம் | புலோலி | 4000. 00 |
| கனகரத்தினம் நினைவாக | ஜேர்மன் | 1000. 00 |
| M. நிரஞ்சன் | இளவாலை | 1000. 00 |
| தெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 5000. 00 |
| ந. தபேசன் | ஆவரங்கால் | 1000. 00 |
| யோ. சந்திரா | தும்பளை | 1000. 00 |
| யோ. துவாரகன் | வண்ணார்பண்ணை | 2000. 00 |
| S. துஷி, S. கஜி | | 2000. 00 |
| குமரசோதி ராதிகா | சுவிஸ் | 2மூடை அரிசி |
| மு. சுஸ்ருதன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ந. சரஸ்வதி | உரும்பராய் | 5000. 00 |
| வே. தேவசேனாதிபதி (சட்டத்தரணி) | கொழும்பு | 2000. 00 |
| நளினி ஜெயதேவா<br>ரங்கன் ரவீந்திரன்<br>உமா ஜெயநாதன் | லண்டன் | 15000. 00 |
| பகீரதன் பாரதி | நியூஸ்லன்ட் | 15000. 00 |
| திரு சிவகணேசன் குடும்பம் | சித்தங்கேணி | 1000. 00 |
| வே. முருகவேள் | வல்வெட்டித்துறை | 9000. 00 |
| தாட்சாயினி கனாதீபன் | தெகிவளை | 10000. 00 |
| திரு லிங்கநாதன் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| திரு ரட்ணசிங்கம் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| திரு ரஞ்சித் குடும்பம் | கனடா | 500. 00 |
| பொ. கந்தையா | புத்தூர் | 25000. 00 |
| ச. விஜிதா | கந்தரோடை | 2000. 00 |
| ர. சிந்துஜா | சுன்னாகம் | 1000. 00 |

(தொடரும்...

# சைவத்தமிழ் போற்றும் சான்றோர் வரிசையில்
# உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்
# (1829 - 1910)

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

உடுப்பிட்டி என்னும் திருவூர் வடமராட்சிப் பிரதேசத்தில் மிகப் பிரபலமான புண்ணிய பூமியாகும். வடமராட்சிப் பிரதேசம் கல்வியால், செல்வத்தால், இறைபக்தியால் மிகச் சிறப்படைந் ததை அன்றுமுதல் இன்றுவரை பிரகாசிப்பதன் மூலம் அறியலாம். பொதுவாக கற்றோரின் சிறப்பால் உயர்ந்ததில் வியப்பில்லை. இம்மண்ணில் முதற் பெண் புலவர் தோன்றவும் இக் குடும்பத்தில் ஏழு அதியுயர் கல்விமான்களின் உறைவிடமாகவும் அமைந்தவை இறையருளின் நன்கொடையாகும். இப்பாரம்பரிய வடமராட்சியின் திருவூரான உடுப்பிட்டியில் அம்பலவாணர் அருளம்பலம் என்பவர் மிகச் சிறப்புடன் வாழ்ந்தவர். இவரின் சிறப்பை மெச்சிய இவரின் சம காலத்தவரான குமாரசாமி முதலியார் (வைமன் கதிரைவேற்பிள்ளையின் தந்தையார்) அருளம் பலக் கோவை என்னும் பிரபந்தத்தைப் பாடினார்.

ஒரு புலவரால் பாடப்பெற்ற பெருமையுடைய அருளம்பலம் என்பவரின் மற்றொரு தாரத்தின் மைந்தனாக கதிராசிப்பிள்ளையால் பெற்றெடுக்கப் பெற்றவர் சிவசம்பு என்னும் சற்புத்திரர். சிவசம்பு பிறந்ததும் இவரின் பிறப்பின் பலாபலன் கூறிய சோதிடர் இவரின் கிரக நிலைப்படி எதிர்காலத்தில் பெரும் புகழ்தேடும் புலவனாவான் எனத் தெரிவித்தார். இறையருட் சித்தப்படி சிவசம்பு கல்விப் பருவம் வந்ததும் சிறந்த புலவர்களிடம் ஒப்படைக்கத் தந்தை விரும்பினார். இருபாலையிலிருந்த தமது காணியில் சிவசம்புவையும் தாயையும் குடியிருத்தினார். சிவசம்பு நற்கல்விநாடி நல்லூர் சரவணமுத்துப் புலவரிடம் கற்கத் தொடங்கினார். மேலும் அவரின் மாணவரான சம்பந்தப் புலவரிடமும் நன்கு கற்றுத் தேறினார். பிற்காலத்தில் சிவசம்பு பிரகாசிக்கவல்ல மிகக் கடினமான கல்லாடம் பாடல்களையும் ஐயந்திரிபறக் கற்றதால் சிவசம்புவின் புலமை சுடர்விடத் தொடங்கியது. இவ்வாறு கல்வியில் விருப்படைந்த சிவசம்பு ஆறுமுகநாவலரை மானசீகக் குருவாக ஏற்று நாவலர் எங்கு பிரசங்கம் செய்தாலும் அங்கு தவறாது சென்று கேட்பார். இவரின் சிந்தனை நாவலரின் பிரசங்கத்தைக் கேட்பதுடன் அதனை நன்கு கிரகிப்பார். பிரசங்கம் முடிந்ததும் தாம் கிரகித்ததைப் பாடலாக்கி அச்சபையில் தமது பாடலை ஒப்படைக்கும் மரபு இருந்தது. இதனால் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் தமது சமய அறிவை மேம்படுத்தச் சிவசம்புவின் பாடற் சிறப்பு அணிசெய்தது. இதனால் யாவரும் சிவசம்புவின் பெருமையை உணர்ந்தனர்.

## ஆறுமுகநாவலரால் பாராட்டப் பெற்றமை

ஒரு நாள் நாவலர் பிரசங்கஞ் செய்கிறார். அச்சமயம் பெருமழையும் பெய்தது. மழை விட்டதும் பிரசங்கமும் நிறைவடைகிறது. சிவசம்பு அச்சமயம் அவை முன்தோன்றிப்

பணத்தால் பசியைப் போக்க முடியும், துக்கத்தைப் போக்க முடியாது.

பாடிய பாடல் யாவரையும் மகிழ்வித்தது. இதனால் சிவசம்புவின் நிலை ஓங்கியது. பாடல் இதுவாகும்,

"அன்பர்கண் ணீர்மழை யும்சிவ
ஞானமெய் யருள் மழையும்
மன்பிர பந்த மழையும்
பிரசங்க மாமழையும்
கொன்புனை நீலப்புயலின்
மழையும் கொடைமழையும்
இன்பொடு மல்கப் புலோலி மெய்
வாழ்வினி லேறியதே"

இப்பாடலைக் கேட்டதும் நாவலர் "கம்பனுக்குப் பின் ஒரு (சிவ) சம்பனல்லவோ" என்று வாயாரப் பாராட்டினார். (சிவ) சம்பர் பாடிய பாடல் பலவித மழையைக் குறிக்கிறது. இவ்வாறு கூறியதுடன் சிவசம்பரைப் "புலவரே" என அழைத்தார். அன்று முதல் யாவரும் இவரைச் "சிவசம்புப் புலவர்" என அழைத்தனர்.

ஒரு சமயம் புலவர் தமிழ்நாட்டின் "எட்டுக்குடி" என்னுந் தலத்திற்கு தலயாத்திரைக்குச் சென்றார். அத்தலத்தின் பெருமான்மீது "எட்டுக்குடி" பிரபந்தம் பாடி அவ்விடத்திலேயே அரங்கேற்றமுஞ் செய்து பெருமையடைந்தார். அவ்வூர் நிறுவனங்களாலும் போற்றப்பட்டார். சிவசம்புப் புலவர் நாவலர் பெருமான் மீது உயர்வான பக்தி கொண்டு அவரின் தொடர்பால் பேரன்புபூண்டிருந்தார். நாவலர் மறைந்தபோது நாவலரின் இழப்புக் குறித்து மனமுருகிப் பாடிய பாடலை அறிவோம்.

"ஆரூரனில்லை புகலியர்கோ னெல்லை யப்பனில்லை
சீரூரு மாணிக்க வாசக னில்லை திசையளந்த
மேரூரு மாறுமுக நாவல னில்லை பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே"

இப்பாடலைக் கேட்ட சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் மிக உருக்கத்துடன் புலவர்மீது ஒரு பாடல் பாடினார். அச்சமயம் புலவர் நன்றிக்கடனாக "கற்றாரைக் கற்றவர் காமுறுவரென்னும்" தொடரில் தாமோதரம்பிள்ளையின் சிறப்பையும் பாடினார். யாவரும் வியந்தனர். சிவசம்புப் புலவர் பற்பல இடங்களிலும் அறுபதிற்கும் மேற்பட்ட பிரபந்தங்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி இன்புற்றார். புலவர் ஈழநாட்டிலன்றிச் சங்கங்கள் வளர்த்த் தமிழ் நாட்டிலும் பாடித்தமது திறமையை நிலை நாட்டினார். புலவர் தமது திறமையால் இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி அவர்கள்மீது பாடிப்பல பரிசில்களைப் பெற்றார். இவ்விடத்தில் புலவர் தாம் கற்ற "கல்லாடக் கலித்துறை, நான்மணிமாலை, இரட்டைமணி மாலை என்னும் பிரபந்தங்களைப் பாடினார். கல்லாடக் கற்றவனோடு சொல்லாடாதே" என்னும் பழமொழிமூலம் அதன் கடினம் புலப்படும். எவரும் கல்லாடப் பிரபந்தத்தைப் பாடத் துணிய மாட்டார்கள். இதனை எமது புலவர் சிறப்பாகப் பாடிய பெருமையைத் தனதாக்கினார். புகழ் பெற்றார்.

சிவசம்புப் புலவர் உரையாசிரியராகவும் பிரகாசித்தார். மறைசையந்தாதி, திருவேரகயமக வந்தாதி, திருச்செந்தில்யகமவந்தாதி, திருச்செந்தில் திருக்கந்தாதி போன்ற அந்தாதி இலக்கியங்களுக்கும் தஞ்சைவாணன் கோவை வள்ளியம்மை திருமணப்படலம், சேதுபுராணம் போன்ற புராணங்களுக்கும் நன்னூல்விருத்தி, நேமிநாதம், சிதம்பரப்பாட்டியல், யாப்பருங்கலக் காரிகை முதலான இலக்கண நூல்களுக்கும் சிறந்த உரை எழுதினார். மறைசையந்தாதிக்கு இவர் எழுதிய உரையால் தமிழகமெங்கும் புகழ்ந்து பேசப்பட்டார்.

## புலவரின் மாணவர் பரம்பரை

வடமராட்சியில் பெண் புலவர்கள் உட்படப் பலர் தோன்றப் பல பெரும் புலவர்கள் காரணமாயிருந்தனர். அவர்களுள் சிவசம்புப் புலவரும் தம்மாலான பணிகளைச் செய்தார். இவர் பல சந்தர்ப்பங்களில் தமது புலமையின் பேரால் பொன்னாடை போர்த்தி பொன்னும் பொருளும் பல சீர்வரிசைகளுஞ் செய்து பெருமதிப்பளிக்கப் பெற்றார். புலவரிடம் முறையாகக் கற்ற மாணவர் வரிசையில் வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் வைத்திலிங்கம், இலக்கணப் புலி சுன்னாகம் முருகேசு பண்டிதர், ஆவரங்கால் நமசிவாயம்பிள்ளை, புலோலி வடமொழிப் புலவர் கணபதிப்பிள்ளை, இலக்கணக் கொட்டர் குமாரசுவாமிப் புலவர், புலோலி தில்லைநாதப் புலவர், தும்பளை முத்துக்குமாரசாமிக் குருக்கள், பருத்தித்துறை வேல்மயில்வாகனச் செட்டியார், வல்லை அருணாசலம், கரணவாய் ஞானப்பிரகாசதேசிகர், திருஞானசம்பந்த தேசிகர், நமசிவாய தேசிகர், நொத்தாரிசு ஆறுமுகம்பிள்ளை, மந்துவில் வைத்திலிங்கச் செட்டியார், கந்தரமடம் வை.சி.சிவகுருநாதன் கதிரவேலு சின்னையா, சின்னத்தம்பி சுவாமிநாத பண்டிதர் ஆகியோர் அடங்குவர்.

## புலவரின் சிறப்பு

தமிழ்நாட்டையும் ஈழநாட்டையும் அண்மையில் புலவர் பரம்பரையால் இணைத்த உறவுப் பாலமாக அமைந்தவர்களில் சிவசம்புப் புலவருக்கும் பங்குண்டு. இவரின் சிறப்பு தமிழக அரசபெருமக்கள் மடாதிபதிகள், வணிகப்பெருமக்கள் எனப் பலரையும் கவர்ந்தது. முன்னர் ஆறுமுகநாவலர் இவரைப் "புலவர்" என வழங்கியதை எட்டுக்குடி ஆதீனத்தார் வழி மொழிந்தும் கௌரவித்தும் சிறப்புச் செய்தனர்.

இவர் தஞ்சாவூர் நாகப்பா என்பவரிடம் நன்கு இசைகற்றவர். வடமொழியிலும் தேர்ச்சி பெற்றார். இதனால் இவரின் பாடல்களில் வடமொழி வளமும் இசை நுணுக்கமும் புலப்படும். இவர் முருக பக்தி மிக்கவர். அயலூர் கந்தவனக்கடவை முருகன்மீது பதிகம்பாடியவர். வல்லிபுரநாதன் மீது ஒரு பதிகமும் செந்தில்மேய முருகன்மீது யமகவந்தாதியும், எட்டுக்குடிப் பிரபந்தமும் வேறுபலவும் பாடினார்.

## மயில்வாகன வம்ச வைபவம் என்னும் பிரபந்தம்

புலவர் தமது தந்தையின் முதற்தாரத்து மகன் அம்பலவாணர் மீதும் அவரின் மகன் மயில்வாகனம் என்பவர் மீதும் கொண்ட பாச நேசத்தால் அவர்களின் பரம்பரையைப் புகழ்ந்து மயில்வாகன வம்ச வைபவம் என்னும் பிரபந்தத்தைப் பாடினார். இதில் உள்ள 59

*பணத்தை இழந்தால் சொற்ப நட்டம். நேரத்தை இழந்தால் எல்லாமே நட்டம்.*

நெடிய விருத்தப் பாடங்களில் பாட்டுடைத்தலைவனின் பாரம்பரியத்தையும் அவர்கள் சைவத்தையும் செந்தமிழையும் வளர்த்த செழுமையையும் சிறப்பித்தார். மேலும் தாம் சரவணமுத்துப் புலவரிடமும் சம்பந்தப் புலவரிடமும் கற்க ஒப்படைக்கப்பட்டதையும் அதனால் பெற்ற சிறப்பையும் பாடியுள்ளார்.

**புலவரின் சிறப்பினால் பெற்ற பேறுகள்**

புலவர் தமது வாழ்வாதார நோக்கில் தக்க ஈகையாளர்களைப் பாடிப் பல நன்மையடைந்தார். மட்டக்களப்பில் மரவியாபாரஞ் செய்த வல்வையைச் சேர்ந்த கந்தசுவாமி புலவரைச் சந்தித்தபோது சிறுதொகைப் பணத்தைக் கொடுத்து மட்டக்களப்புக்கு வந்தால் ஆயிரம் ரூபா தருவதாகக் கூறினார். பெருநிதியை நோக்கிய புலவர் மட்டக்களப்புக்குச் சென்றார். அன்று கந்தசுவாமி இல்லை. அவரின் மனைவி புலவரை உபசரித்துத் தமது கணவன் கூறியவாக்குப்படி ஆயிரம் ரூபாவைக் கொடுத்தார். அச்சமயம் புவலர் கந்தசுவாமி யையும், எதுவித சலனமுமின்றிக் கணவனின் வாக்கை நிறைவேற்றிய மனைவியையும் புகழ்ந்து பல பாடல்கள் பாடினார்.

**மண்டூர் முருகன் மீது பாடியது**

சிவசம்புப் புலவர் மட்டக்களப்புக்குச் சென்றபோது புகழ்பெற்ற முருகன் ஆலயங்களை யும் தரிசித்தார். மண்டூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றதும் முருகனால் கவரப்பட்டவர் அறங்காவலர்களின் வேண்டுதலுக்காக மண்டூர் முருகனின் பெருமைகளை நன்கறிந்து பிரபந்தம் பாடியுள்ளார். இவர் பாடிய பிரபந்தத்தில் மண்டூர் முத்துக்குமாரசுவாமி

1) இரட்டை மணிமாலையின் சாற்றுக்கவியாக

"வண்டுரு பொன்மலர்த் தண்டலை சூழு மருதவளங்
கண்டுரு மின்மொழி மானார் மழைவளக் கற்புவளந்
தொண்டுரு மன்பர் பணிவள மெல்லாந் துலங்கு தொன்மை
மண்டுரு நற்கதிரைப்பதி யாக்கொள் மயிலிறைக்கே"

இப்பாடல் இந்நூலாசிரியரின் மாணவர் வல்வை ச. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் சொல்லியவை. சிவசம்புப் புலவரின் பிரபந்தப்பெருந்திரட்டு 1901 இல் அச்சுப்பதிவு செய்யப்பட்டது.

2) மண்டூர் முத்துக்குமார சுவாமிகள் பதிகம்

காப்பு - வெண்பா

முத்துக்குமாரன் முதிர்ந்திடுஞ்சீர் மண்டூரிற்
சக்திக் குகன்பதிகஞ் சொற்றுவிக்குஞ் - சுத்தப்பா
லந்திமுகத்தா னகியுருவந் தீர்த்தம
வத்திமுகத்தானருள்

(இப்பதிகம் 1900 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டு வெளிவந்தது.)

(உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் பிரபந்தத்திரட்டு பக்கம் 27)

மேற்கூறிய இரு தொகுதிகளையும் புலவர் மனமுருகிப் பாடி மண்டூர் முருகனுக்குக் காணிக்கையாக்கினாரென மண்டூர் முருகனாலயத்தினரின் தகவல் தெரிவிக்கிறது.

## வல்வைக் கலித்துறை

சிவசம்புப் புலவர் தமது அயலூரான வல்வெட்டித்துறையின் சிறப்புகளை நோக்கிக் கலித்துறை ஒன்றைப் பாடினார். இங்குள்ள வீரர்கள், தீரர்கள், வள்ளல்கள் வாழ்ந்த வல்வை என்றுமே பெருமைக்குரியது. இவ்விடத்தில் வீரர்களின் நினைவாக உருவாகிய ஊர்கள் உள்ளன. பழைய வீரர்வரிசையில் சமரபாகுதேவன், வெற்றிப்பாகுதேவன், கல்லிடைத்தேவன் முதலானோர் அடங்குவர். இதேபோல வள்ளல்களாக ஆண்களுக்கு நிகராக பெண்களும் சிறப்பித்தனர். வள்ளல் தன்மை கொண்ட மட்டக்களப்பு மரவியாபாரி கந்தசுவாமியையும் அவரின் கொடை வழிவந்த பதிவிரதையையும் முன்னர் அறிந்தோம்.

## புலவரின் இறுதிக்காலம்

நாமகளும் திருமகளும் ஒரு வீட்டில் தங்குவதில்லை என்னும் கூற்று சிவசம்புப் புலவரின் வாழ்விலிருந்து அறியலாம். நாமகளின் ஆதரவால் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடிய புலவர் யாவராலும் போற்றப்பட்டார். பொன்னாடையும் பொன்னும், பொருளும் நிறையத் தந்து பெருமைப்படுத்தினர். இதனைப் புலவர் தமது பிற்காலத் தேவையைக் கருதாது நலிவுற்றோருக்கு வாரி வழங்கிவிட்டார்.

பிற்காலத்தில் முதுமையும், நோயும், தனிமையும் வாட்டின. இதனைப் புலவர் தமது மாணவன் சந்தமடம் சுவாமிநாத பண்டிதரிடம் தெரிவித்தார். அவர் வந்து புலவருக்கான அவசிய பணிவிடைகளைச் செய்ததுடன் தமது நண்பரும் புலவரின் மாணவனுமாகிய வை.சி. சிவகுருநாதனிடமும் தெரிவித்தார். இதன்பேறாகப் புலவர் ஆறுதலடைந்தார். இருவரையும் வாழ்த்திய புலவர் பாடல்களால் நன்றி தெரிவித்தார்.

## புலவர் கண்ணொளி பெற்றமை

பிற்காலத்தில் கண்ணொளி மங்கிவிட்டது. தாம் தவறாது வணங்கிவரும் கந்தவனக் கடவை முருகனிடம் பாடி முறையிட்டார். புலவரின் பாடலின் சிறப்பும் கந்தவனப் பெருமானின் பேரருளும் மலர்ந்தது. புலவர் கண்ணொளி பெற்றார். தொடர்ந்து பாடிய புலவர் முருகனுக்கு நன்றியாக "கண்ணொளியைத் தந்தாய் மறப்பேனோ" என்று பாடிய பாடலில் தமது புலமையை நிலைநாட்டினார்.

புலவர் தமது 81ஆம் வயதில் 29.09.1910 அன்று காலமானார். இறுதிக் கிரியைகளின்போது புலவரின் மாணவர் யாவரும் கூடிவந்து பிரிவுக்கு வருந்திப் பாடல்கள் பாடி நினைவு கூர்ந்தனர்.

சிவசம்புப்புலவர் இளமையிற்கல்வியை வளர்த்துச் சிலையில் எழுதியவாறு பல அரிய செயல்களைச் செய்தார். தமது புலமையால் யாவரையும் அரவணைத்தார். தமிழ் வளர்க்கும் பணிக்கு மேலாகச் சமயத்தொண்டை நாடிப்பல திருத்தலங்களில் பக்தியுடன் பாடியும் இன்பங் கண்டார். இறுதிக் காலத்தில் தமது கண்ணொளியை இழந்தபோது கந்தவனப் பெருமானை வேண்டிப் பாடிக் கண்ணொளி பெற்றார். இதனால் புலவரின் பாடல் மகிமை ஓங்கியது. கந்தவனப் பெருமானின் இறைசக்தி சித்திபெற வைத்தது. (புலவர் கண்ணொளி பெற்ற செய்தி ஆலய வரலாற்றின் ஆவணப்பதிவாகியது. இத்தகவல்கள் கந்தவனப்பெருமானின் பேரருள் பற்றி ஆலய அறங்காவலர் பெருமையுடன் நாளேடுகளில் தொடர்ந்து வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.)

*அனுபவத்தைப் பெறும்போதுதான் வாழ்வின் சிக்கல் புலப்படுகிறது.*

(தொடர் -37)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

இந்துக்களிடையே எத்தனையோ வேறுபாடுகள் உண்டு. சைவம், வைணவம் என்று பிரிவுகள் உண்டு. ஆயிரக்கணக்கான சாதிகள் உண்டு. சாதிகளுக்குள்ளேயே உட்பிரிவுகள் உண்டு.

இத்தனை வேறுபாடுகளுக்கு மத்தியிலும் இவர்கள் அனைவரும் தங்களை இந்துக்கள் என்றே அழைத்துக்கொள்ளுகிறார்கள். வணங்குகின்ற தெய்வங்களிடையே வித்தியாசம், வாழ்க்கைப் பழக்கவழக்கங்களில் வித்தியாசம், செய்கின்ற சடங்குகளில் வித்தியாசம் இப்படி எவ்வளவோ வித்தியாசங்களுக்கு மத்தியிலும், தாங்கள் அனைவரும் இந்துக்கள் என்கிற உணர்ச்சி இவர்களுக்கு எப்படி ஏற்படுகிறது.

எந்த ஒருவனும் இந்து மதத்தைத் தோற்றுவிக்கவில்லை. இதுமட்டும்தான் இந்துக்கள் பின்பற்ற வேண்டிய சாஸ்திரம் என்று எந்த ஒரு புத்தகமும் இல்லை.

பகவத்கீதையை ஏற்றுக்கொண்டவனும் தன்னை இந்து என்று சொல்கிறான். வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றுக்கு விசுவாசமாக இருப்பவனும் தன்னை இந்து என்று சொல்லிக்கொள்கிறான். புராணக் கதைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்து கொண்டிருப்பவனும் இந்துதான்.

நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் இந்து மதத்தின் சாரமே அடங்கியிருக்கிறது எனச் சொல்லுகின்ற இந்துக்களும் இருக்கிறார்கள். தேவாரமும் திருவாசகமும் படித்தால் போதும், அதுவே இந்து மதத்தின் எல்லாம் என்று சொல்லுகின்றவர்களும் இருக்கிறார்கள்.

கோவிலுக்குப் போகிறவனும் இந்துதான்; போகாதவனும் இந்துதான்.

இப்படி யோசித்துப் பார்த்தால் ஓர் இந்துவை, இந்துவாக அடையாளம் காட்டுவது எது என்று சொல்லுவது கடினம்.

மதக் குறிகளாலும் அவனை அடையாளம் காட்ட முடியாது. யோசித்துப் பார்த்தால் இந்து மதம் ஓர் அவியல்போலத் தோன்றும். குழப்பம் போலத் தோன்றும்.

இவற்றுக்கு அப்பாலும் ஒருவன் தன்னை இந்து என்று காட்டிக்கொள்ள முடியும். காரணம் என்ன?

அனாதியான மதம் இந்து மதம். எப்போது தோன்றியது என்று எவருக்கும் தெரியாது. எப்படி வளர்ந்தது என்றும் எவருக்கும் தெரியாது.

இமயம் முதல் குமரி வரை அதற்கு அப்பாலும் பரவி உள்ள பரப்பில் வாழ்கின்ற மக்களில் பெரும்பாலோர் இந்துக்கள். புத்த மதமும், ஜைன மதமும் வேறு மதங்கள்போல் தோன்றினாலும் இவர்களும் இந்து மதப் பழக்க வழக்கங்களையே பெரும்பாலும் கடைப்பிடிப்பதைப் பார்க்க முடிகிறது. இந்த இரண்டு மதங்களும் இந்து மதத்தின் பிரிவுகள் போலவே ஏற்கப்பட்டுவிட்டன.

இதை எல்லாம் வைத்து யோசித்துப் பார்த்தால் இந்திய மண்ணில் தொன்று தொட்டு வளர்ந்து வந்திருக்கின்ற ஆன்மிக

*கடவுளைத் தொழு, ஆனால் உழைப்பதை நிறுத்தாதே.*

சிந்தனையே இந்து மதம் என்று அழைக்கப் படுகிறது என்பது தெளிவாகும். இந்த ஆன்மிக உணர்வின் ஜீவ ஓட்டம் இந்து மதத்தின் எல்லாப் பிரிவினரிடையேயும் ஓடிக்கொண்டிருக் கிறது. ஆகவேதான் எத்தனையோ வித்தியாசங் கள் இருந்தாலும், இந்துவை இந்துவாக அடையாளம் காணமுடிகிறது. அவனுடைய புறத்தோற்றங்களுக்கும், நடை உடை பாவனை களுக்கும் அப்பால் அவனை இயக்கிக்கொண் டிருக்கும் சக்திதான் இந்துமதம்.

நாத்திகம் பேசுகிறவனும் ஆத்திகம் பேசுகிறவனும்கூட, இந்து மதத்தில் பிறந்து விட்டால் இந்து நடைமுறைகளுக்கு ஆட்பட்ட வர்களாகவே இருக்கிறார்கள்.

இந்தியப் பிரதமராக இருந்த நேரு சமயவாதியாகக் காட்டிக்கொள்ளவில்லை. கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா என்பதைப் பற்றி சந்தேகப்பட்டவர். சடங்குகளில் அவருக்கு நம்பிக்கை இருந்ததில்லை. ஆனால் அவர் எழுதி வைத்த உயிலில், தன்னுடைய இறப் பிற்குப் பின்னர் உடல் எரிக்கப்பட்டு, அதன் அஸ்தி இந்தியாவில் உள்ள முக்கிய நதி களிலும் வயல் வெளிகளிலும் தூவப்பட வேண் டும் என்று எழுதி வைத்தார். தனது இறப்பிற்கு பின்னர் எந்தச் சடங்கும் செய்யக்கூடாது என்று உயிலில் திட்டவட்டமாகக் குறிப்பிட்ட நேரு, இந்திய நதிகளில் தன்னுடைய சாம்பல் கரைக்கப்பட வேண்டும் என்று வேண்டினார். அவர் எந்த நோக்கத்தில் அதைச் சொல்லி இருந்தாரோ, இறந்தவர்களின் அஸ்தியை புனித நதிகளில் கரைப்பது என்பது இந்துக்களின் பழக்கம். இம்மாதிரியான உணர்ச்சிகள்தான் ஓர் இந்துவை, இந்து என்று அடையாளம் காட்டுகிறது.

கலைகளைத் தெய்வீகமாகக் கண்ட மதம் இந்து மதம். அழகையே கடவுளாக ஆராதிப்பது இந்துக்களின் பண்பு. வாழ்க்கை இரசனையினையும் மத உணர்வினையும் ஒன் றாக இணைத்து இரசித்தவர்கள் இந்துக்கள்.

இந்து மதத்தில் தெய்வங்கள் மனிதர் களாக வாழ்கிறார்கள். மனிதர்கள் போலவே காதல் வயப்படுகிறார்கள். மனிதனே தெய்வம் என்கிற கருத்தை வாழ்க்கை நுட்பமாக்கி கதை களை உருவாக்கினார்கள் இந்துக்கள். அத னால்த்தான் ஓர் இந்து தன்னுடைய வாழ்க்கை நோக்கிலேயே ஓர் இந்துவாகி விடுகிறான். வேதங்களும் சாத்திரங்களும் மிகவும் ஆழ மான விடயங்கள் பற்றிய ஆராய்ச்சிகளாக இருந்ததால், வேத பண்டிதர்கள் மட்டுமே அதில் பாண்டித்தியம் பெற்றவர்கள் ஆனார்கள். ஒரு சராசரி இந்து சாதாரண நடைமுறைகளைக் கடைப்பிடிக்கிறவன் ஆனான். அவன் மனைவி மக்களுடன் இன்பமாக குடும்பம் நடத்துவதே மதமாயிற்று.

ஒரு குழந்தையின் பிறப்புக்கூட மதத் தொடர்பான ஒரு நிகழ்ச்சி ஆயிற்று. குழந் தையைத் தொட்டிலில் இட்டான். காப்பு போட் டான். அதையே ஒரு விழாவாகக் கொண்டாடி னான்.

திருமண வைபவங்களில் அழகான சடங்குகளை அமைத்தான். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் இரசனையை இந்துக் கள் போற்றினார்கள். அவர்களின் வாழ்க்கைக் கண்ணோட்டம் மிகவும் விசாலமானதாக இருந் தது. உடல் இன்பத்தைக்கூட இரசனை உணர் வோடு அணுகினார்கள்.

காளிதாசன் குமார சம்பவம் என்கிற தன்னுடைய காவியத்தில், பரமசிவன் பார் வதிக்கு காம சுகத்தை எப்படி அனுபவிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்ததாக எழுதி இருக்கிறார். காம உணர்ச்சி கூட தெய்வீக நிலையில் வைத்துப் போற்றப்பட்டது என அறியமுடிகிறது. வாழ்க்கை வாழ்வதற்கே என் கிற கோட்பாடு இந்து மதத்தின், முக்கிய

*இடைவிடாத ஊக்கத்திற்கு எந்தத் துன்பமும் இல்லை.*

கோட்பாடுகளில் ஒன்றாயிற்று. அதனால்த்தான் இந்து மதம் வாழ்வியல் மதமாக இன்றைக்கும் விளங்கி வருகிறது.

இந்து மதத்தின் உண்மையான அழகைப் புரிந்து கொள்ளாமல் இந்துக்களில் சிலர்கூட "இந்துமதம் குழப்பமான மதம்" என்கிற கருத்துக்கொண்டவர்களாக இருந்து வருகிறார்கள். சுவாமி விவேகானந்தர் சொல்லி உள்ள வாசகத்தை அவர்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

"கங்கைக் கரையிலே அமர்ந்து கொண்டு தண்ணீர் வேண்டும் என்பதற்காக ஊற்று தோண்டுகிறவன் முட்டாள். வைரச் சுரங்கத்தின் அருகில் அமர்ந்து கொண்டு கூழாங் கற்களைத் தேடிக்கொண்டிருப்பவனும் முட்டாளே".

இந்துக்கள் வாழ்க்கையைப் பற்றி எதைத் தெரிந்துகொள்ள விரும்பினாலும் வேறு எங்கேயும் போய்த் தேட வேண்டியதில்லை. இந்து மதம் சார்புடைய ஏதோ ஒரு நூலில் அவர்களுக்குத் தேவையானது கிடைக்கும்.

வாழ்க்கையில் எல்லாத் தன்மைகளையும் இந்துமதம் ஆராய்கிறது. அப்படி ஆராய்கின்றபோது மாறுபட்ட கருத்துக்கள் தோன்றுவது இயற்கை. மாறுபாடுகளாகத்தான் அவற்றைக் கொள்ளவேண்டுமே தவிர, முரண்பாடுகளாகக் கருதக்கூடாது.

எளிய நீதி, வாசகங்களில் கூட முரண்பாடுகளின் தோற்றம் உண்டு.

"ஐயம் இட்டு உண்" என்றும் சொன்னார்கள். "ஏற்பது இகழ்ச்சி" என்றும் சொன்னார்கள். "பிறர்க்குக் கொடு" என்று சொன்னவர்கள், பிறரிடம் வாங்காதே என்றும் சொல்லி இருக்கிறார்கள். ஏற்பது இகழ்ச்சி என்கிற கோட்பாட்டினை எல்லோரும் கடைப்பிடிக்க ஆரம்பித்து விட்டால், பிறர்க்குக் கொடுப்பது சாத்தியம் இல்லாமல் போய்விடும். இதனை அடிப்படையாகக் கொண்டு கம்பன், "கொல்வாரும், கொடுப்பானும் இல்லாத கோசலம்" என்று பாடுகிறார்.

"பிச்சை புகினும் கற்கை நன்றே" எனவும் சொன்னார்கள். ஏற்பது இகழ்ச்சி என்றான். கற்பதற்காக பிச்சை எடுப்பது இகழ்ச்சி ஆகாதா என்கிற கேள்வி எழும். பிச்சை எடுப்பது இகழ்ச்சிதான். ஆனால் கல்வி கற்பதற்காக பிச்சை எடுக்க வேண்டும் என்றால் அதற்குத் தயங்காதே என்கிறது. "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிற வாசகம். இந்த வாசகம் கல்வியின் முக்கியத்துவத்தை கூறி நிற்கிறது.

நீதிகள் எல்லாச் சமயங்களிலும் ஒரே மாதிரியாக இருந்து விடுவதில்லை. எந்த நீதியை எப்போது கடைப்பிடிப்பது சிறந்தது என்பதை ஒவ்வொருவரும் தன் அறிவைக் கொண்டுதான் முடிவு செய்ய வேண்டும்.

கொல்லுவது பாவம்தான். ஆனால் போரில் எதிரிகளைக் கொல்லவேண்டி இருக்கிறது. குருஷேத்திரப் போர் பங்காளிச் சண்டை. சகோதரர்களை, நண்பர்களை, வித்தை கற்றுக்கொடுத்த ஆசான்களை எப்படிக் கொல்வது என்று அர்ச்சுனன் தயங்குகிறான். அதர்மத்தை அழிக்க கொல்லுவது பாவம் இல்லை என்று கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்கு கீதா உபதேசம் செய்கிறார். போர்க்களத்தில் கொலை நியாயப்படுத்தப்படுகிறது. அதற்காக கொல்லுவது பாவம் இல்லை என்று ஆகி விடாது.

எனவேதான் நீதிகளைக் கடைப்பிடிக்கும்போது எந்த நீதியை எப்போது கடைப்பிடிப்பது என்பதை முடிவு செய்கின்ற உரிமையினை இந்துமதம் தனி மனிதனுக்கு அளித்து இருக்கிறது.

(தொடரும்...

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*

# ஆற்றங்கரை அமர்ந்த வேல்

– திரு செல்லையா பாலச்சந்திரன் அவர்கள் –

ஏகனாய் இலங்கும் வேல்
அநேகனாய்த் துலங்கும் வேல்
வேகத்தை அடக்கும் வேல்
வெவ்வினையை வேரறுக்கும் வேல்
ஞானத்தை நல்கும் வேல்
நலமெலாம் அருளும் வேல்
ஊனத்தை நீக்கி உள்ளொளி நல்கும் வேல்
வேதத்தின் வடிவாகி வேதனைகள் போக்கும் வேல்
சேந்தன் சிறைமீட்ட வேல்
செந்தூரில் நின்றாடும் வேல்
ஆழ்ந்து அகன்ற வேல்
ஆனந்தமான வடிவேல்
அள்ளி அள்ளி அமுதூட்டும் அன்னவேல்
அஃது எங்கள் சொர்ணவேல்
சோதனைகள் பல செய்து - எமக்கு
சாதனை அருளும் வேல்
எந்நிதியும் தருவேல் சந்நிதி வேல்
பூவரச மரத்தடிப் புனிதவேல்
காவடிகளுடன் ஆடும் வேல்
கற்பூரக் கரகத்துடன் கலந்தாடும் வேல்
ஆவணிப் பூரணையில் தீர்த்தமாடும் வேல்
ஆனந்த மயமான வேல்
ஆதிவேல் ஆருரனுக்காக அலைந்தவேல்
மாமருந்தா மாறும் வேல்
மாணிக்கச் சோதிவேல் - பக்தருக்கு
விருந்தான பவள வேல்



கூர்த்த மெஞ்ஞான வேல்
ஆர்த்த பிறவியை அறுக்கும் வேல்
ஆனந்தமான வேல்
அஞ்ஞானம் போக்கும் வேல்
மெஞ்ஞானம் அருளும் வேல்
எஞ்ஞான்றும் உறுதுணையாக உள்ள வேல்
மந்திரமான வேல்.
வானவர் போற்றும் வேல்
சுந்தரமான வேல்
துதிக்கப்படும் வேல்
தந்திரமான வேல்
சரவணத்தான் கைவேல்
எண்ணத் தக்க வேல்
இருமைக்கும் உள்ள வேல்
பராவணமான வேல்
பாவமறுக்கும் வேல்
தராவணமான வேல்
தத்துவமான வேல்
அரா வணங்கும் வேல்
ஆணவம் அழிக்கும் வேல்
பூசிக்க இனிய வேல்
புண்ணியர் போற்றும் வேல்
பேச இனிய வேல் பெரும் தவத்தோர்க்கு
எல்லாம் ஆசை கெடுக்கும் வேல்
ஆற்றங்கரை அமர்ந்த வேலே!

*முயற்சி கானல் நீர் அல்ல. அது வெற்றி என்கிற ஜீவநதிக்கு அழைத்துச் செல்லும்.*

# கதிர்காம யாத்திரை -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

-செல்வி சி. நிலா அவர்கள்-

ஐயா கதிர்காமம் வரும் காலங்களிலெல்லாம் தான் சந்நிதியில் இருந்து புறப்பட்டு கதிர்காமத்தில் நிற்கும் நாள் வரை தங்கி நிற்கும் ஏற்பாட்டினை கதிர்காமத்திலுள்ள இந்து யாத்திரிகர் விடுதியில் ஒழுங்குசெய்துவிட்டுத்தான் தனது பயணத்தை ஆரம்பிப்பார். அத்தோடு ஐயாவின் மன எண்ணப்பாடு தான் தனியே வந்தால் ஒரு மரத்திற்குக் கீழே இருந்து விடுவேன். ஆனால் தன்னோடு கூட்டிக்கொண்டு வருபவர்களை அப்படி விடக்கூடாது. அவர்கள் அனைவருக்கும் சகல வசதிகளையும் செய்து அவர்கள் மனநிறைவோடு திரும்ப வேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்துவார். அவர் கதிர்காமத்தில் தங்கி நிற்கும் காலங்களில் தன்னோடு வருபவர்களின் உணவு, தங்கும் வசதி மற்றும் என்னென்ன தேவையோ அவற்றை நிறைவேற்றக்கூடிய வகையில் சகல விடயங்களையும் திட்டமிட்டுச் செய்வார்.

அதனடிப்படையில் எம் அனைவரையும் இந்து யாத்திரிகர் விடுதியில் தங்குவதற்குரிய ஒழுங்கினை மேற்கொண்டிருந்தார். செல்லப் பிள்ளையார் ஆலய தரிசனத்தை நிறைவு செய்த பின் இந்து யாத்திரிகர் விடுதியை அடைந்தோம். எனக்கோ புதிய இடம். ஆனால் ஐயா பல முறை வந்து போகின்றபடியால் எமது பேருந்து விடுதியில் உள் நுழைந்ததும் விடுதிக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் எம்மை அணுகி ஐயாவைப் பார்த்து வணங்கி வாருங்கள் சுவாமி. நீங்கள் கேட்டுக்கொண்டபடி சகல வசதிகளும் செய்திருக்கின்றோம் என்று கூறி நாம் தங்கி நிற்கின்ற அறைகளை வழங்கி எம்மை உள்ளே அழைத்துச் சென்றார்கள்.



உன்னைத் தாழ்த்திப் பேசும்போது நீ அடக்கமாய் இருத்தல் பெரிய சாதனையாகும்.

அந்தவகையில் எம்மோடு வந்த ஆண்களுக்கு ஒரு இடமும் பெண்களுக்கு ஒரு இடமும் ஒழுங்கு செய்திருந்த காரணத்தால் நாம் எமக்குரிய இடத்தில் கொண்டுபோன பொருட்களை வைத்துவிட்டு சிறிது நேரம் ஓய்வெடுத்தோம். ஐயாவுக்கென ஒரு அறையை ஒழுங்கு செய்தபடியால் எங்களை எமக்குரிய இடத்தில்விட்டு ஐயா தனது இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டார். ஐயா எம்மோடு இருக்கும்வரை சுதந்திரமாகச் செயற்பட இயலாது. ஆனால் ஐயா எம்மைவிட்டு அகன்றதும் எமது மன எண்ணத்தை ஒருவர்க்கொருவர் பகிர்ந்து கொண்டிருந்தோம்.

சிறிது நேரத்தில் எமக்குரிய காலை உணவு பொதி செய்யப்பட்டு எமக்கு வழங்கப் பட்டது. அத்துடன் ஒரு வாளியில் பால் தேநீருடன் எம்முடன் வந்திருந்த தெய்வேந்திர அண்ணன் கொண்டுவந்து தேநீரையும் குடியுங்கள் சிறிது நேரத்தில் ஐயா வருவார் என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். நாம் அனைவரும் காலை உணவினை முடித்த கையோடு ஐயா வந்து எல்லோரும் ஆலயத்திற்குப் போகவேண்டும். ஆனால் இப்போது வழிபாடு செய்வதற் கல்ல. நீங்கள் தங்கி இருக்கின்ற இடத்தையும் ஆலய சூழலையும் மற்றும் ஆலயத்துக் குப் போகின்ற பாதையையும் உங்களுக்குக் காட்டினால்த்தான் நீங்கள் நினைத்த நேரம் போய் வரலாம் என்று கூறி எம்மை அழைத்துச் சென்றார்.

ஐயா கூறியதும் சரிதான். ஏனென்றால் இந்து யாத்திரிக விடுதியிலிருந்து சிறிது தூரம் நடந்து சென்றுதான் கதிர்காம ஆலயத்தை அடைய வேண்டும். பாதை தவறாமல் போகக் கூடிய வகையில் நேர்ப் பாதையூடாக எம்மை அழைத்துச் சென்று ஆலய வளாகத்தில் ஐயா விட்டுவிட்டு அருகே இருந்த ஒரு மேடையில் இருந்துவிட்டார். எமக்கு புதிய இடம் என்றபடியால் தெய்வேந்திர அண்ணனை ஆலய சுற்றாடலையும் அருகில் உள்ள தெய்வானை அம்மன் ஆலய சுற்றாடலையும் காட்டி அழைத்து வருமாறு கூறியதன் பிரகாரம், தெய்வேந்திர அண்ணனும் எம்மோடு வந்து பல இடங்களையும் காட்டினார்.



ஊக்கம் இல்லாமல் எந்த ஒரு பெரிய காரியமும் சாதிக்கப்பட்டது கிடையாது.

ஆலய சூழலைப் பார்வையிட்டபொழுது ஒரே வெண்மை நிற ஆடையணிந்த பௌத்த மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஒரு பக்கம் அர்ச்சனைப் பொருட்களை கையில் ஏந்தியபடி நீண்ட வரிசையில் நின்று அர்ச்சனை செய்வதற்குக் காத்து நிற்கும் மக்கள் கூட்டத்தையும் பார்த்ததும் எனக்கு ஒரே ஆச்சரியம். ஆலயமோ ஒரு சிறிது. ஆனால் வணங்க வரும் அடியார் கூட்டமோ எண்ணிலடங்கா. அத்தனை பேரும் கதிர்காமக் கந்தன்மீதுகொண்ட பக்தி என்றே சொல்ல வேண்டும். இதில் மற்றொன்றையும் கவனித்தேன். பெரிய தட்டுக்களில் அர்ச்சனைப் பொருட்களோடு வருபவர்கள்கூட வரிசையில் போய்நின்று ஒழுங்காக வருவதை யும் நான் முந்தி, நீ பிந்தி என்ற வகையின்றி நிற்பதையும் காணக்கூடியதாக இருந்தது.



ஆனால் எம் இடங்களில் உள்ள ஆலய தரிசனத்தை நான் எண்ணிப் பார்த்தபொழுது நாம் எங்கேயோ நிற்கின்றோம் என்பது எனக்குப் புரிந்தது. இவைகளைப் பார்வையிட்ட பின் ஆலயத்தை விட்டு ஐயா இருந்த மேடையை நோக்கியபொழுது ஒரே சிவப்பு நிற உடையணிந்த அடியார் களைக் காணக்கூடியதாக இருந்தது. இவர்கள் எல்லாம் யார் என்று வினாவியபொழுது இவர்கள் அனைவரும் பாத யாத்திரையாக யாழ்ப் பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம் என்ற அனைத்து இடங்களில் எல்லாம் இருந்து வந்தவர்கள். அவர்கள் அனைவரும் இந்தப் பரந்த மேடையில் தமது மூட்டை முடிச்சுகளோடு தங்கி இருந்து கதிர்காம உற்சவம் (தீர்த்தம்) முடிந்த கையோடு வெளிக்கிட்டு விடுவார்கள் என்று ஐயா கூறியதும் நான் மலைத்துவிட்டேன். இவ்வளவு அடியார் கூட்டமா. இவர்கள் உணவுகளுக்கு என்ன செய்வார்கள்? என்ற வினா என்னுள் எழுந்தது. அதற்கு ஐயா



இரண்டு மூன்று நாட்கள் இவ்விடத்தில்தான் நிற்கப் போகின்றீர்கள். அப்போது பார்க்கத்தான் போகின்றீர்கள். சரி இப்போது நாம் தங்கியுள்ள இடத்துக்குப் போவோம் என்று கூறி அழைத் துச் சென்றார்.

*கலைகளில் ஈடுபாடு உடையவன் கவலைகளை மறக்கிறான்.*

விடுதியை அடைந்தபொழுது அங்கேயும் அன்னதானச் செயற்பாடு இடம்பெற்றுக்கொண்டு இருந்தது. இங்கேயும் உணவு வழங்குகின்றார்களா என்று கேட்டபொழுது, வவுனியா சிவபூமி அமைப்பால் கதிர்காம உற்சவ காலங்களில் அன்னதான ஒழுங்கு வருடா வருடம் மேற்கொண்டு வருகிறார்கள். இவற்றிற்கு பொறுப்பாக வவுனியாவில் வசிக்கும் திரு ஞானசுந்தரம் என்னும் பெரியவர் கடமை ஆற்றுகின்றார். அவர் வவுனியாவில் இருந்து பல உதவியாளர்களையும், மலையகத்தைச் சேர்ந்த தொண்டர்களையும் இணைத்து இப் பெரிய பணியை ஆற்றுகின்றார். சரி. வாருங்கள் அவர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றேன் என்று கூறிய ஐயா முதலில் விடுதி முகாமையாளரான திரு சிவநாதன் அவர்களையும் அவரோடு இணைந்து பணியாற்றுபவர்களையும் அறிமுகப்படுத்திவிட்டு, அன்னதான செயற்பாடு நடைபெறும் இடத்துக்கு எம்மை அழைத்துச் சென்றார். ஐயாவைக் கண்டதும் திரு ஞானசுந்தரம் ஐயா எழுந்துவந்து ஐயாவின் பாதம் பணிந்து சுக நலம் விசாரித்து எம் அனைவரையும் பார்வையிட்டு நீங்கள் அனைவரும் இங்கிருந்து



போகும்வரை உங்களுக்குரிய தேவைகளை உடனுக்குடன் செய்து தருவேன் இது உங்கள் இடம் ஏனெனில் நீங்கள் சுவாமியுடன் வந்திருக்கிறீர்கள் என்று கூறி அருகில் நின்றிருந்த பெரியவர் ஒருவரை மணியம் என அழைத்து இவர்கள் எந்நேரத்திலும் என்ன கேட்டாலும் செய்து கொடுக்கும்படி கூறினார். ஐயாவும் தெய்வேந்திரம் அண்ணனிடம் ஏதும் தேவையென்றால் சொல்லுங்கள் அவர் உங்களுக்கு நீங்கள் இருக்கும் இடத்திற்கே கொண்டுவந்து தருவார்கள். காலையும் இரவும் உணவு உங்கள் இடத்திற்கே வரும். மத்தியானம் மட்டும் சப்பாடு நடைபெறும் இடத்திற்கு செல்ல வேண்டும். சரி, நீங்கள் அனைவரும் உணவு அருந்தியபின் உங்கள் அறைக்குச் சென்று ஆறுதலாக இருங்கள். ஐந்து மணியளவில் ஆலய உற்சவம் பார்க்க வேண்டும் என்று கூறி என்னை மணி அண்ணனுக்கும் ஞானசுந்தரம் ஐயாவுக்கும் “பெண்களுக்கு இவர்தான் பொறுப்பு” என அறிமுகப்படுத்தி ஆண்களுக்கு தெய்வேந்திரம் அண்ணரிடம் சொல்லி என்ன கேட்டாலும் செய்து கொடுங்கள் என்று ஐயா கூறியதும் எங்கள் அனைவருக்கும் ஒரே ஆச்சரியம். ஐயாவைப் போகும் இடமெல்லாம் எவ்வளவு சிறப்போடு வரவேற்கிறார்கள். நாம் அவர் அருகில் இருப்பதால் அவரது பெருமை எமக்குத் தெரியவில்லை. பிற இடங்களுக்கு ஐயாவோடு செல்வதன் மூலமே அறியக்கூடியதாக உள்ளது. இன்னும் என்ன அதிசயத்தைக் கதிர்காமக் கந்தன் காட்ட இருக்கின்றானோ எனும் சிந்தனையுடனும் இரவு கதிர்காம உற்சவம் காணவேண்டும் எனும் ஆவலுடன் தங்கும் அறையை நாடிச் சென்றேன்.

(தொடரும்...

*நட்பு என்ற புனிதமான உணர்ச்சி இனிமையானது, நிலையானது, விசுவாசம் நிறைந்தது.*

# கல்லோடைக் கந்தனே! செல்வச்சந்நிதியானே!

வீரவாகு தேவரன்று
வல்லிநதிக் கரையில்
வேல்பதித்து வணங்கிய தலம்
செல்வச் சந்நிதி.

யோகிகளும் முனிவர்களும்
வணங்கி முத்தி அடைந்த திருத்தலம்
கல்லோடைக் கந்தன் திருச்
செல்வச் சந்நிதி.

கந்தர்வன் ஐராவசு
வியாழனின் சாபத்தினால்
யானையாகப் பிறந்து
சாபமும் நீங்கினான்.

கந்தர்வன் ஐராவசு
சிகண்டி முனிவர் சொற்படி
செல்வச் சந்நிதி வந்து
சமாதியு மானான்.

வீரவாகு ஐராவசு
வணங்கிய இத்தலத்தில்
தேவலோக கதிர்காமர்
நாளும் பூசித்தார்.

முருகன் கொடுத்த வேலை
கருவறையில் வைத்து
வாய்கட்டி கதிர்காமர்
பூசைகள் செய்தார்.

மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும்
ஒருங்கே அமைந்த இங்கு
ஆவணிப் பௌர்ணமியில்
தீர்த்தோற்சவம் நடக்கும்.

– திரு சி. சிவானந்தராஜா –

பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

